Registered as a Newspaper பக்கங்கள் 8 விலை ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 புரட்டாதி 21 07-10-94 வெள்ளிக்கிழமை ஓசை 231

## குடாநாட்டில் மலேரியா நோய் பாரியளவில் பரவும் அபாயம்

நுளம்பை அழிக்கும் மருந்துகள் குறைந்தது இன்னும் பத்து நாட்களில் வந்துசேராது விட்டால் யாழ். குடாநாட்டில் பாரிய அளவில் மலேரியா நோய்த் தாக்கம் ஏற்படுவது தவிர்க்க முடியாது என மலேரியா தடை இயக்கத்தின் பிராந்திய வைத்திய அதிகாரி டாக்டர் க. ச. சிவகுரு தெரிவித்துள்ளார். சென்ற சில நாட்களில் பெய்த மழையினால் நுளம்புகளின் பெருக்கம் தவிர்க்க முடியாத அளவு பெருகியிருப்பதாகவும் இவற்றை கட்டுப்படுத்துவதற்கான மலத்தியோன் கடந்த ஆறு மாத காலமாக கொழும்பில் இருந்து கொள்வனவு செய்ய முயற்சி எடுத்த போதும் மலத்தியோன் இறக்குமதி நிறு (8-ம் பக்கம் பார்க்க)

## வவுனியா - யாழ் போக்குவரத்து புலிகளுடனான பேச்சில் ஆராயப்படும்

### பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெறும் பேச்சுவார்த்தையில் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான சீரான போக்குவரத்திற்கு நடவடிக்கை எடுப்பது பற்றி முடிவு காணப்படும் என பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் வவுனியாவில் வைத்து இதனை அவர் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தின் தடை முகாமிலும் விடுதலைப் புலிகளின் சோதனை முகாமிலும் மட்டும் இறங்கி ஏறவேண்டிய நிலை தொடர்ந்தாலும் நேரடியாக யாழ்ப்பாணம் வரையில் சிலமணி நேரத்தில் செல்லக்கூடிய நிலையை உருவாக்குவோம்

இதற்காக வவுனியாவிலிருந்து இலங்கை போக்குவரத்து சபை பஸ்களும் தனியார் பஸ்களும் சேவையில் ஈடுபடுத்துவது பற்றி ஆராய்வோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (தி. இ)

## விபத்தில் சிறுவன் பலி

பருத்தித்துறை இறங்குதுறைப் பகுதியில் நேற்று நடைபெற்ற துவிச்சக்கர வண்டி மினிபஸ் மோதலில் சிறுவன் பலியானார்-

பிற்பகல் 3 55 மணியளவில் இடம்பெற்ற இவ் விபத்தில் சைக்கிளில் வந்துகொண்டிருந்த சீவரத்தினம் ரதிக்குமார் (வயது 9) என்ற சிறுவனே பலியானவராவார்-

இவர் பலாலியிலிருந்து இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து பருத்தித்துறைப் பகுதியில் வசித்து வராவார்- [யோ]

## சமாதானத்திற்கான முகவுரையே இதுவரை நடைபெற்றவையாகும்

### - சந்திரிகா குமாரதுங்கா

(கொழும்பு)

அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளில் கடிதங்கள் மட்டுமே இதுவரை பரிமாற்றப்பட்டுள்ளன. எனவே இதனை ஒரு முதல் அத்தியாயமான முகவுரையாக மட்டுமே கொள்ளமுடியும் என பிரதமர் சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்று இரவு சிறிலங்கா ரூபவாகினியில் புதியபணிப்பாளர் வசந்தராஜவுடன் நடைபெற்ற நேரடிக் கருத்து பரிமாறலின்போது இக்கருத்தை அவர் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் சமாதான முயற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது மட்டும்தான். இன்னும் எந்தவித பேச்சுக்களும் நடைபெறவில்லை என தெரிவித்துள்ளார்.

எனவே யுத்தம் இன்னும் முடியவில்லை. எனவே இரு தரப்பினர் மத்தியில் ஏற்படுவது ஒரு வழமையான நிகழ் (8 ஆம் பக்கம் பார்க்க)

## 60 வயதுக்கு மேற்பட்ட அறுவரை நிறுத்த பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். கச்சேரியில் பணியாற்றிக்கொண்டிருக்கும் அறுபது வயதுக்கு மேற்பட்ட ஆறு பேரையும் உடன் சேவையிலிருந்து விலக்குமாறு மாகாணசபையின் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பணிப்புரை வழங்கியுள்ளார்.

நேற்று பிற்பகல் கொழும்பில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சில் இருந்து யாழ். கச்சேரிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த பணிப்புரை கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது: ஏ. பி. பாலசிங்கம், கே. மாரிமுத்து, எம். இரட்ணசிங்கம், எஸ். கந்தசாமி, எஸ். மதி (8 ஆம் பக்கம் பார்க்க)

## விளையாட்டுத் துப்பாக்கி படையினரால் பறிமுதல்

(வடமராட்சி)

சிறு பிள்ளைகளின் விளையாட்டுத் துப்பாக்கிகூட யாழ் எடுத்துவர படையினர் தடை விதித்து வருகின்றனர்.

'நரோமா' கப்பலில் வந்த உயோதியர் ஒருவர் விளையாட்டுத் துப்பாக்கி எடுத்து வந்தபோது அதனை திருகோணமலை சோதனை தடை முகாமில் படையினர் பறித்தெடுத்தனர்.

பற்றறிகள், வீடியோ கசெட்டுகள் அனைத்தையும் படையினர் தடைவிதித்தனர். இரண்டு பற்றறியை எடுத்துச் செல்லவும் படையினர் அனுமதிக்கவில்லையென கப்பலில் வந்தவர்கள் தெரிவித்தனர். (யோ)

## மீனுக்குபோட்ட வலையில்

## இனப்பிரச்சினை தீர்விற்கான சமாதான பேச்சுவார்த்தை

# அரசாங்க தரப்பு பிரதிநிதிகள் 12ஆம் திகதி யாழ். புறப்படுவர்

## அமைச்சர் தர்மசிறி தகவல்

(கொழும்பு)

இனப்பிரச்சினை தொடர்பான சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ள அரசாங்கத்தரப்பு பிரதிநிதிகள் குழு 12ஆம் திகதி கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படவுள்ளதாக அரசாங்கத் தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இது குறித்து தகவல் வெளியிட்டுள்ள அமைச்சரவைப் பேச்சாளரான தர்மசிறிசேண நாயக்கா விடுதலைப் புலிக ... தைகள் யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 13-ம், 14-ம் திகதிகளில் திட்டமிட்டபடி நடைபெறும் எனத் தெரிவித் ... தையில் கலந்துகொள்ளும் அரசாங்கத் தரப்பு குழுவினர் 12-ம் திகதி யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட இருப்ப

ஓசியன் நகர முன்னாள் மேயர்

## யாழ். வைத்தியசாலைக்கு 12,75,000 ரூபா அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா மருத்துவமனை முக்கிய செலவுகளுக்கென லண்டன் ஓசியன் நகர முன்னாள் மேயர் திரு. சின்னமணி 12 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாவுக்கான காசோலையை லண்டன் நகர மண்டபத்தில் வைத்து யாழ். போதனா மருத்துவமனை பணிப்பாளரிடம் கொடுத்துள்ளார்.

மேற்படி நிதி முக்கிய செல [8 ஆம் பக்கம் பார்க்க)

# 12ஆம் திகதி யாழ். புறப்படுவர்

## அமைச்சர் தர்மசிறி தகவல்

(கொழும்பு)

இனப்பிரச்சினை தொடர்பான சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ள அரசாங்கத்தரப்பு பிரதிநிதிகள் குழு 12ஆம் திகதி கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படவுள்ளதாக அரசாங்கத் தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இது குறித்து தகவல் வெளியிட்டுள்ள அமைச்சரவைப் பேச்சாளரான தர்மசிறிசேனநாயக்கா விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்திற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 13-ம், 14-ம் திகதிகளில் திட்டமிட்டபடி நடைபெறும் எனத் தெரிவித்தார்.

மேலும், இப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளும் அரசாங்கத் தரப்பு குழுவினர் 12-ம் திகதி யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட இருப்பதாகவும் தெரிவித்தார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

---

## விளையாட்டுத் துப்பாக்கி படையினரால் பறிமுதல்

(வடமராட்சி)

சிறு பிள்ளைகளின் விளையாட்டுத் துப்பாக்கிகூட யாழ் எடுத்துவர படையினர் தடைவிதித்து வருகின்றனர்.

'நரோமா' கப்பலில் வந்த உ.யோகிபர் ஒருவர் விளையாட்டுத் துப்பாக்கி எடுத்து வந்தபோது அதனை திருகோணமலை சோதனை தடை முகாமில் படையினர் பறித்தெடுத்தனர்.

பற்றறிகள், வீடியோ கசெட்டுகள் அனைத்தையும் படையினர் தடைவிதித்தனர். இரண்டு பற்றறியை எடுத்துச் செல்லவும் படையினர் அனுமதிக்கவில்லையென கப்பலில் வந்தவர்கள் தெரிவித்தனர்.

(யோ)

## மீனுக்குபோட்ட வலையில் சிக்கிய ஏ. கே. 47

(குருநகர்)

மீன் பிடிக்கப் போடப்பட்ட வலையில் துப்பாக்கி சிக்கியது.

குருநகர் பாக் வீதியைச் சேர்ந்தவரான மீனவர் இராசலிங்கம் புகன் என்பவர் நேற்றுமுன்தினம் பூநகரி-மண்ணித்தலைக் கடலில் மீன்பிடிக்கவிரித்த வலையில் ஏ கே. 47 ரக துப்பாக்கி ஒன்று மகசீனுடன் ரவைகளும் சேர்ந்து அகப்பட்டதாகத் தெரிவித்தார்.

நேற்றுக்காலை கரை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் குடும்பஸ்தரை ஓடவிட்டு சுட்டுக்கொலை

(திருமலை)

திருமலை மாவட்டம் முத்துச் சேனையில் பொதுமகன் ஒருவரை கைது செய்த படையினர் தமது ஆயுதத்தைக் கொடுத்து ஓடும்படி கூறி அவரை ஓடவிட்டு சுட்டுக் கொன்றனர்.

இச் சம்பவம்பற்றித் தெரிய வருவதாவது: கடந்த மூன்றாம் திகதி ஈச்சிலம்பத்தை, வெருகல் 49 ஆம் கட்டை பகுதி சிறிலங்கா இராணுவ முகாம்களிலிருந்து வந்த இராணுவத்தினர் கல்லடி, முத்துச்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு

## வவு. அரச அதிபர் செல்ல விதிக்கப்பட்ட தடை தளர்வு

(யாழ்ப்பாணம்)

வவுனியா மாவட்டத்தில் ராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களுக்கு செல்வதற்கு வவுனியா அரச அதிபருக்கு விதிக்கப்பட்டிருந்த தடை தளர்த்தப்பட்டுள்ளதாக வவுனியா அரசாங்க அதிபர் திரு. தில்லை நடராசா ஈழநாதத்திற்குத் தெரிவித்தார். இத்தடை ஐ.தே.க, அரசு பதவியிலிருந்தபோதே கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து தளர்த்தப்பட்டுள்ளதாக மேலும் அவர் கூறினார்.

( 8 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் பொலிஸ் அதிகாரியை இடமாற்ற அரசு தீவிரம்

(யாழ்ப்பாணம்)

வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நவரட்ணராஜா கல்கிசைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

புதிய அரசாங்கம் பதவி ஏற்றுக் கொண்டதை அடுத்து தமிழ் மாவட்டத்தில் இடம் பெற்ற முக்கிய இடமாற்றம் இதுவெனத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுமார் ஏழு வருடகாலம் தொடர்ச்சியாக வவுனியாவில் பணிபுரிந்துள்ளார்.

சந்திரிகாவின் புதிய அரசாங்கம் இவரை இடம் மாற்றம் செய்வதில் தீவிரம் காட்டியது என தெரிவிக்கப்பட்டது.

(தி) (இ)

---

### லூசியன் நகர முன்னாள் மேயர்

## யாழ். வைத்தியசாலைக்கு 12,75,000 ரூபா அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா மருத்துவமனை முக்கிய செலவுகளுக்கென லண்டன் லூசியன் நகர முன்னாள் மேயர் திரு: சுன்னமணி 12 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாவுக்கான காசோலையை லண்டன்நகர மண்டபத்தில் வைத்து யாழ். போதனா மருத்துவமனை பணிப்பாளரிடம் கொடுத்துள்ளார்.

மேற்படி நிதி முக்கிய செல

[8 ஆம் பக்கம் பார்க்க)

### அரசாங்கத்திற்கு எதிராக

## பொதுமக்களை தூண்டிவிட பொலிஸ் அதிகாரி முயற்சி

(கொழும்பு)

தவறான நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் சில பொலிஸ் அதிகாரிகள் தவறுகளை மூடி மறைப்பதற்காக அரசாங்கத்துக்கு எதிராக பொது மக்களைத் தூண்டிவிட முயற்சி எடுத்து வருகின்றனர்.

இவ்வாறு வடக்கு, கிழக்கு மாகாணத்திலும் மற்றும் சில பிரதேச செயலர் பிரிவுகளிலும் அவசர கால சட்டத்தை நீடிப்பது தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தல்; மேலும்இருவர்மனுதாக்கல்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக மேலும் இரு வேட்பாளர்கள் கட்டுப் பணம் செலுத்தியுள்ளனர். ஐ தே. கவின் ஆட்சியில் சிரேஷ்ட அமைச்சராக இருந்தவரும் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான காமினி திசாநாயக்கா ஐ தே. கவின் சார்பாகவும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான ஹட்சன் சமரசிங்க சுயேட்சையாகவும் போட்டியிட கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

## தனிக்குழுவாக இயங்க இ.தொ.காவிற்கு அங்கீகாரம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் இ.தொ.கா உறுப்பினர்கள் தனியான ஒரு குழுவாகச்செயற்படுவதற்குபாராளுமன்ற பிரதி சபாநாயகர் ஒப்புதல் அளித்துள்ளார், இ தொ.காவும், ஐ தே. கவும் ஒரே சின்னத்தின் கீழ்போட்டியிட்டன என்பது தெரிந்ததே.

## ஹேமாவின் தலைமையில் காமினியின் முதற்பிரசாரம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் காமினி திசாநாயக்காவின்ஆரம்ப தேர்தல் பிரசார கூட்டம் இன்று கொழும்பு மத்திய தொகுதியில் ஆரம்பமாக இருக்கின்றது.

இதில் பிரதம பேச்சாளராக காமினிதிசா நாயக்காகலந்து கொள்ள இருப்பதுடன் இக் கூட்டத்திற்கு மத்திய கொழும்பின் புதிய அமைப்பாளர் ஹேமா பிரேமதாசா தலைமை வகிக்கவுள்ளார்.

இதேவேளை முன்னர் ஆரம்ப பிரசார கூட்டம் மத்திய மாகாணத்தில் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

---

## பற்றறிதொடர்பானதெளிவானமுடிவை அரசாங்கம் அறிவிக்க வேண்டும்

### வவுனியா அரச அதிபர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தாண்டிக்குளம் ஊடாக பொதுமக்கள் பாவனைக்குரிய பற்றறிகளை எடுத்து வருவது பற்றி தெளிவான முடிவு ஒன்றை அரசாங்கம் வரையறுக்க வேண்டும் என வவுனியா அரசாங்க அதிபர் திரு. தில்லைநடராசா அரசாங்கத்தை கேட்டுள்ளார்.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் சமீபத்தில் வடபகுதி பொது மக்கள் பாவனைக்குரிய பற்றறிகளை எடுத்துச் செல்லலாம் என அறிவித்ததைத் தொடர்ந்து பொது மக்கள் வவுனியா நகரிலிருந்து டோர்ச் பற்றறிகளை எடுத்துச் செல்கின்றனர்.

ஒருவர் எத்தனை பற்றறிகளை தம்வசம் எடுத்துச் செல்லலாம் என்ற வரையறை விதிக்கப்படாததினால் இரு பற்றறிக்கு அதிகமாக எடுத்துச் செல்வதற்கும் தினமும் வியாபார நோக்குடன் பற்ற

(8 ஆம் பக்கம் பார்க்க)

### வடக்கு-கிழக்கு சுகாதாரப் பாதிப்புக்களை ஆராய்ந்த

## லண்டன் மாநாட்டில் தமிழ்மக்களுக்கு உதவ உறுதிமொழி கிடைக்கவில்லை

### யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழர்களின் சுகாதாரப்பாதிப்புகள் தொடர்பாக ஆராயப்பட்ட லண்டன் மாநாட்டில் கலந்து கொண்ட யாழ் போதனா மருத்துவமனை பணிப்பாளர் நேற்று யாழ்ப்பாணம் திரும்பியுள்ளார்.

மேற்படி மாநாடு தொடர்பாக நமது நிருபர் பணிப்பாளரை கேட்டதற்கு வெறும் பேச்சளவிலேயே தமிழ் மக்களின் சுகாதார அவல நிலை பற்றி கேட்கப்பட்டதே அன்றி அங்கிருந்து எந்தவொரு டாக்டர்கள் கூட இங்கு வந்து சேவை செய்ய

(8 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரி பணிப்பாளரை சந்திக்க அமைச்சருக்கு நேரமில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்- போதனா மருத்துவமனை பணிப்பாளர் சுகாதார அமைச்சரை தனியாக சந்திப்பதற்கு இருமுறை எடுத்த முயற்சி கைகூடவில்லை-இதேவேளை மற்றைய பணிப்பாளர்களுடன் கூட்டாக சுகாதார அமைச்சரை சந்தித்தபோது யாழ்- போதனா மருத்துவமனையில் உள்ள பிரச்சினைபற்றி தனியாக பேச கேட்டபோது அதற்கு நேரமில்லையெனவும் பின்னர் பேசலாமென அமைச்சர் தெரிவித்ததாக தெரியவருகின்றது-

சுகாதார அமைச்சின் செயலாளர் டட்லி திசாநாயக்காவை சந்தித்த பணிப்பா

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### மரம் நடுவோம்

மரப்பயிரும், பணப்பயிரே, மலைவேம்புகஜு,ஒயில்பாம், சர்க்கரைவேப்பு, பலாக்கன்று நட்டுவரும் தலைமுறையினரின் வாழ்வும் வளமும், பெருகச் செய்வோம். மரக்கன்றுகள் எம்மிடம் விற்பனைக்குண்டு. ''மில்க்வைற்''

(சி-10463)

விற்பனையாகிறது!

## அறிவுக் களஞ்சியம் 26

சிறப்புப் பொது அறிவுப் போட்டி

பரிசு ரூபா 3000/-

விவரம் இந்த இதழில்

(9515)

## குண்டு வீச்சு

சிறிலங்கா ரூபவாகினிக் கூட்டுத்தாபன முகவர் ஒருவரது வீடு பெற்றோல் குண்டினால் தாக்கப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளது. இதனால் அவ் வீட்டின் கதவுகள், ஜன்னல்கள் உட்பட பல பொருட்களுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. ஆனால் இச் சம்பவத்தின் போது எவரும் காயமடையவில்லை. களுத்துறை மாவட்ட முகவரான ஜி ஏ. லோறன்ஸ் என்பவரது வீடே தாக்குதலுக்கு இலக்கானதாகவும், இச் சம்பவம் தொடர்பாக வியாபாரி ஒருவரும், அவரது இரு சகாக்களும் தேடப்படுவதாகவும் பொலிசார் கூறியுள்ளனர்.

## பெயர் மாற்றம்

கைதடி நாவற்குழி தெற்கு என்னும் முகவரியைச் சேர்ந்த நாகம்மா சந்திரலோகன் ஆகிய நான், எனது பெயரை 15-11-1993ஆம் திகதியிலிருந்து ஈஸ்வரி சந்திரலோகன் என பெயர் மாற்றியுள்ளேன் என்பதையும், அத்துடன் எனது பெயர் சம்பந்தப்பட்ட சகல ஆவணங்களிலும் ஈஸ்வரி சந்திரலோகன் என்னும் பெயரையே பாவித்து வருகின்றேன் என்பதையும் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

ஈஸ்வரி சந்திரலோகன்

கைதடி,
நாவற்குழி தெற்கு.

(9614)


## லஞ்சத்தடுப்பு சட்டமூலம்

லஞ்சம், ஊழல் என்பவற்றை விசாரிப்பதற்கான சட்டமூலம் மற்றும் லஞ்சத் தடுப்புச்சட்ட மூலம் என்பன கடந்த செவ்வாய் பாராளுமன்றத்தில் மூன்றிலிருபங்கு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது- பாராளுமன்றத்தில் இருந்த சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் இச் சட்டங்களை ஆதரித்து வாக்களித்தமை குறிப்பிடத்தக்கது-

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

''மீண்டும் நீ பிறவாயோ''

மலர்வு
7 - 8 - 1973



உதிர்வு
18 - 9 - 1993

### செல்வி கந்தசாமி சசிகலா
திதி: 7 - 10 - 1994

எம்அருமைச் சசிகலாவே
அன்புக்கினிய எம்மகளே
ஆலமரம்போல் நீ வளர்ந்து
ஆறுதல் தருவாயென நினைந்து
பெயரும் புகழும் நிலைத்திடவே
ஆசையுடன் வளர்த்திடவே
ஆலமரம்போல் நீ சரிந்திடவே
ஆறுதல்தேடித் தவிக்கின்றார்கள்
மீண்டும் அம்மா நீ ஒருமுறை பிறவாயோ
எம்மனம் மகிழமலராயோ

உன்பிரிவால் வாடும்
அன்னை, தந்தை,
சகோதர, சகோதரிகள்.

பொ: கந்தசாமி
(அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றியவர்,)
54/5, குறோசெற்லேன்,
கச்சேரி - நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(9583)

சங்கானையிலும், பருத்தித்துறையிலும்

## மக்கள் வங்கி கிளை திறக்க கொழும்பு அனுமதி மறுப்பு

(யாழ்ப்பாணம்)

சங்கானையிலும், பருத்தித்துறையிலும் மக்கள் வங்கிக் கிளைகள் திறப்பதற்கு மக்கள் வங்கியின் தலைமைப்பீடம் அனுமதிக்கவில்லை.

முருங்கனிலும் புங்குடுதீவிலும் கிளைகளை அமைப்பதற்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

இம்முறை கொழும்பு சென்ற மக்கள் வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் சங்கானையிலும் பருத்தித்துறையிலும் மக்கள் வங்கி கிளைகளை திறக்க வேண்டிய அவசியத் தன்மையை தமது உயர் அதிகாரிகளிற்கு கொழும்பில் விளக்கியபோதும் அதற்கு அவர்கள் அனுமதி வழங்கவில்லை என தெரிய வருகிறது.

## நினைவு கூருகின்றோம்...

### 07. 10. 1994

1986 ம் ஆண்டு இதே தினத்தில் திருமலை - சாம்பல்தீவில் சிறிலங்கா இராணுவம் சுற்றிவளைத்த போது வீரச்சாவெய்திய,

**கப்டன் றொபின்** (செல்வரத்தினம் ராஜ்பகவான் - புன்னாலைக்கட்டுவன் வடக்கு யாழ்)

மணலாறுப் பகுதியில் வழிப்பயணத்தின் போது பாம்பு தீண்டியதில் எமைப்பிரிந்த,

★ ராசா (தேவசகாயம் அமலதாஸ் - இருதயபுரம், மூதூர்- திருமலை)

1987 ம் ஆண்டு வவுனியா- கற்பகபுரத்தில் தேச விரோதிகள் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**பாபு** (பழனி சிவகுமார் - சாஸ்திரிகூழாங்குளம்- வவுனியா)

**தாஸ்** (செல்லத்துரை ஜோன்டேவிட் - இராஜேந்திரன் குளம் - வவுனியா

1989 ம் ஆண்டு மட்டு - கரடியனாறுப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய,

**ரோகி** (அ. விஜயகுமார் - கரடியனாறு - மட்டு)

1991 ம் ஆண்டு யாழ் - கட்டுவன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**வின்சன்** (பஞ்சலிங்கம் சிறிரஞ்சன் - உரும்பராய் - யாழ்)

இதே தினத்தில் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும் கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினரால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கியகாலத்தில்அதனுடன் இணைந்துசெயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10460)

## போட்டோ அல்பம் இனாம்

- கலர் பிலிம் சுருள்களை கழுவி படமாக்கி 30 பிரதிகள் பெற்றால் ஒரு போட்டோ அல்பம் இனாம்.
- கொம்பியூட்டர் றபர் சீல் (COMPUTER RUBBER STAMPS) (இரண்டு வருட உத்தரவாதம்)
- லயின், காவ்ரோன், கலர் புளொக்ஸ் (Line, Half Tone, Colour Blocks)
- புகைப்பட பிரதியாக்கம் (RE-COPY) மேல் குறிப்பிட்டவற்றைக் குறைந்த செலவில் குறுகிய காலத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

## (:) கொழும்பு கலைக்கூடம் (:)

[கொழும்பு ஸ்ருடியோ]

55, லெப். இளங்கோ வீதி, யாழ்ப்பாணம்.

தொழில்நுட்பத்தில் 35 வருடங்கள் அனுபவம் பெற்றவர்கள்

(சி-10462)

## புகைப்படக் கருவியை தந்துதவுமாறு வேண்டுகிறோம்

கடந்த சனிக்கிழமை (1-10-1994) இரவு கிளாலிக் கடற்பாதையின் பயணிகள் இறங்குதுறையில் பெறுமதி மிக்க புகைப்படக்கருவி (கமரா) ஒன்றை எவரோ தவறுதலாக எடுத்துச் சென்றுவிட்டீர்கள். அதனைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் யாழ் செயலகத்திலோ அல்லது கிளாலி இறங்குதுறை செயலகத்திலோ ஒப்படைத்து உதவுமாறு வேண்டிக்கொள்கின்றோம் தகுந்த சன்மானம் வழங்குவோம்; (9618)

# மருந்து பால்மா வகைகள் (தனியார்)
# வரைவுள்ளது

[கொழும்பு ஸ்ருடியோ]

55, லெப். இளங்கோ வீதி, யாழ்ப்பாணம்.

தொழில்நுட்பத்தில் 35 வருடங்கள் அனுபவம் பெற்றவர்கள்

(சி-10462)

தவறுதலாக எடுத்துச் சென்றுவிட்டீர்கள். அதனைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் யாழ் செயலகத்திலோ அல்லது கிளாலி இறங்குதுறை செயலகத்திலோ ஒப்படைத்து உதவுமாறு வேண்டிக்கொள்கின்றோம் தகுந்த சன்மானம் வழங்குவோம்; (9618)

# மருந்து பால்மா வகைகள் (தனியார்) வரைவுள்ளது

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவர்க்கும் ஓர் மகிழ்ச்சிகரமான செய்தி!
வன்னி மக்களின் நன்மை கருதி எமது மருந்து பால்மா நிறுவனத்தின் மற்றுமோர் கிளை
கிளிநொச்சியில் தனது சேவையை ஆரம்பிக்கிறது

# மருந்து பால்மா வகைகள் (தனியார்) வரைவுள்ளது

## யாழ். வீதி, கிளிநொச்சி!

வன்னிப் பெருநிலப்பரப்பில் தனது சேவையை ஆரம்பிக்கும் நிறுவனத்திற்கு
வாழ்த்தும் சகோதர நிறுவனங்கள்;

★ மருந்து பால்மா வகைகள் (தனியார்) வரைவுள்ளது
484, கேணல் கிட்டு சாலை, யாழ்ப்பாணம்.

★ மருந்து பால்மா வகைகள் (தனியார்) வரைவுள்ளது
பிரதான வீதி, சித்தன்கேணி.

★ மருந்து பால்மா வகைகள் (தனியார்) வரைவுள்ளது
பிரதான வீதி, வட்டுக்கோட்டை.

★ மருந்து பால்மா வகைகள் (தனியார்) வரைவுள்ளது
ஊறணி, வல்வெட்டித்துறை.

## மருந்து பால்மா வகைகள் (தனியார்) வரைவுள்ளது

(சி-10464)

இதே தினத்தில் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும் கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினரால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்.


ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கியகாலத்தில்அதனுடன் இணைந்துசெயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(இ-10460)

## நன்றி நவிலலும்
## அந்தியேட்டி கிரியை அழைப்பும்



அமரர்

## ஆழ்வார் ஆறுப்பிள்ளை

[ஓய்வு பெற்ற தபாலக உத்தியோகத்தரும், எலிசபெத் மகாராணியிடம் நேரடி விருதும், ஆராட்சிப் பட்டமும் பெற்றவர்]

மண்ணில்: 1898-06-10 விண்ணில்: 1994-09-08

09-09-1994 அன்று நடைபெற்ற அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து உதவிகள் பல வழிகளில் எமக்கு ஈந்த அன்புள்ளங்களுக்கும் ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 08-10-1994 சனிக்கிழமை அவரது தற்போதைய வதிவிடமாகிய ஐயனார் வீதி, சுன்னாகத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்

மகேஸ் குடும்பம்
(கீதா எரிபொருள் விற்பனை நிலையம்)
சுன்னாகம்; (9617)

# காட்டு அன்னங்கள்

சீனாவில் அறுபதுகளில் அந்தப்புரட்சி நிகழ்ந்தது. புரட்சிக்குப் பின் ஒரு புரட்சியாக, தொடர் புரட்சியாக, பழைமையை மாற்றியமைக்கும் பண்பாட்டுப் புரட்சியாக அந்தப் பூகம்ப நிகழ்வு இடம் பெற்றது, அது விளைவித்த பேரனர்த்தம் பயங்கரமானது. நாடு முழுவதுமே ஒரு வன்முறைப் பிரளயத்தில் மூழ்கி எழுந்தது. அந்தப் புரட்சிப் பெருவெள்ளத்தில் அள்ளுப்பட்டுச் சென்றவர்களின் எண்ணிக்கையோ எண்ணிலடங்காது. அது சீன கம்யூனிச இயக்கத்தை ஒரு உலுப்பு உலுக்கியது. வேர் அறுந்து விழுந்த விருட்சங்கள்போல கட்சியின் பழம் பெரும் தலைவர்கள் தூக்கி எறியப்பட்டனர். சீன சோசலிச நிர்மாணம் ஒரு இருண்ட யுகத்தினுள் தள்ளப்பட்டது. முன்னோக்கி நகர்ந்து வந்த செஞ்சீனம், இந்தக்கால கட்டத்தில் ஒரு பெரிய பின்நோக்கிய பாய்ச்சலை நிகழ்த்தியது-

இந்த ஊழிக் கூத்தை நடத்தி முடித்தவர் மாவோ. எதற்காக இந்தப் புரட்சியை அவர் கட்டவிழ்த்துவிட்டார்? தான் கட்டி வளர்த்த கட்சியையே அவர் எட்டி உதைத்ததன் காரணமென்ன? தேசிய வ்டுதலைப் போரில் தோளோடு தோள்நின்ற தோழர்கள் பலரை அவர் இம்சைப்படுத்தியதன் நோக்கமென்ன? பெரும் புயலாக எழுந்து பேரழிவைத் தோற்றுவித்த இந்த அரசியற் கொந்தளிப்பை பண்பாட்டு புரட்சி என அவர் வர்ணித்தது ஏன்?

நீண்ட காலமாகவே சோசலிச சிந்தனை உலகில் பெரும் சர்ச்சையை எழுப்பிய வினாக்கள் இவை;

'முன்நோக்கிய பெரும் பாய்ச்சல்', 'பண்பாட்டுப் புரட்சி' என்பன மாவோ நிகழ்த்திய சமூகப் பரிசோதனைகள்; இந்தப் பரிசோதனைகளின்போது பெரும் தவறுகள் இழைக்கப்பட்டன என்பதும், இவற்றினால் சீனச் சமூகம் பெரிதும் பாதிக்கப்பட்டது என்பதும் வரலாற்று உண்மைகள். இன்றைய சீனத் தலைமை மாவோவின் இந்த பரிசோதனைகளை விமர்சித்து கண்டித்தும் இருக்கிறது- ஆனால் மாவோவை நிராகரிக்கவில்லை. நவ சீனத்தின் உருவாக்கத்தில் மாவோவின் பங்கு அளப்பரியது; தேசிய விடுதலையிலும், சமூகப் புரட்சியிலும் அவர் கணிசமான தொண்டாற்றியிருக்கிறார்- சீனாவின் சிற்பி என வர்ணிக்கப்பட்ட இந்த மாபெரும் வரலாற்று மனிதர் ஏன் இந்த பாரிய தவறுகளை இழைத்தார்?

மாவோவின் இலட்சியங்கள் உன்னதமானவை ஆனால் இந்த இலட்சியங்களை அடைவதற்கு அவர் கையாண்ட அணுகு முறைகள் தான் தவறானவை என்பது சீன ஆய்வாளர்கள் பலரது கருத்து. அவர் முற்றுமுழுதாக மனித சக்தியைப் பயன்படுத்தி தனது இலக்குகளை அடையமுனைந்தார். ஆனால் இதனை ஒரு ஒழுங்கான முறையில், நடைமுறைச் சாத்தியமான செயற் திட்டக்தின் அடிப்படையில் செய்யவில்லை. இதனால் சீன சமூகம் பெரும் துன்பத்திற்கு ஆளாகியது. பொருண்மிய வளர்ச்சியும் பாதிக்கப்பட்டது.

கலாச்சாரப் புரட்சியை அவர் தொடக்கி வைத்ததற்கும் காரணங்கள் இருக்கத்தான்செய்தன. கொள்கையளவில், இந்தப் பரிசோதனை உயரிய நோக்குகளை கொண்டிருந்தது. ஆனால் நடைமுறை எதார்த்தம் வேறு. நடைமுறையில் அது பேரழிவை தோற்றுவித்தது.

மாவோ ஒரு இலட்சியவாதி. பெரிய கனவுகளைக் கண்டவர். சீனத்தை ஒரு சோசலிச சுவர்க்கமாக மாற்ற விளைந்தவர். சோவியத் யூனியனின் சோசலிசப் பாதையில் அவர் செல்ல விரும்பவில்லை.

அந்தப்பாதைகட்சிச் சர்வாதிகாரத்தை கட்டி.வளர்த்தது. மக்கள் சனநாயகத்தை மறுத்தது. பொருளுலகிற்கு முதன்மை கொடுத்தது. மனித உறவுகளை மலினப்படுத்தியது. அந்தப் பாதை ஒரு உன்னதமான பொதுவுடமை சமூகத்தை நோக்கிச் செல்லவில்லை என மாவோ கருதினார். சீனத்தை ஒரு துகளை மாற்றுவதற்கு கருத்துலகில் ஒரு புரட்சியை நிகழ்த்த வேண்டும் சிந்தனைப் புரட்சி மூலமே புரட்சிகரப் பிரக்ஞையை தோற்றுவிக்க முடியும் எனக் கருதினார் மாவோ. சீனாவில் சமூகப் புரட்சி நிகழ்ந்து, பொருண்மியக் கட்டமைப்பில் மாற்றம் ஏற்பட்டபோதும், மக்களின் மனவுலகில் மாற்றம் நிகழவில்லை. பழமைவாதக் கருத்துகள், பிற்போக்கான பார்வைகள், மூடநம்பிக்கைகள் மக்களிடம் செறிந்து கிடந்தன. கொன்பியூசியஸின் ஆதிகால அடிமைவாதச் சித்தாந்தம் சீனச் சமூக வாழ்வில் ஆதிக்கம் செலுத்தி நின்றது; இந்தப் பழமைவாத சமூகப் பிரக்ஞையுடன் புதிய சமூக உலகை கட்டி எழுப்புவது கடினம். பொருளியப் புற வளர்ச்சிக்கு ஒத்திசைவாக அக வளர்ச்சியும் ஏற்படவேண்டும் புதிய யுகத்தை நோக்கி முன்னேறும் ஒரு சமூகம் புரட்சிகரமான அறிவியற் பார்வையைக் கொண்டிருக்க வேண்டும்; பண்பாட்டுப்புரட்சி மூலம் இந்த நோக்கை அடையலாம் என மாவோ கருதினார்,

சோவியத் யூனியன் போன்று, சீனாவிலும் கட்சிச் சர்வாதிகாரம் விஸ்வரூபப் பரிமாணம் பெறுவதை மாவோ விரும்பவில்லை. மக்களுக்குப் புறம்பாக, மக்களிடமிருந்து அந்நியப்பட்ட சக்தியாகஅரச நிர்வாக இயந்திரம் உருவாக்கம் பெறுவதை அவர் விரும்பவில்லை. அது. கட்சிக்கும் மக்களுக்குமிடையே பெரியதொரு முரண்பாட்டைத் தோற்றுவிக்கும். இந்த முரண்பாட்டைக் களைவதனால் அதிகாரபீடத்திலுள்ள கட்சிக்காரர்களை மக்கள் அரங்கில் இறக்கிவிடவேண்டும். மக்கள்மீது அதிகாரம் செலுத்துவதல்ல, மக்களுக்கு சேவை புரிவதுதான் கட்சியின் இலட்சியம் என்பதை உணர்த்தவேண்டும். இந்த நோக்கிலும் பண்பாட்டுப் புரட்சியை முடுக்கி விட்டார் மாவோ.

இளைய நெஞ்சங்கள் மிகவும் செழிப்பான நிலம், புரட்சியின் விதைகளை அங்குதான் விதைக்க வேண்டும்; இளைஞரிடம் புரட்சியுணர்வு இருக்கிறது. புதுமையைக் காணும் உத்வேகம் இருக்கிறது. துணிவு இருக்கிறது. தூய்மை இருக்கிறது. எந்த ஒரு போராட்டத்திலும் வலுவான சக்தியாக, துணிவாக நின்று போராடுவது இளம் சமூகமே. எனவேதான் இளம் பரம்பரையை அணிதிரட்டி, அவர்களை 'செம்படை' எனப் பெயரிட்டு, அவர்களுக்கு சகல அதிகாரங்களையும் வழங்கி, பழைமைக்கு எதிராக, பழைமையில் புதைந்து கிடக்கும் கட்சியின் பழம் பரம்பரைக்கு எதிராக பண்பாட்டுப் புரட்சியை அரங்கேற்றிவைத்தார் மாவோ.

மாவோவின் இலட்சிய நோக்கு உயர்ந்ததாக இருக்கலாம். ஆனால் பண்பாட்டுப் புரட்சி இந்த நோக்குகளை நிறைவு செய்யவில்லை. மாறாக, பேரழிவையே விளைவித்தது.

சீன பண்பாட்டுப் புரட்சிபற்றி பலநூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன. மார்க்சிய தத்துவாசிரியர்கள் பலர் மதிப்பாய்வுக் கட்டுரைகளை எழுதியிருக்கிறார்கள். பல கோணத்தில் இந்த மாபெரும் வரலாற்று நிகழ்வு விமர்சிக்கப்பட்டிருக்கின்றது. இவை எல்லாம் சீனாவுக்கு வெளியேயிருந்து சீனம்பற்றி பார்க்கப்பட்ட பார்வைகள். உள்ளார்ந்த அனுபவமின்றி நிகழ்த்தப்பட்ட புறநிலை நோக்குகள். ஆனால் சீனாவிலிருந்து, சீன வரலாற்றுத் தரிசனத்துடன் எழுதப்பட்ட நூல்கள் மிகவும் சொற்பம். இந்த வகையில். யுங் சாங் எனப்படும் சீனப் பெண்மணி எழுதி தேசத்தின் வரலாற்றுப் பின்புலத்தில் ஒரு குடும்பத்தின் கதை சொல்லப்படும் பாங்கு சிறப்பாக அமைகிறது.

சீனப் பண்பாட்டுப் புரட்சி இந்த நூலின் மையமாக அமைகிறது. இந்தக் கலாச்சாரக் கிளர்ச்சி விளைவித்த அனர்த்தங்களையும், அதனால் சீன சமூகம் சந்தித்த அவலங்களையும் உண்மைச் சம்பவங்கள் வாயிலாக மிகவும் உணர்வுபூர்வமாக வரைந்துகாட்டுகிறார் யுங் சாங்.

காட்டுத் தீ போல பண்பாட்டுப் புரட்சி நாடெங்கும் பரவுகிறது. அதன் தீ நாக்குகள் யுங் சாங்கின் குடும்பத்தையும் தீண்டுகிறது.

நூலாசிரியையின் தந்தை ஒரு கம்யூனிஸ்ட் உயரதிகாரி. நீண்ட கடின உழைப்பால் உயர்ந்தவர்; கெரில்லா வீரனாக ஆயுதமேந்தி தேசிய விடுதலைக்காக போரிட்டவர். கட்சியின் விசுவாசி. மாவோவை சீனத்தின் கடவுளாக வரித்துக் கொண்டவர். தாயாரும் ஒரு புரட்சிவாதி. கட்சிப் பிரமுகர். யுங் சாங்கின் குடும்பம் ஒரு கம்யூனிஸ்ட் குடும்பம்.



நூலாசிரியை யுங் சாங்
(JUNG CHANG)

கம்யூனிஸ்ட் உயர் அதிகாரிகளையும் பண்பாட்டுப் புரட்சி விட்டு வைக்கவில்லை. யுங் சாங்கின் பெற்றோர்கள் மீது 'எதிர்ப்புரட்சியாளர்' என்ற குற்றம் சுமத்தப்படுகிறது. முதலில் தந்தையும், பின்னர் தாயாரும் கைதாகின்றனர்.

இரகசிய விசாரணைகளில் இழிவுபடுத்தப்பட்டு கண்டனக் கூட்டங்களில் அவமதிக்கப்பட்டு தடுப்பு முகாம்களில் வதைபட்டு பெற்றோர்கள் கொடுமைக்கு ஆளாக, யுங் சாங்கின் குடும்பம் சிதைகிறது. தாய் மனமுடைந்து நோயாளியாக, தந்தைக்கு பைத்தியம் பிடிக்கிறது. இந்த அவலமான சூழ்நிலையில் செம்படையில் சேவையாற்ற நிர்ப்பந்திக்கப்படுகிறார் யுங் சாங். அந்த இளைஞர் பட்டாளம் நிகழ்த்திய அனர்த்தங்கள் அவரைத் திகைக்க வைக்கிறது. தனிப்பட்ட சோகமும் சமூகத்தின் அவலமும் தன்னைச் சூழ நிகழ்ந்துகொண்டிருக்கும் அராஜகமும் - எல்லாமே அபத்தமாக, அர்த்தமற்ற கேலிக்கூத்தாக அவருக்கு தென்பட்டது.

கட்டுக்கடங்காத காட்டாறுபோல சீற்றம் கொண்டு பாய்ந்த புரட்சி வெள்ளம் நாடெங்கும் பேரழிவைஏற்படுத்தியது. இலக்கற்றநோக்கற்ற இளைஞர் வன்முறையால் எத்தனையோ அப்பாவிகள் பலி

பண்பாட்டுப் புரட்சியை தொடக்கி வைத்தவர் மாவோ. அதனை இயக்கி வைத்தவரும் அவரே. எனவே, இந்தப் புரட்சியால் நிகழ்ந்த அராஜகம் அனைத்திற்கும் அவரே பொறுப்பாளர் ஆவார். மாவோ சாதிக்க விரும்பியது வேறு. ஆனால் நிகழ்ந்தது வேறு. அந்த நிகழ்வுகளை அவரால் கட்டுப்படுத்த முடியவில்லை. மிகவும் கட்டுப்பாடான கட்சி அமைப்பிற்கு எதிராக, கட்டுப்பாடற்ற இளைஞர் சேனையை கட்டவிழ்த்துவிட்டதுஅவர் புரிந்த மாபெரும் வரலாற்றுத் தவறு. கடிவாளம் அறுந்த குதிரை போல திசைமாறி ஓடியது செம்படை அதனைநெறிப்படுத்த அவரால் முடியவில்லை. பழைமைவாத சிந்தனையை களைந்தெறிய மாவோ விரும்பினார் என்பது உண்மை. ஆனால் நூல்களைஎரிக்கவோ, அன்றிபழைய பண்பாட்டுச் சின்னங்களை அழிக்கவோ அவர் உத்தரவு பிறப்பிக்கவில்லை. ஆனால் செம்படையோ மாவோவின் பிரகடனங்களை தவறாகப் புரிந்துகொண்டு தான்தோன்றித்தனமாக நடந்தது- ஆயினும் அணைகளைக் கட்டாமல் வெள்ளத்தைஓடவிட்டது மாவோ இழைத்த தவறு.

சீன சோசலிச நிர்மாணம் பற்றிய ஒரு பரந்த, தெளிந்த பார்வையுடன் யுங்சாங் இந்த நூலைப் படைக்கவில்லை. அவர் தனது குடும்பத்தின் சுவர்களுக்குள் நின்று, தான் கண்டவற்றையும் கேட்டவற்றையும் எழுதுகிறார். அந்த எழுத்தில் ஒருபுறம் ஆழமான சோகமும், மறுபுறம் வக்கிரமான கோபமும் தொனிக்கிறது. துயரம் தோய்ந்த வாழ்வனுபவமும் கனவுகள் உடைந்த விரக்தியும் அவருக்கு கம்யூனிசத்தின் மீது வெறுப்பை ஏற்படுத்துகிறது. அந்தக் கசப்புணர்வு சீன சமூகம்மீது திரும்புகிறது; செஞ்சீனத்தின் முகம் அவருக்கு அசிங்கமாகத் தென்படுகிறது. போராலும், புரட்சியாலும், கொந்தளிப்பான அரசியலாலும் சீர்குலைந்த ஒரு சமுதாயமாக அவர் சீனத்தைக் காண்கிறார். இந்தப் பார்வையின் அடிப்படையில், சீன வரலாற்றை ஒரு நீண்ட, முடிவில்லாத துன்பியல் நாடகமாக அவர் சித்தரிக்க முனைகிறார்.

ஆன்மாவை இழந்த மனிதர்களாக எதற்கும் பணிந்துகொடுக்கும் பொம்மைகளாக, சீன விவசாயிகளை அவர் விபரிக்கிறார். இது மிகவும் தவறான கணிப்பு. ஒரு அபத்தமான பார்வை- சீன விவசாய வர்க்கமானது நவசீனத்தின் முதுகெலும்பு; ஜப்பானிய ஆதிக்கத்திற்கு எதிராக, சீன பிரபுத்துவக் கொடுமைக்கு எதிராக, தேச விடுதலைவேண்டிப் போரிட்ட மாபெரும் மக்கள்சக்தியை யுங்சாங் இழிவுபடுத்த முயல்வது அவரது முதிர்ச்சியற்ற பார்வையை எடுத்துக் காட்டுகிறது. நகரப்புற வாழ்வும், உயரதிகார வர்க்கப் பின்னணியும் இப்படியானதொரு தீட்சண்யமற்ற நோக்கிற்கு காரணமாக அமைந்திருக்கலாம்;

## பிரம்மஞானி

சீனாவை ஒரு நரகமாகவும் மேற்குலகை ஒரு சுவர்க்கமாகவும் அவர் வர்ணிக்கிறார்; மேற்குலகில் அழகான ஆடைகள் இருக்கின்றன, வாசிப்பதற்கு நிறையப் புத்தகங்கள் இருக்கின்றன, பார்த்து ரசிக்கப் பூக்கள் இருக்கின்றன, பொழுதுபோக்கிற்கு களி

வில்லை. இதனால் சீன சமூகம் பெரும் துன்பத்திற்கு ஆளாகியது. பொருண்மிய வளர்ச்சியும் பாதிக்கப்பட்டது.

கலாச்சாரப் புரட்சியை அவர் தொடக்கி வைத்ததற்கும் காரணங்கள் இருக்கத்தான்செய்தன. கொள்கையளவில், இந்தப் பரிசோதனை உயரிய நோக்குகளை கொண்டிருந்தது. ஆனால் நடைமுறை எதார்த்தம் வேறு. நடைமுறையில் அது பேரழிவை தோற்றுவித்தது.

மாவோ ஒரு இலட்சியவாதி. பெரிய கனவுகளைக் கண்டவர். சீனத்தை ஒரு சோசலிச சுவர்க்கமாக மாற்ற விளைந்தவர். சோவியத் யூனியனின் சோசலிசப் பாதையில் அவர் செல்ல விரும்பவில்லை.

அந்தப்பாதைகட்சிச் சர்வாதிகாரத்தை கட்டிவளர்த்தது. மக்கள் சனநாயகத்தை மறுத்தது. பொருளுலகிற்கு முதன்மை கொடுத்தது. மனித உறவுகளை மலினப்படுத்தியது. அந்தப் பாதை ஒரு உன்னதமான பொதுவுடமை சமூகத்தை நோக்கிச் செல்லவில்லை என மாவோ கருதினார். சீனத்தை ஒரு புதிய பாதையில், ஒரு புதிய யுகத்தை நோக்கி நகர்த்திச் செல்ல அவர் விரும்பினார்.

பொதுவுடமைச் சமுதாய மாற்றம் என்பது ஒரு நீண்ட பயணம். ஒரு தடவை நிகழ்த்தப்படும் சமூகப் புரட்சியுடன் அந்த இலக்கை எட்டிவிட முடியாது. ஒரு புரட்சியுடன் சமூகத்தில் நிலவும் எல்லா முரண்பாடுகளையும் களைந்துவிடமுடியாது. படிப்படியாகக் கட்ட விழ்ந்து செல்லும் தொடர்ச்சியான புரட்சி மூலமே கம்யூனிச சமூகத்தை கட்டியெழுப்ப முடியும் எனக் கருதினார் மாவோ. இந்தத் தரிசனத்தின் அடிப்படையில் புதிய சமூகப் பரிசோதனைகளை அவர் நிகழ்த்த விரும்பினார். மக்களை விழிப்புறச் செய்து, மனித உறவுகளை மேம்பாடு செய்து, மக்கள் சனநாயகத்தை கட்டி வளர்க்கும் புதுமையான வழிமுறைகளாகவே இந்தப் பரிசோதனைகளை அவர் முன்னெடுத்தார் அவரைப் பொறுத்தவரை, சீன பண்பாட்டுப் புரட்சியானது பொதுவுடமைச் சமூகக் கட்டமைப்பை நோக்கிய ஒரு புதிய நகர்வு.

பொருண்மிய கட்டமைப்பை மாற்றியமைத்தால் மனவுலக மாற்றத்திற்கும் அது வழி வகுக்கும் என்ற வைதீக மார்க்சியக் கருத்தை மாவோ ஏற்கவில்லை. பொருளுலகம் கருத்துலகை முற்றாக நிர்ணயிப்பதல்ல. காலம் காலமாக மனவுலகில் வேர் பதிக்கும் கருத்துக்கள், நம்பிக்கைகள் சமூகப் புறநிலை மாற்றத்தால் மறைந்து விடுவதல்ல. கருத்

பரம்பரையை அணிதிரட்டி, அவர்களை 'செம்படை' எனப் பெயரிட்டு, அவர்களுக்கு சகல அதிகாரங்களையும் வழங்கி, பழைமைக்கு எதிராக, பழைமையில் புதைந்து கிடக்கும் கட்சியின் பழம் பரம்பரைக்கு எதிராக பண்பாட்டுப் புரட்சியை அரங்கேற்றிவைத்தார் மாவோ.

மாவோவின் இலட்சிய நோக்கு உயர்ந்ததாக இருக்கலாம். ஆனால் பண்பாட்டுப் புரட்சி இந்த நோக்குகளை நிறைவு செய்யவில்லை. மாறாக, பேரழிவையே விளைவித்தது.

சீன பண்பாட்டுப் புரட்சிபற்றி பலநூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன. மார்க்சிய தத்துவாசிரியர்கள் பலர் மதிப்பாய்வுக் கட்டுரைகளை எழுதியிருக்கிறார்கள். பல கோணத்தில் இந்த மாபெரும் வரலாற்று நிகழ்வு விமர்சிக்கப்பட்டிருக்கின்றது. இவை எல்லாம் சீனாவுக்கு வெளியேயிருந்து சீனம்பற்றி பார்க்கப்பட்ட பார்வைகள். உள்ளார்ந்த அனுபவமின்றி நிகழ்த்தப்பட்ட புறநிலை நோக்குகள். ஆனால் சீனாவிலிருந்து, சீன வரலாற்றுத் தரிசனத்துடன் எழுதப்பட்ட நூல்கள் மிகவும் சொற்பம். இந்த வகையில். யுங் சாங் எனப்படும் சீனப் பெண்மணி எழுதியுள்ள 'காட்டு அன்னங்கள்; சீனாவின் மூன்று புதல்விகள்' (Wild Swans ;Three Daughters of China) என்ற நூல், சீனப் பண்பாட்டுப் புரட்சியின்போது நிகழ்ந்த அனர்த்தங்களை, சுயஅனுபவப் பார்வையில் தத்துரூபமாக சித்தரிக்க முனைகிறது.

இருபதாம் நூற்றாண்டின் சீனவரலாறு மிகவும் சிக்கலானது. நீண்டது. மிகவும் கொந்தளிப்பானது. ஜப்பானின் ஆதிக்க பிடிக்குள் சிதைந்துகிடந்த சீனம், நிமிர்ந்து எழுந்து போராடி, மிகவும் பலம் பொருந்திய பொதுவுடமை சமூகமாக தன்னை நிலைநிறுத்திக் கொண்ட ஒரு யுக வரலாறு. இப்படியானதொரு நீண்ட,புரட்சிகர நிகழ்வுகளைக்கொண்ட சிக்கலான வரலாற்றுப் பின்புலத்தில் மூன்று பெண்களின் சுயசரிதம் பதியப்படுகிறது. தனது பாட்டி, தனது தாய், தன்னுடையதாக, மூன்று பரம்பரையை உள்ளடக்கி, தனது குடும்பத்தின் வாழ்வனுபவத்தை தேசத்தின் அகன்ற வரலாற்றனுபவத்துடன் பின்னிப் பிணைந்து இந்த சுயசரித ஆக்கத்தைப் படைத்திருக்கிறார் நூலாசிரியை.

எழுநூறு பக்கங்களைக் கொண்ட பெரிய நூல். நீண்டதொரு சமூக நாவல்போன்று கதை நகர்த்தப்படுகின்றது. சீன சமூக வாழ்வும், அதில் இழையோடும் சமூக உறவுகளும், அந்த உறவுகளைத் தாங்கி வரும் பாத்திரங்களும், அந்தப் பாத்திரங்கள் வெளிப்படுத்தும் நுண்ணிய மனவுணர்வுகளும் ஏக்கங்களும் மிகவும் நுட்பமாக சித்தரிக்கப்படுகிறது. ஒரு

கம்யூனிஸ்ட் உயர் அதிகாரிகளையும் பண்பாட்டுப் புரட்சி விட்டு வைக்கவில்லை. யுங் சாங்கின் பெற்றோர்கள் மீது 'எதிர்ப்புரட்சியாளர்' என்ற குற்றம் சுமத்தப்படுகிறது. முதலில் தந்தையும், பின்னர் தாயாரும் கைதாகின்றனர்.

இரகசிய விசாரணைகளில் இழிவுபடுத்தப்பட்டு கண்டனக் கூட்டங்களில் அவமதிக்கப்பட்டு தடுப்பு முகாம்களில் வதைபட்டு பெற்றோர்கள் கொடுமைக்கு ஆளாக,யுங் சாங்கின் குடும்பம் சிதைகிறது. தாய் மனமுடைந்து நோயாளியாக, தந்தைக்கு பைத்தியம் பிடிக்கிறது. இந்த அவலமான சூழ்நிலையில் செம்படையில் சேவையாற்ற நிர்ப்பந்திக்கப்படுகிறார் யுங் சாங். அந்த இளைஞர் பட்டாளம் நிகழ்த்திய அனர்த்தங்கள் அவரைத் திகைக்க வைக்கிறது. தனிப்பட்ட சோகமும் சமூகத்தின் அவலமும் தன்னைச் சூழ நிகழ்ந்துகொண்டிருக்கும் அராஜகமும் - எல்லாமே அபத்தமாக, அர்த்தமற்ற கேலிக்கூத்தாக அவருக்கு தென்பட்டது.

கட்டுக்கடங்காத காட்டாறுபோல சீற்றம் கொண்டு பாய்ந்த புரட்சி வெள்ளம் நாடெங்கும் பேரழிவைஏற்படுத்தியது.இலக்கற்றநோக்கற்ற இளைஞர் வன்முறையால் எத்தனையோஅப்பாவிகள் பழி வாங்கப்படுகின்றனர். யுங் சாங்கின் கண் முன்னே இந்தக் கொடுமை நடக்கிறது. பழமைவாதிகள் என்றும் துரோகிகள் என்றும் எதிர்ப் புரட்சியாளர் என்றும் முதலாளித்துவப் போக்காளர் என்றும் பிற்போக்குப் புத்திஜீவிகள் என்றும், பலர் வேட்டையாடப்பட்டு இம்சைப்படுத்தப்பட்ட சோக நிகழ்வுகளை அவர் மிகவும் உருக்கமாக எழுதுகிறார்.

பண்பாட்டுப் புரட்சி, மனிதர்களை மட்டுமன்றி உடைமைகளையும் விட்டு வைக்கவில்லை- நூல்கள், சிற்பங்கள், ஓவியங்கள், அரும் பழம்பொருட்கள் என்ற வகையில் பழைமையைச் சித்தரித்த பண்பாட்டுச் சின்னங்கள் அனைத்துமே நாசமாக்கப்பட்டன. கலையம்சம் பொருந்திய பல புராதனக் கட்டிடங்கள் கூட இடித்து தகர்க்கப்பட்டன- மார்க்சிய நூல்கள் மாவோவின் எழுத்துக்கள் தவிர்ந்த ஏனைய படைப்புகள், பழம்பெரும் இலக்கியங்கள், தத்துவங்கள், சாஸ்திரங்கள்,மேலைநாட்டு நூல்கள் எல்லாமே பண்பாட்டுப் புரட்சித் தீயில் பொசுக்கப்பட்டதாக கூறுகிறார் நூலாசிரியை. புத்தகங்கள் மலைமலையாகக் குவிக்கப்பட்டு எரிக்கப்பட்ட கோரக் காட்சிகள் யுங் சாங்கின் ஆன்மாவைச் சுட்டு விடுகிறது. பண்பாட்டுப் புரட்சி சீன கலாச்சாரப் பொக்கிஷங்களையே அழித்து விட்டதாக அவர் மனம்வெந்து எழுதுகிறார். இந்தக் கோரத்தாண்டவத்தை நிகழ்த்திய சீன தலைமைமீது அவருக்கு கோபாவேசம் பொங்குகிறது. மாவோமீது முழுப் பழியையும் சுமத்துகிறார்.

ஆன்மாவை இழந்த மனிதர்களாக எதற்கும் பணிந்துகொடுக்கும் பொம்மைகளாக, சீன விவசாயிகளை அவர் விபரிக்கிறார். இது மிகவும் தவறான கணிப்பு. ஒரு அபத்தமான பார்வை- சீன விவசாய வர்க்கமானது நவசீனத்தின் முதுகெலும்பு. ஜப்பானிய ஆதிக்கத்திற்கு எதிராக, சீன பிரபுத்துவக் கொடுமைக்கு எதிராக, தேச விடுதலைவேண்டிப் போரிட்ட மாபெரும் மக்கள்சக்தியை யுங்சாங் இழிவுபடுத்த முயல்வது அவரது முதிர்ச்சியற்ற பார்வையை எடுத்துக் காட்டுகிறது. நகரப்புற வாழ்வும், உயரதிகார வர்க்கப் பின்னணியும் இப்படியானதொரு தீட்சண்யமற்ற நோக்கிற்கு காரணமாக அமைந்திருக்கலாம்.

## பிரம்மஞானி

சீனாவை ஒரு நரகமாகவும் மேற்குலகை ஒரு சுவர்க்கமாகவும் அவர் வர்ணிக்கிறார். மேற்குலகில் அழகான ஆடைகள் இருக்கின்றன, வாசிப்பதற்கு நிறையப் புத்தகங்கள் இருக்கின்றன, பார்த்து ரசிக்கப் பூக்கள் இருக்கின்றன, பொழுதுபோக்கிற்கு களியாட்டங்கள் இருக்கின்றன, என்றெல்லாம் மிகவும் சிறுபிள்ளைத்தனமாக எழுதுகிறார். மேற்குலக நாகரிகம் உயர்ந்தது என்று சொல்கிறார். மேற்குலகில் பண்பு இருக்கிறது, அன்பு இருக்கிறது, காருணியம் இருக்கிறது, வன்முறை அகன்ற மென்முறை இருக்கிறது, அமைதி இருக்கிறது, வர்க்க வேறுபாடற்ற சகோதரத்துவம் இருக்கிறது, என்றெல்லாம் அவர் எழுதுவதைப்பார்க்கும்பொழுது வேடிக்கையாக இருக்கிறது. மேற்குலகில் நிலவும் சமூகமுரண்பாடுகளையும், சீர்கேடுகளையும்வன்முறைகளையும்அவர்கண்டுகொள்ளாதது வியப்பாக இருக்கிறது. அத்துடன் உலக காலனித்துவ வரலாற்றையும் இந்த நூற்றாண்டின் ஐரோப்பிய வரலாற்றையும் அவர் செம்மையாகப் படிக்கவில்லை எனத் தோன்றுகின்றது. சீனம் ஒரு பெரிய பூதம், மஞ்சள் பூதம், ஆபத்தான பூதம். அதனை நிரந்தரத் தூக்கத்தில் வைத்திருப்பது அவசியமென மேற்குலகம் சீன மக்களிடையே அபின்போதையை ஊக்குவித்த வரலாற்று நிகழ்வுகள் எதுவும் அவருக்கு தெரியாததுபோல; குருட்டுத்தனமான மேற்குலக மோகம், நாட்டுப்பற்றை அவரிடம் மழுங்கடித்து விட்டிருக்கிறது. பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னரே அவர் நாட்டைவிட்டு ஓடி லண்டனில் தஞ்சம் புகுந்திருக்கிறார். நாடு பெயர்ந்திருக்கும் அவருக்கு லண்டன் சுவர்க்கமாகத் தெரிகிறது போலும்.அவரது இன்றைய சீமை அனுபவங்கள் எமக்குத்தேவைப்படாது. ஆனால் அவரது அன்றைய சீன அனுபவங்கள் எமக்கு பயன் தரக்கூடியது.

நன்றி: வெளிச்சம்

---

# தி. உதயசூரியன் மாறாத மனங்கள் (சிறுகதைத் தொகுப்பு) ஒரு பார்வை

ஈழத்து இலக்கிய உலகில் உச்சத்தை தொடும் அளவில் இல்லாவிடினும் கூட மிக யதார்த்தமான வாழ்வனுபவங்களுடன் கூடிய சிறுகதைகள் ஏராளம் படைக்கப்பட்டுள்ளன- இன்றும் படைக்கப்பட்டு வருகின்றன

இவ்வாறான இலக்கியத்தை 'பிரபலங்களை' விட அறிமுக எழுத்தாளர் நிறைய படைக்கின்றனர்

தி. உதயசூரியன் என்கிற அறிமுக எழுத்தாளர் சமீபத்தில் வெளியிட்ட 'மாறாத மனங்கள்' என்னும் சிறுகதை தொகுப்பில் சிறப்பான சிறுகதைகள் சில உள்ளடங்கியிருக்கின்றன.

பத்துக் கதைகள் கொண்ட இந்த நூலில்- ''உணர்வுகள் ஊசலாடுகின்றன'' தப்புத் தாளங்கள், இரவல் கொள்ளி, காலத்தின் தேவை ஆகியவை கருத்துச் செறிவுடன் காத்திரமான உள்ளடக்கத்துடன் கலா பூர்வமாக படைக்கப்பட்ட கதைகள். இக் கதைகளின் ஊடாக ஆசிரியரின் கதை நகர்த்தும் சிறப்பை தரிசிக்க முடிகிறது.

மற்றும் 'மாறாத மனங்கள்' எயர்போட் திருமணங்கள், காஞ்சனா வித்தியாசமானவள், ஏமாற்றங்கள் ஆகிய கதைகள் யதார்த்தத்திலிருந்து விலகி கதை 'பண்ணப்பட்ட' தன்மையை வெளிப்படுத்தி நிற்கின்றன. இவற்றை சாதாரண கதைகளாகக் கொள்ளலாம்.

'தப்புத் தாளங்கள்' சிறுகதையை எடுத்துக் கொண்டு நோக்கினால், முதல்தொலைபேசி அறிவிப்பில் சிக்கல் முடிச்சாகக் கட்டப்படுகின்றது. அடுத்த தொலைபேசி அறிவிப்பில் முடிச்சு அவிழ்கின்றது. அற்புதமாக கதை நகர்த்தப்பட்டிருக்கின்றது.

வெளிநாடொன்றில் பல வருடங்கள் தொழில் புரியும் கணவனுக்கு இங்கு வாழும் மனைவியைப் பற்றிய புதிய செய்தி போகின்றது.

அடுத்த செய்தி கணவனை முடிவெடுக்க வைக்கின்றது.

'இரவல் கொள்ளி' கதையின் உள்ளடக்கம், உத்தி அற்புதமானவை. இந்த நூலாசிரியர் தனது ஆற்றலை இக்கதையில் முழுமையாக வெளிப்படுத்தியுள்ளார் எனச் சொல்லலாம்.

வெளிநாட்டிற்கு பிள்ளையை அனுப்பி வைத்துவிட்டுத் தவிக்கும் உள்ளங்களின் கொந்தளிப்பை...... அவலத்தை ஆசிரியர் அழகாகச் சித்திரித்துள்ளார்.

இதே மாதிரி 'காலத்தின் தேவை' என்கிற கதையும் உள்ளது. சாதாரண கருப்பொருள் பல பாத்திரங்கள் ஊடாக வடிவமாக்கப்பட்டுள்ளது.

'ஏமாற்றங்கள்' என்கிற கதையில் பல முரண்பாடான தன்மைகளைக் காண முடிகின்றது.

சுந்தரம் வாசிக்கின்ற புத்தகம், 'அலுப்புத் தட்டுகின்ற ஒரு காதல்கதை. வாழ்க்கையின் சாராம்சத்தை-அதன் சிக்கல்களை அதில் தரிசிக்க முடியவில்லை' என ஆசிரியர் கூற்றாகச் சொல்லப்படுகின்றது. பின் அடுத்து வரும் ஒரு பந்தியில்-

காதலித்தவளை கைப்பிடிக்க மாப்பிள்ளை சீதனம் என்ற பெயரில் இரண்டு இலட்சம் கேட்டு கல்யாணம் குழம்பும் கட்டம் ஒன்று வந்தது என குறிப்பிடப்பட்டுள்ளது.

காதல் கதையில் சீதனக் குழப்பம் வந்தால் அது வாழ்க்கையின் சாராம்சம் அற்ற கதை என அர்த்தமா? முரண்கள் தவிர்க்கப்பட வேண்டும்.

(7ஆம் பக்கம் பார்க்க)

**வவுனியா திலீபன்**

### 'இரவல் கொள்ளி' கதையிலிருந்து...

ஆச்சிக்கு உடைச்சபடி வாங்கின கடிதத்திலை திருப்தியில்லாமல் இருந்தது. கடிதத்திலை வாற நன்மை தீமைகளையெல்லாம் 'தணிக்கை' பண்ணியே அயலட்டைக் கெண்டாலும், இனசனத்திற்கு எண்டாலும் கூறுவது வழக்கம். உடைச்சிருந்த கடிதத்தை யார் யார் வாசித்தார்களோ என்று கிலேசத்துடன் கடிதத்தை படிக்கத் தொடங்கினாள்.


# ‘படை இல்லாத படையெடுப்பு’

# இந்திய சமூகத்தின் உயிர்நாடி மீது தாக்குதல்

கயிற்றை விட்டு வாலைப் பிடித்த கதை போலாகி விட்டது இன்றைய இந்திய பத்திரிகையாளர் நிலை, இன்று இந்திய அரசு மிகப் பிரபலமான வெளிநாட்டு வணிக நிறுவனங்கள் உள்நாட்டில் செய்தியேடுகள், சஞ்சிகைகளை வெளியிட அல்லது உள்நாட்டில் கூட்டு முயற்சிகளின் அடிப்படையில் தொடர்பு சாதனத் துறையினை ஆக்கிரமிக்க வழி வகுக்க தயாராகி விட்டது. இது தொடர்பாக நரசிம்மராவ் நியமித்த ஐந்து அமைச்சர்களைக் கொண்ட குழுவில் பெரும்பான்மையாளர் வெளிநாட்டு நிறுவனங்கள் அனுமதிக்கப்பட வேண்டும் என அறிக்கை சமர்ப்பித்ததாக இப்போது தெரியவந்துள்ளது இப்பரிந்துரைக்குமிகப்பெரிய எதிர்ப்பினை இன்று இந்தியாவின் புகழ்பெற்ற மூத்த செய்தி இதழ் நிறுவனங்கள் தெரிவிக்கின்றன. இந்தியாவின் இறைமையே தாரை வார்க்கப்படுவதாக பெரும் எதிர்ப்புக்குரல் எழுப்பப்படுகின்றது. இது ஒரு வகை புதிய குடியேற்றவாதம் என்றும் இந்தியாவின் தேசிய அடையாளமே இதனால் சிதைக்கப்படப் போவதாக N ராம் உட்பட K கிருஷ்ணஐயர் போன்றோர் பெரும் கண்டனத்தை தெரிவித்து வருகின்றனர். ஆனால் இந்திய அரசோ வழமைபோல சருவதேச போட்டிக்கு இந்திய தொடர்பு சாதனத்துறையும் திறந்துவிடப்படவே வேண்டும் அப்போதுதான் தரம் கூடுமென்றும் அத்தோடு இந்திய பொருண்மியத்தின் சகல துறைகளுமே கட்டுப்பாடுகளற்ற தாராளவாத நிலைக்கு உட்படுத்தப்படும் போது இத்துறை மட்டும் எவ்வாறு விதிவிலக்காக இருக்க முடியும் என வாதிடுகின்றது. அத்தோடு சருவதேச போட்டியாளர்களை சந்திக்க முடியாத அளவிற்கு இந்திய பத்திரிகைத்துறை என்ன அவ்வளவு பலவீனமான நிலையில் இருக்கின்றதா எனக் கேள்வியும் எழுப்புகின்றது.

## மேடொக் வருகிறார்

வில் கூட்டு முயற்சிகளை ஆரம்பிக்க சகல முன்னேற்பாடுகளையும் செய்யத் தொடங்கிவிட்டதாக தெரிகின்றது. இலண்டனின் புகழ்மிக்க ‘‘பினான்சியல்ரைம்ஸ்’’ (The Financial Times) அமெரிக்காவின் பாரிய ‘ரைம்’ (Time) இதழ் நிறுவனம் போன்றவை இதனுள் அடங்கும். அதிலும் குறிப்பாக அமெரிக்க முதலாளியத்தின் குறியீடான ரைம் இந்திய முதலாளியத்தின் வெளியீடான ‘இந்தியாடுடே’ நிறுவனத்தோடு கூட்டுச் சேர்ந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. ஆனால்



றூபேர்ட் மேடொக்
முடிசூடாத சக்கரவர்த்தி

இவை எல்லாவற்றையும் விட இந்திய உள்ளூர் பத்திரிகையாளர்களை தொடர்புசாதன துறையாளர்களை அதிகம் அலைக்கழிப்பது செய்தி உலக சாமிராச்சியத்தின் ஏக அதிபதியாக வருணிக்கப்படும் றூபேர்ட் மேடொக்கின் (Rupert Murdoch) இந்திய வருகைதான். கடந்த மார்ச் மாதம் இந்தியா வந்திருந்த மேடொக்கின் வருகை ஒரு பிரபல நாட்டின் அரசியல் தலைவர் ஒருவரின் வருகை போலமைந்தது. பலத்த வரவேற்பு பெருத்த விளம்பரங்கட்கு மத்தியில் அவர் பிரதமர் ராவ் உட்பட தேவையான சகல தலைவர்களையும் சந்தித்து பேச்சுக்கள் நடாத்தினார். பிரதமர் நரசிம்மராவ் இந்தியா தொன்மையான பலவகை பண்பாடுகளைக் கொண்ட பாரம்பரிய நாடல்ல என்றும் மேடொக்கோ மேற்குலகின் தொடர்பு

மாக மேடொக்கின் வருகை இவர்களால் கணிக்கப்படுகின்றது.

எனவே யாரிந்த மேடொக்? ஒரு தனிமனிதன் தொடர்பாக இவ்வளவு பரபரப்பா? எனக் கேள்விகள்எழுகின்றன. மேடொக் என்றாலே பலருக்கு பீங்கான் கடைக்குள் புகுந்த எருமையின் ஞாபகம் தான் வரும். அவரது திகைப்பூட்டும் விசித்திரமான ஆனால் திமிர்த்தன்மையான வணிக நடவடிக்கைகள் பணத்தை வாரியிறைத்து உலகெங்கும் பிரபல செய்தி நிறுவனங்களை, செய்தி இதழ்களை, ஒளிபரப்பு அமைப்புக்களை வாங்கிக் குவித்தல், மாக்கிரட் தாட்சர், றீகன் போன்றோரை தனது அரசியல் வழிகாட்டியாக கொள்ளும் அவரது பிற்போக்கான அரசியல் பாங்கு அவ்வந் நாடுகளின் அரசியலில் சொந்த நலனுக்காக தலையிடல் போன்றவை பெரும் சந்தேகத்தை எவர்க்கும் ஏற்படுத்தத்தக்கவை. இப்போது ஐரோப்பா அமெரிக்காவை விட்டு அதிக கவனம் அவர் ஆசியாவில் செலுத்துகின்றார். குறிப்பாகதென்னாசியப் பிராந்தியத்திலும் விசேட கவனம் கொள்கின்றார். இன்றுஆசிய மக்களை காந்தம் போல கவர்ந்திழுக்கும் கவர்ச்சி மிகு பொழுது போக்கு நிகழ்ச்சிகளை வாரி வழங்கும் ஸ்டார்டி.வியை START V Satellite Television Asia Region) மிகப் பரபரப்பான வணிக நடவடிக்கையொன்றின்மூலம் இவர் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து விட்டார் அதுபோலவே ZeeTV எனப்பல. இந்தி மொழி தொலைக்காட்சி அமைப்பை இப்போது அவர் விலைக்கு வாங்க முயல்வது இந்தியாவில் பலருக்கு வயிற்றில் புளியைகரைக்கின்றது.

## மேடொக்கின் கழுத்தறுப்புக்கள்

இன்று மேற்குலக தொடர்பு சாதன பத்திரிகை உலகம் கொனார்ட் பிளெக் (Conard Black), றெயினார்ட் மோன்ஸ் (Reinhard Mohns), றொபேர்ட் மக்ஸ்வெல் போன்ற ஒரு சிலரின் கட்டுப்

வேசம் பிரித்தானியாவின் ‘த சண்’ (The sun) த ரைம்ஸ் ‘சண்டே ரைம்ஸ்’ போன்ற பத்திரிகைகள் கொள்வனவோடு ஆரம்பமானது. இக் கதைஇன்னமும்முடியவில்லை. ஆயினும் இவர் இப்போது Print media எனப்படும் அச்சு ஊடகத்தைவிட மின்னியல் ஊடகங்களிலே (Electronic media) அதிக கவனம் செலுத்துகின்றார். பி.பி.சி. ஒளிபரப்பை அழிப்பதே நோக்கமென கூறி பிரித்தானியாவில் ஸ்கை ரி.வி. (Sky T.V.) என்றும், அமெரிக்காவில் பொக்ஸ் ரி.வி. (Fox T. V.) என்றும் பலசெய்ம்மதிஒளிபரப்புஅமைப்புக்களை இவர் கொண்டிருக்கின்றார். அத்துடன் இவரது தொடர்பாடல் சாதனங்கள் பரப்பும் கருத்துக்கள், காட்டும் மிக மோசமான பாலியல் வன்முறைக் காட்சிகள் விசித்திரமானநிலைகளுக்கு எவரையும் இட்டுச்செல்லும். விபரீதமான தோற்றப்பாடுகள் எல்லாமே மேற்குலகின் அறிஞர்களாலேயே நஞ்சென வெறுக்கப் படுபவை. அதுமட்டுமன்றி இவரது கழுத்தறுப்பு வணிக நடவடிக்கைகளோ மிக்க அபாயமானவை.

இன்று பிரித்தானியாவிலே பத்திரிகை உலகப் போரொன்றையே இவர் நடத்திவருகின்றார். அவர் அதிகம் விற்பனையாகும் ‘த டெய்லி ரெலிகிராப்’ நாளேட்டின் விற்பனையை குறைப்பதற்காக தனது த ரைம்ஸ் நாளேட்டின் விலையை 45 பென்சிலிருந்து 30 ஆகக் குறைத்தார். தனது விற்பனை சரிவதைக் கண்ட ரெலிகிராப் உரிமையாளர் கொனார்ட் பிளாக் தனது விலையை 48 இலிருந்து 30 பென்சாக்க தள்ளப்பட்டார். இப்போதேமேடொக்ரைம்சின் விலையை 20 பென்சாக குறைத்து பிரித்தானிய பத்திரிகை உலகிற்கே சாவுமணி அடிக்கின்றார். பணமுதலைகளின் இவ்விலைக்குறைப்பு போட்டியால் ‘த இன்டிபென்டன்ற்’ என்கிற தினசரி மூடப்படும் நிலையை அடைந்துவிட்டது. கார்டியன், பினான்சியல் ரைம்ஸ் போன்றவையே பெருத்த நெருக்கடிகளுக்குள்ளாவதாக தெரிகின்றது. தொடக்கத்தில் பாரியநட்டம்

உலகை ஆக்கிரமிப்பு செய்ய முனைகிறார் என்றில்லை.

## மக்டொனால்சும் கென்ரக்கியும்

இப்போது இன்னொரு முனையிலே பாரிய கலாச்சாரப் படையெடுப்பு நடக்க எல்லாம் ஆயத்தமாகிவிட்டது. இக் கலாச்சாரப் படையெடுப்பினை நிகழ்த்தப்போகும் நிறுவனத்திற்கு இந்திய அரசே வெற்றிலை வைத்து வரவேற்பதுதான் இங்கு குறிப்பிட வேண்டியசெய்தி. இதனையே அழைப்பு வைத்தழைக்கப்படும் குடியேற்றவாதம் (Colonisation by invitation) என இந்திய அரசியல் விமரிசகர் ஒருவர் அழைக்கின்றார். அமெரிக்காவின் மிகப் பாரிய கூட்டு வணிக நிறுவனமான ‘ரைம்வார்னர்’ (Time-Warner Group) குழுமத்தின் துணையமைப்பான வார்னர் சகோதரர் திரைப்பட நிறுவனம் இந்தியாவில் 200க்கு மேற்பட்ட-ஒரேஇடத்தில் சகலவித களியாட்ட வசதிகளைக் கொண்ட - கட்டிடத் தொகுதிகளை நிருமாணிக்க முடிவு செய்துள்ளது. ஒவ்வொரு கட்டிடத்தொகுதியிலும் 10 திரையரங்குகள், விரைவு உணவு விற்பனைக் கூடங்கள், மிக நவீன வீடியோ விளையாட்டுக்கள், களியாட்ட நடன விடுதிகள் என பலவித பொழுதுபோக்கு வசதிகளைக்கொண்டதாக இவை அமையும். ஒவ்வொரு தொகுதிக்கும் 15-20 கோடிவரை செலவாகும் என மதிப்பிடப்படுகின்றது. அமெரிக்க நுகர்வு கலாச்சார முதலாளியத்தின் குறியீடாக விளங்கும் மக்டொனால்ட் (Mc Donalds) கென்ரக்கி (Kentucky Fried Chicken) போன்ற சருவதேச விரைவுணவுக் குழுமங்களையும் இவற்றோடு இணைக்க முயலப்படுகின்றது தனதுநோக்கம் நலிந்து போகும் இந்திய திரைப்படத் தொழிலை உயர்த்துவதும் 4-6 மணித்தியாலங்களுக்கு இடைப்பட்ட பொழுதுபோக்கு மகிழ் நேரமொன்றை இந்தியக் குடும்பங்கட்கு வழங்குவதும் தான் என்கின்றனர் வார்னர் சகோதரர். ஆனால் கடந்த வருடம் 500

தலையீடுஆக்கிரமிப்பாகமாறப்போகின்றது என்பதே உண்மைநிலை (யுராசிக்பாக்ஆங்கில மொழி பேசும் படத்தை விட இந்தியில் மொழி மாற்றம் செய்யப்பட்ட இப்படம் ஆகக் கூடிய வருமானத்தை அள்ளி கொடுத்துள்ளது)

இங்குஇந்தியஉள்ளூர்தொடர்புசாதன உரிமையாளர்களைப் பெரிதும் வாட்டுவது என்னவென்றால் இந்திய மாநில அரசுகள் பல இத்தகைய முயற்சிகட்கு முக்கிய நகர மையங்களில் நிலங்களும், வட்டியில்லாக் கடன்களும், 7 வருடத்திற்கு களியாட்ட வரியிலிருந்து விலக்கும் அளிக்க முன்வந்திருப்பது தான்.

## நியாயமான அச்சம்

எனவேதான் இன்று இந்திய தரப்பில் அறிவாளர், பத்திகையாளர், நாட்டு நலன் காப்போர் என்போர் மத்தியிலிருந்து பெரும்அச்சம் கிளப்பப்படுகின்றது. தொடர்பு சாதனங்களைக் கருவியாக்கி தொடர்பாடல் மூலம் இந்தியாவில் புகுத்தப்படப் போகும் மேற்கத்தைய முதலாளிய நுகர்வுப் பாங்கிலான இழிவுக் கலாச்சாரம் ஒரு புறம், மேற்கத்தைய ஆதிக்க அரசியல் கருத்துக்கள் புகுத்தப்படல் இன்னொரு புறம்- இவை இறுதியில் இந்திய அரசியலில் இவை தலையிட வழிவகுக்கும் என்பது பிரதான அச்சம். அத்தோடு

## பாலகுமாரன்

இன்று இந்தியாவில் மிக வேகமாக வளர்ந்து வரும் உயர் மத்திய வகுப்பினை அதிலும் குறிப்பாக அதன் இளைய உலகத்தை குறி வைத்து தாக்கப் போகும் இக் கலாச்சாரப் படையெடுப்பால் பெரும் சமூகச் சிக்கல் தோன்றும் என சமூகவியலாளர் வேறு கவலை தெரிவிக்கின்றனர். ஆனால் மேற்குலகமோ தன் வழிக்கு வசமாக வந்துள்ள இந்திய பொருண்மியத்தை முற்றிலும் திறந்தபோட்டிச் சந்தை பொருண்மிய முறைக்கு முற்றிலுமாக தள்ளிவிட இந்தியாவின் இறுக்கமான கருத்துலகம் மாற்றப்பட வேண்டும் என்பதில் மிகத் தெளிவாகவே உள்ளது. எனவே நவ முதலாளியத்தின் கலாச்சாரத் தூதுவனாக புதுவகை நுகர்வுப் பாங்கொன்றின் கதாநாயக

மாற்றங்கள் செல்கின்றன. அதுமட்டுமன்றி எதிர்வரும் காலத்தில் இந்தியாவின் அரசியல் போட்டியாளராக அமையப்போகும் சீனா, யப்பான் மற்றும் கிழக்காசிய நாடுகள் இப்போது அடுத்த பாய்ச்சலுக்கு தயாராகிவிட்டன.

## தொழில்நுட்ப பெரு வீதி

இப்பாய்ச்சலானது- இன்று உலகில் ஒரு சூறாவளியின் மையம் போல் அமைதியாக ஆனால் பெரும் வீச்சோடு அரங்கேறும் நவின தொடர்பு சாதன உலகப் புரட்சியோடு தொடர்புடையது. இதன் மையமாக அமைவது தான் செய்ம்மதி தொலைக்காட்சி ஒளிபரப்புக்கள் (Satellite TelevisionTrans--missions) இதன் உச்சமாக அமைவது தான் தகவல் தொடர்பு அதி உயர் நெடுஞ்சாலை எனப்படுகின்றது (InformationSuper Highway) கணனிகளையும், நவீன தொலைத் தொடர்பு சாதனங்களையும் ஒன்றிணைத்து தனது வாடிக்கையாளரின் தேவைகளை, விருப்புக்களை அவரது இல்லத்தின் அறைக்குள்ளே நிறைவேற்றும் இப் பெருவீதி நுட்பத்தை பயன்படுத்தும் நிறுவனங்கள் இப்போது ஆசியாவிலும் தமது வருகையை அறிவிக்கின்றன. இதன் வருகையை முன்னிட்டு யப்பான், கொங்கொங், சிங்கப்பூர், ஏன் சீனா கூட தம்மை தயார்ப்படுத்துகின்றன. இன்னுமொரு 5 வருடத்திற்குள் இப்பெருவீதி தொழில்நுட்பம் ஆசியாவிலும் சாத்தியப்படும் எனப்படுகின்றது. எனவே தான் இந்த பாய்ச்சலுக்கும் ஈடுகொடுக்க வேண்டிய நிலை இந்தியாவுக்கு; இத்தகு தனது தொடர்பு சாதனத்துறையை வெளியார் தலையீட்டிற்கு உட்படுத்த வேண்டிய நிலை. இதன் தீயவிளைவுகள் பற்றி இந்தியா இப்போதைக்கு சிந்திக்கப் போவதில்லையென்பது மிகத் தெளிவு-

எனவே இப்போது மேற்குலகம் தனது முதலாளிய பொருண்மிய விரிவாக்கத்திற்கு தேவையான கருத்துக்கள் உற்பத்தி செய்து இந்தியாவில் வினியோகிக்க தயாராகிவிட்டது- இதன் விளைவுகள் என்னவாகப் போகின்றது என்பதைப் பொறுத்தே இந்திய எதிர்காலம் அமையப் போகின்றது-ஆனால்இதுசாதாரண இந்தியக் குடிமகனுக்கு எவ்

சோ வழமைபோல சருவதேச போட்டிக்கு இந்திய தொடர்பு சாதனத்துறையும் திறந்துவிடப்படவே வேண்டும் அப்போதுதான் தரம் கூடுமென்றும் அத்தோடு இந்திய பொருண்மியத்தின் சகல துறைகளுமே கட்டுப்பாடுகளற்ற தாராளவாத நிலைக்கு உட்படுத்தப்படும் போது இத்துறை மட்டும் எவ்வாறு விதிவிலக்காக இருக்க முடியும் என வாதிடுகின்றது. அத்தோடு சருவதேச போட்டியாளர்களை சந்திக்க முடியாத அளவிற்கு இந்திய பத்திரிகைத்துறை என்ன அவ்வளவு பலவீனமான நிலையில் இருக்கின்றதா எனக் கேள்வியும் எழுப்புகின்றது.

## மேடொக் வருகிறார்

இந்திய பொருண்மிய அமைப்பில் மறு சீரமைப்பின் நாயகனான நிதியமைச்சர் மன்மோகன் சிங் நிச்சயம் அனுமதி பெற்றுத் தருவார் என்கிற நம்பிக்கையில் பல வெளிநாட்டு தொடர்பு சாதன நிறுவனங்கள் இந்தியா யாளர்களை தொடர்புசாதன துறையாளர்களை அதிகம் அலைக்கழிப்பது செய்தி உலக சாமிராச்சியத்தின் ஏக அதிபதியாக வருணிக்கப்படும் றூபேர்ட் மேடொக்கின் (Rupert Murdoch) இந்திய வருகைதான். கடந்த மார்ச் மாதம் இந்தியா வந்திருந்த மேடொக்கின் வருகை ஒரு பிரபல நாட்டின் அரசியல் தலைவர் ஒருவரின் வருகை போலமைந்தது. பலத்த வரவேற்பு பெருத்த விளம்பரங்கட்கு மத்தியில் அவர் பிரதமர் ராவ் உட்பட தேவையான சகல தலைவர்களையும் சந்தித்து பேச்சுக்கள் நடாத்தினார். பிரதமர் நரசிம்மராவ் இந்தியா தொன்மையான பலவகை பண்பாடுகளைக் கொண்ட பாரம்பரிய நாடல்ல என்றும் மேடொக்கோ மேற்குலகின் தொடர்பு சாதனங்கள் இந்தியாவை தகுந்த முறையில் பிரதிபலிக்கவில்லையென்றும் தான் அதை சரி செய்யப்போவதாகக் கூறியதும் இந்திய பத்திரிகையாளர், செய்தித் தொடர்பாளர் மத்தியில் பெரும் எரிச்சலை கூட்டியது. பெரும் விபரீதமொன்றின் தொடக்க

Region) மிகப் பரபரப்பான வணிக நடவடிக்கையொன்றின்மூலம் இவர் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து விட்டார் அதுபோலவே ZeeTV எனப்பல. இந்தி மொழி தொலைக்காட்சி அமைப்பை இப்போது அவர் விலைக்கு வாங்க முயல்வது இந்தியாவில் பலருக்கு வயிற்றில் புளியைகரைக்கின்றது.

## மேடொக்கின் கழுத்தறுப்புக்கள்

இன்று மேற்குலக தொடர்பு சாதன பத்திரிகை உலகம் கொனார்ட் பிளெக் (Conard Black), றெயினார்ட் மோன்ஸ் (Reinhard Mohns), றொபேர்ட் மக்ஸ்வெல் போன்ற ஒரு சிலரின் கட்டுப்பாட்டிலிருந்தாலும் மேடொக்கின் ஆதிக்கமோ எல்லைகடந்தவை. இவரின் வரலாறு 1970 களின் பிற்பகுதியிலே உச்சம் பெறத்தொடங்கியது. அதற்கு முன் இவர் அவுத்திரேலியாவின் மாநில மொன்றின் சிறிய நாளேடு ஒன்றினை நடத்திவந்தார். இவரது பிர

னையை குறைப்பதற்காக தனது த ரைம்ஸ் நாளேட்டின் விலையை 45 பென்சிலிருந்து 30 ஆகக் குறைத்தார். தனது விற்பனை சரிவதைக் கண்ட ரெலிகிராப் உரிமையாளர் கொனார்ட் பிளாக் தனது விலையை 48 இலிருந்து 30 பென்சாக்க தள்ளப்பட்டார். இப்போதேமேடொக்ரைம்சின் விலையை 20 பென்சாக குறைத்து பிரித்தானிய பத்திரிகை உலகிற்கே சாவுமணி அடிக்கின்றார். பணமுதலைகளின் இவ்விலைக்குறைப்பு போட்டியால் 'த இன்டிபென்டன்ற்' என்கிற தினசரி மூடப்படும் நிலையை அடைந்துவிட்டது. கார்டியன், பினான்சியல் ரைம்ஸ் போன்றவையே பெருத்த நெருக்கடிகளுக்குள்ளாவதாக தெரிகின்றது. தொடக்கத்தில் பாரியநட்டம் ஏற்பட்டாலும் பின் முழு இலாபமும் தனக்கே என்பது மேடொக்கின் சித்தாத்தம். எனவேதான் மேடொக்கின் இந்திய பிரவேசம் கடுமையாக அங்கு எதிர்க்கப்படுகின்றது. ஆனால் மேடொக் மட்டும் தான் இந்தியக் கருத்து

பலவித பொழுதுபோக்கு வசதிகளைக்கொண்டதாக இவை அமையும். ஒவ்வொரு தொகுதிக்கும் 15-20 கோடிவரை செலவாகும் என மதிப்பிடப்படுகின்றது. அமெரிக்க நுகர்வு கலாச்சார முதலாளியத்தின் குறியீடாக விளங்கும் மக்டொனால்ட் (Mc Donalds) கென்ரக்கி (Kentucky Fried Chicken) போன்ற சருவதேச விரைவுணவுக் குழுமங்களையும் இவற்றோடு இணைக்க முயலப்படுகின்றது தனதுநோக்கம் நலிந்து போகும் இந்திய திரைப்படத் தொழிலை உயர்த்துவதும் 4-6 மணித்தியாலங்களுக்கு இடைப்பட்ட பொழுதுபோக்கு மகிழ் நேரமொன்றை இந்தியக் குடும்பங்கட்கு வழங்குவதும் தான் என்கின்றனர் வார்னர் சகோதரர். ஆனால் கடந்த வருடம் 500 திரையரங்கிற்கு மேல் மூடப்பட்ட நிலையில் வீழ்ச்சியை நோக்கிச் சரியும் இந்தியத் திரைப்படத் துறையை எவ்வாறு காப்பாற்றப்படப் போகின்றது என்பது ஒன்றும் இரகசியமல்ல. இந்திய திரைப்பட தயாரிப்பு வினியோகத் துறையிலும் வெளிநாட்டு

அதிலும் குறிப்பாக அதன் இளைய உலகத்தை குறிவைத்து தாக்கப் போகும் இக் கலாச்சாரப் படையெடுப்பால் பெரும் சமூகச் சிக்கல் தோன்றும் என சமூகவியலாளர் வேறு கவலை தெரிவிக்கின்றனர். ஆனால் மேற்குலகமோ தன் வழிக்கு வசமாக வந்துள்ள இந்திய பொருண்மியத்தை முற்றிலும் திறந்தபோட்டிச் சந்தை பொருண்மிய முறைக்கு முற்றிலுமாக தள்ளிவிட இந்தியாவின் இறுக்கமான கருத்துலகம் மாற்றப்படவேண்டும் என்பதில் மிகத் தெளிவாகவே உள்ளது. எனவே நவ முதலாளியத்தின் கலாச்சாரத் தூதுவனாக புதுவகை நுகர்வுப் பாங்கொன்றின் கதாநாயகனாக படை எடுப்பு ஏதுமில்லாமலே புதுவகை ஆக்கிரமிப் பொன்றினை செய்ய மேடொக் உட்பட எல்லோருமே தயராகி விட்டனர். எனவேஎவ்வகையிலும் இடைநிறுத்த முடியாத ஒரு நிலையை நோக்கி இந்தியப் பொருண்மியத்தின் புதிய

என்பப(டு)கின்றது. எனவே தான் இந்த பாய்ச்சலுக்கும் ஈடுகொடுக்க வேண்டிய நிலை இந்தியாவுக்கு; இத்தகு தனது தொடர்பு சாதனத்துறையை வெளியார் தலையீட்டிற்கு உட்படுத்த வேண்டிய நிலை. இதன் தீயவிளைவுகள் பற்றி இந்தியா இப்போதைக்கு சிந்திக்கப் போவதில்லையென்பது மிகத் தெளிவு-

எனவே இப்போது மேற்குலகம் தனது முதலாளிய பொருண்மிய விரிவாக்கத்திற்கு தேவையான கருத்துக்கள் உற்பத்தி செய்து இந்தியாவில் வினியோகிக்க தயாராகிவிட்டது- இதன் விளைவுகள் என்னவாகப் போகின்றது என்பதைப் பொறுத்தே இந்திய எதிர்காலம் அமையப் போகின்றது-ஆனால்இதுசாதாரண இந்தியக் குடிமகனுக்கு எவ்வித நன்மையும் பயக்கப் போவதில்லையென்பது மிகத் தெளிவு. சோவியத் சாமிராச்சியத்தை வீழ்த்தியவர்கள் இந்தியக் குட்டி சாமிராச்சியத்தை என்ன செய்ய உத்தேசித்திருக்கின்றார்கள் என்பதை நாம் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

# இந்தியாவைக் கலக்கும் கறுப்பு மரணம் உலக நாடுகளையும் விட்டுவைக்கவில்லை

“எலிகளைக்கொல்வோருக்கு விசேட கொடுப்பனவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதனையடுத்து பம்பாயில் வேலையில்லாது இருக்கும் பெருமளவு வறியவர்கள் எலிவேட்டையில் தீவிரமாகியுள்ளனர்”

“சூரத்பகுதி மருத்துவமனையில் இருந்து தப்பியோடிய 57 பிளேக் நோயாளிகளை மடக்கிப் பிடிக்கவும் தேடுதல் நடத்தவும் இந்திய இராணுவத்தில் விசேட பிரிவு அமைக்கப்பட்டுள்ளது” இவை இந்தியாவில் அண்மையில் பெரும் கலக்கத்தை ஏற்படுத்திய பிளேக் நோய் பரவலை தொடர்ந்து வெளியான இரு செய்திகள்.

இந்தியாவெங்கும் கொள்ளை நோயால் (பிளேக்) பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை இம்மாதம் முதலாம் திகதி எடுக்கப்பட்ட கணிப்பின்படி 2600 ஐ தாண்டிவிட்டது. மகராஷ்டிராவில் 1186 பேரும் குஜராத்தில் 777 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். கொள்ளை நோய்வெடித்த சூரத் நகரில் மட்டும் 614 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் டில்லியில் 339 பேரும் ராஜஸ்தானில் 164 பேரும் மேற்குவங்கத்தில் 11 பேரும் உத்தர பிரதேசத்தில் 8பேரும் ஆந்திரம், தமிழகம் மத்திய பிரதேசம் ஆகிய இடங்களில் தலா நான்கு பேரும் கோவாவில் மூவரும் கர்நாடகம் திரிபுரா பகுதிகளில் தலா இருவரும் இந்நோயால் பாதிப்புற்றுள்ளனர்.

**எயிட்ஸ்நோய் போலல்லாது பிளேக் நோய் குணப்படுத்தக் கூடியதாக இருந்த போதிலும் மேற்கு நாடுகள் இந்நோய் குறித்து அளவுக்கதிகமான பிரசாரத்தை மேற்கொள்வதாக இந்திய அரசு குற்றஞ்சாட்டுகிறது.**

30 வருடங்களின் பின் கறுப்பு மரணம் எனப்படும் இந்த கொடிய கொள்ளை நோய் மீண்டும் பயங்கர உருவெடுத்துள்ளது, பிளேக் எனும் இக்கொள்ளை நோய் இந் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்தியாவில் ஒரு கோடி 20 லட்சம் பேரை பலி கொண்டது பம்பாயில் சூரத் நகரில் இந்நோய் பரவும் செய்தி கேட்டவுடன் மூன்று லட்சத்திற்கும் அதிகமான மக்கள் அங்கிருந்து ஓட்டமெடுத்து விட்டனர் இப்போது பரவியிருக்கும் கொள்ளை நோய் இருவகையானது. பியூபோனிக் பிளேக் இது அக்குள் வீக்கத்தை ஏற்படுத்துவது. மற்றையது நியூமோனிக் பிளேக். இது நுரையீரலைத் தாக்கி வீக்கமேற்படுத்தும் பம்பாயில் கைவசம் மருந்துகள் இருந்ததால் நோயை கட்டுப்படுத்த முயன்றது உத்தியோக பூர்வமற்ற செய்திகளின்படி 100 பேர் வரை இறந்திருக்கலாம்.

பிளேக்கினால் பாதிப்புற்ற எலி இறந்ததும் எலிகளின் மீது மொய்க்கும் உண்ணி, தெள்ளு நுளம்பு போன்ற இரத்தத்தை உறிஞ்சிக்குடிக்கும் சிறகற்ற பூச்சியினங்களால் மனிதனுக்கு தொற்றுகிறது சூரத்திலிருந்து தப்பியோடிய லட்சக்கணக்கானோரில் அதிகமானோருக்கு நுரையீரலைத்தாக்கும்நியூமோனிக் பிளேக்நோயே தாக்கியிருந்தது இது நுரையீரலை சிகிச்சையிலலாவிடின் முற்றாக அழிக்கும் தன்மை கொண்டது.

அக்குள் வீக்கத்தை ஏற்படுத்தும் பியூபோனிக் பிளேக் 1347 இல்ஐரோப்பாவை முழுமையாக தாக்கியது 1300 ஆம் ஆண்டளவில் ஏற்பட்டகடும் வரட்சியினால் கொடிய பஞ்சம் ஏற்பட்டது பஞ்சத்துடன் சேர்ந்து எலிகளும் பெருகின. பிளேக் எலியை தாக்கியது பஞ்சத்துடன் எலிகளினால் பிளேக்கும் தீவிரமாக பரவியது. 14-ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் மத்தியதரை கடல் நாடுகளிடையிலும் பரவியது 1351 இல் முழு ஐரோப்பாவிலும் பீடித்தது ஆரம்பத்தில் இரண்டைக்கோடி பேர்வரை பாதிப்படைந்தனர் ஐரோப்பாவின் சனத்தொகையில் மூன்றில் ஒருபகுதியே அழிந்தது;

பம்பாயிலிருந்து வடக்கே 160 மைல் தூரத்தில் உள்ள சூரத் நகரில் 20 லட்சம்பேர் வசித்தனர். 24 மணிநேரத்தில் 45 பேர் மரணமடைந்ததால் கிலிபடைந்த மக்கள் வீட்டை விட்டு வெளியேறினர்; காய்ச்சல், இருமல், வாந்தி என்பன நோய்க்கு அறிகுறியாக இருந்தது. மனிதர்களின் சுவாசம் எச்சில் என்பவற்றில் இவை பரவுகின்றன. பாதிக்கப்பட்ட பலரில் இருமல், நெஞ்சுவலி, காய்ச்சல் என்பன காணப்பட்டன.

இந்தியாவில் கொள்ளை நோய் பரவாது தடுக்க பயன்படுவது டெட்ரா சைக்ளின் என்ற வில்லை மருந்து. இந்த மருந்தில் 5 தொன்னை உடனடியாக இறக்குமதி செய்ய இந்திய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. ஹைட்ரோகுளோரைட்டும் இந்த மருந்தோடு தருவிக்கப்படவேண்டுமென இந்திய அரசு கேட்டுள்

(6-ம் பக்கம் பார்க்க)

**துஷ்யந்தன்**

## குயிற் குஞ்சு

- மானிலா

சில்லென்று வீசும் காற்றில்
என்
மேனி சிலிர்க்கிறது!
மின்னல் - என்
கண்களுடன்
போர் தொடுக்கிறது!
தூரத்தில்-
கூக்குரலொன்று;
குயிற் குஞ்சொன்றை
காகம் கலைக்கிறது
இடியோசையின் வேகத்தில்
என்
இதயத் துடிப்பு
இன்னும் அதிகரிக்கிறது!
திடீரென
தீப் பிளம்பாய் மின்னல்;
என்
கன்னத்தில் மோதி
காலடியில் வீழ்ந்ததோர் பறவை
வேறொன்றும் அல்ல
குரலெழாது தவிக்கும்
குயிற் குஞ்சுதான் !
அச்சமில்லை அச்சமில்லை
அன்றைய பாரதியின்
இதயக் குமுறல் - என்
இதயத்தில் ஓங்கியொலித்தது!
நனைந்த உடலோடு
நடக்கிறேன் - என்
முகாம் நோக்கி......
நடுக்கத்தில் முனகியது - என்
பையில் இருந்த
குயிற்குஞ்சு !

# சுதந்திர பூமி

பா.மனோகரதாஸ்

இரண்டாயிரம் ஆண்டின் மார்ச் மாதம், பதினேழாம் நாள் அதிகாலை ஐந்துமணி. கேணல்கிட்டுசர்வதேசவிமான நிலையத்தில் தமிழீழ விமான சேவைக்குச் சொந்தமான ஜெட் விமானம் தரையிறங்கியது.

விமானத்தின் கதவுகள் திறக்கப்படுகின்றன.

இணைந்த இறங்கு பாதையிலிறங்கி, சுதந்திர தமிழீழ மண்ணிலே ஒரு காலை வைக்கிறபோதே எனக்குப் புல்லரித்தது. தலைக்கு மேலே இரைச்சல் கேட்டுத் தலைநிமிர்கின்றேன்.

"பறக்கின்ற விமானங்களுக்கிணையாக பலவகைப் பறவைகள் ஆரவாரத்துடன் சொந்தத் தமிழ் வானில் சிறகடித்துப் பறந்தன''

''ஆ......எப்பவோ இழந்து போன தாயின் அன்பான அரவணைப்புப் போல தென்றலின் தழுவல் தமிழீழத்தின் தென்றலல்லவா, அதுகூட ஆனந்தமாய் அசைவது போலிருந்தது. பாட மறந்த குயில்களும் ஒலிக்க மறந்த சேவல்களும் இப்போ கம்பீரமாகக் குரல் கொடுத்துக் கொண்டிருந்தன. தமிழீழம் பிறந்து நாளாகியும் இவைகளுககு இன்னும் பெருமிதம் குறையவில்லைப் போலிருக்கிறது. எண்ணிப் பார்த்தபடி மறுகாலையும் மண்ணில் பதிக்கின்றேன். என்கால்கள் கூசுகின்றன. இந்த மண்ணை முத்தமிட என்காலுக்கு என்ன அருகதை இருக்கிறது. அந்நிய பூமியிலே அகதி என்ற போர்வையில் பதினைந்து ஆண்டுகள் அடிபணிந்து வாழ்ந்துவிட்டு வருகின்றேன். ஓ என் தமிழீழமே! நீ என்னை மன்னிப்பாய், ஏனென்றால் சுதந்திர தமிழீழம் என்பது வெறும் கனவு என்றெண்ணி அன்று கப்பலேறினேன். குழந்தைத்தனமான என் அறியாமை அது; புலிவீரர் இலட்சியத்தின் புனிதம் அன்றெனக்குப் புரியவிலை. மன்னிப்பாய் என்ற எதிர்பார்ப்பில் தான் வரவேதீர்மானித்தேன்.

''வணக்கம் வாருங்கள் தமிழீழம் உங்களை வரவேற்கின்றது'' என்ற அறிவிப்பு என் சிந்தையைக் கலைக்க நிமிர்ந்து பார்த்த என் கண்கள் விரிகின்றன. தாஜ்மகால் போல் பிரகாசிக்கின்றது- எதிரே பிரமாண்டமான விமான நிலையம். உள்ளே அழைக்கப்பட்டேன்- இதமான பரிசோதனைகள் முடிந்து வெளியே வருகின்றேன். அடுக்கடுக்காக பலரசு வண்டிகள் பரந்து காணப்பட்டன. திடீரென ஒரு கவர்ச்சி மிகு வண்டி என்னருகே வந்து நின்றது கதவு தானே திறந்தது-

''வணக்கம் தமிழீழ வாகனம் உங்களைப் பாதுகாப்பாக இதமாக அழைத்துச் செல்லு.'' என கம்பியூட்டர் எழுத்துக்கள் உள்ளே தோன்றி மறைந்தன. பிரமிப்புடன் உள்ளே ஏறி அமர்ந்தேன்-

கதவு தானே மூடிக்கொள்ள ''தாங்கள் செல்ல வேண்டிய இடம்'' பணிவாக வினாவினான் சாரதி''

''காங்கேசன்துறைச் சாலை, யாழ்ப்பாணம் நாவலர் பாடசாலைக்கு அருகாமையில்'' என்றேன். கவர்ச்சிகரமான வளைவில் திரும்பியது வண்டி, மிக அகலமான வீதி இரு மருங்கிலும் பிரமாண்டமான கடைத்தொகுதிகள்- தீர்வையற்ற விற்பனை நிலையங்கள், பலவகை விளம்பர பலகைகள், நியோன் விளக்குகள் வெளிச்சத்தில் மின்னின.

விமான நிலைய வீதியிலிருந்து எமது வண்டி பலாலி வீதிக்கு திரும்பியது- என்ன அகலமான தெருக்கள், ஒரே தடவையில் ஆறு வாகனங்கள் அருகருகே வருவதும் போவதுமாக இருந்தன. பல கனரக வாகனங்கள் பெரும் கொள்கலன்களை ஏற்றிச் சென்று கொண்டிருந்தன தும்பு ஏற்றுமதி நிறுவனம் என்று ஒரு வாகனத்தில் எழுதப்பட்டிருந்தது என் கவனத்தை ஈர்ந்தது-

மெள்ள சாரதியிடம் பேச்சுக் கொடுத்தேன்.

''தம்பி தும்பு இங்கிருந்து ஏற்றுமதியாகிறதா? இதோ, ஒரு வாகனம் போகிறதே என்றேன்''

''என்ன ஐயா! தமிழீழத்திற்கு இப்போதுதான் வருகின்றீர்கள், பரவாயில்லை. தமிழீழ செய்திகளைக் கூடப் பத்திரிகைகளில் படிப்பதில்லையா?''

''மன்னிக்க வேணும் தம்பி, நான் இருந்த இடத்தில் பத்திரிகைகள் பார்ப்பதற்கு எனக்கு நேரம் கிடைப்பதில்லை''

''அப்படியா, பரவாயில்லை, தும்பைப்பற்றியல்லவா கேட்டீர்கள்- தும்பு இங்கிருந்து பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இப்போது தமிழீழத்தில் 20 பாரிய தும்பு உற்பத்தி நிறுவனங்கள் உள்ளன- இவற்றின் உற்பத்திகள் எமது தன்னிறைவு அளவுடன் மேலும் பல மடங்குகளில் நடைபெறுகின்றன. அந்தமேலதிகமான தும்புதான் ஏற்றுமதி செய்யப்படுகின்றது- அத்துடன் தும்பு உற்பத்திகளான கயிறு வகைகள், மெத்தை வகைகள் என்பனவும் அனுப்பப்படுகின்றன. பலகோடி ரூபா அந்நிய செலாவணியும் எமக்குக் கிடைக்கின்றது.''

''அப்படியா அப்படியானால் செல்லும் கனரக வாகனங்கள் எல்லாம் தும்பைத் தான் கொண்டு செல்கின்றனவா?''

''அட்டகாசமான சிரிப்பொலி எழுந்தது அவரிடமிருந்து.''

''ஐயா கனேடிய நாட்டுக் கிணற்றுத்தவளையே இங்கு தும்பு மட்டும் ஏற்றுமதி செய்யப்படவில்லை சீமெந்து, பதனிட்ட தோல், பனம் சீனி, உப்பு, பாலுணவுகள், கடலுணவுகள், அரிசி பதனிட்ட பழவகைகள், புகையிலை, சிறுதானியங்கள் என்பனபோன்ற பலதரப்பட்ட எமது வளங்களில் உருவான பொருட்களையும் ஏற்றுமதி செய்கின்றோம்- இல்மனைற் போன்ற பெரும் கனியங்களும் இங்கிருந்து ஏற்றுமதியாகின்றன.''

''எங்கிருந்து இவை அனுப்பப்படுகின்றன தம்பி?''

''காங்கேசன்துறை துறைமுகம் தற்போது தமிழீழத்தின் இரண்டாவது பெரிய துறைமுகம். இதனூடாகத் தான் இவைகள் அனுப்பப்படுகின்றன.''

''என் மனதில் வியப்பு விரிந்தது''

''என்ன தம்பி சகல விடயங்களையும் கம்பியூட்டர் மாதிரி அறிந்து வைத்திருக்கின்றாயே''

''அவன் முகத்தில் ஒரு குறுநகை.''

''ஐயா இங்கு கொம்பியூட்டர்கள் மட்டுமல்ல ஒவ்வொரு தமிழீழ பிரசையும் ஒரு கொம்பியூட்டர் போலத்தான்இருக்கின்றனர். மக்கள் எல்லோரும் தமது நாட்டின் வளங்களை பூரணமாக அறிந்திருப்பதுடன் செயற்பாடுகளையும் நன்கு உணர்ந்துள்ளனர். இங்கு அறியாமை என்பது கிடையாது, இது தான் எங்கள் ஆட்சியின் சிறப்பு.''

''அட காய்ந்த தமிழீழத்தில் இத்தனை வளர்ச்சியா?''

''முட்டாள் அகதி மனிதா இவை மட்டுமல்ல எத்தனையோ வளர்ச்சி கண்டது தமிழீழம். எமது பொன்னாட்டைக் குறை கூறும் எவரையும் இங்கு நாம் மனிதனாகவே மதிப்பதில்லை.''

''உறுமினான் சாரதி.''

''திடுக்கிட்டேன் நான்.''

''மன்னித்துக்கொள் அப்பா, தெரியாமல் சொல்லி விட்டேன்.''

''பரவாயில்லை ஐயா''

பலாலி வீதியிலிருந்து சுன்னாகம் சந்திக்கு வந்து கே. கே.எஸ் வீதிக்கு திரும்பியது வண்டி''

''தம்பி இவ்வளவு தூரம் வந்து விட்டோம் ஆனால் குடிசைகள் எதையும் காணவில்லையே? வெறும் நிலங்களைக் கூட காணவில்லை பார்க்கும் தரைகள் எல்லாம் பச்சைப் பசேல் எனக்காட்சி தருகின்றதே?''

''ஐயா. இங்கு குடிசைகள் எல்லாம் மறைந்து விட்டன. இங்குள்ள சகல குடும்பத்திற்கும் உணவு உடை உறையுள் என்பன கண்டிப்பாக நிறைவுபடுத்தப்பட்டிருக்க வேண்டும். இது எமது தலைவரின் கட்டளை, கைத்தொழில் துறையும் விவசாயத் துறையும் நாட்டின் இரு கண்கள் என அன்றொரு நாள் எம் தலைவர் சொன்னார் அது இன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. இங்கு தரிசு நிலங்களும் கிடையாது பசிகொண்ட வயிறும் கிடையாது.''

''ஆச்சரியமாக இருக்கிறது தம்பி, ஆனால் இவை பூரணமாக கிடைத்து விட்டால் மனிதன் உழைப்பானா? சோம்பேறியாகி விடுவானே?'

சிலர் அப்படியிருந்து விடலாம் ஆனால் எமது தேச மக்கள் நாட்டுப்பற்றுப் தொழில் திறனும் உள்ளவர்கள் இரத்தம் சிந்திப் பெற்ற சுதந்திரத்தைத் தூர எறிய மாட்டார்கள். இங்கு உழைப்பே மூலதனம் தொழிலின்றி இங்கு யாரும் சோம்பிக் கிடப்பது கிடையாது என்பதை தெரிந்து கொள்ளுங்கள்,''

''கொஞ்சம் வாகனத்தை நிறுத்து தம்பி''

''சத்தமின்றி வாகனம் நின்றது.''

''இது என்ன தம்பி மிகப் பெரிய கட்டிடத் தொகுதி எமது பழைய கலாச்சார பிரதிபலிப்பை உள்ளடக்கி உள்ளது போலிருக்கிறதே?''

''ஆமாம். ஐயா, இதுதான் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தமிழீழம் பற்றியமுழு விபரங்களையும் சில விநாடிகளில் கணனிகள் மூலம் இங்கு பெறலாம். அத்தோடு சகல விடயங்களிலும் ஆலோசனையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.''


''அப்படியா தம்பி, மிகச் சிறந்த வளர்ச்சிதான், சரி போகலாம் ' என்றேன்

''எவ்வித ஒலியுமின்றி மீண்டும் புறப்பட்டது வண்டி''.

''சிறிது நேரம் போயிருக்கும் மீண்டுமொரு பாரிய கட்டிடம் பைசா கோபுரம் போல நின்றது''

''இது என்ன தம்பி.''

''இப்போ நீங்கள் காண்பது தமிழீழ வைப்பகத்தின் கிளையொன்று. தேசநிர்மாணிகளால் உருவாக்கப்பட்ட இக்கட்டிடம் தமிழீழ கட்டிடகலைக்கு ஒரு உதாரணமாக உள்ளது''



''அபாரம் தம்பி! இவைகளைப் பார்க்கும் போது எனது உடம்பு புல்லரிக்கின்றது. மிக குறுகிய காலத்தில் தமிழீழத்தின வளர்ச்சி என்னைத் தலை நிமிர வைக்கின்றது என் நாட்டை மறந்திருந்த என்னை என் மனசாட்சியே என்னை கொல்கின்றது''

'தமிழீழத்தின் தலைநகர் யாழ்ப்பாணம்தான் எத்தனை அழகாக உள்ளது. மிக பிரமாண்டமான வளர்ச்சி தெரிகின்றதே?'' இப்படித் தான் பண்டைய தமிழரின் நகர்களான காவரிப்பூம் பட்டினம் பூம்புகார் போன்றன இருந்திருக்கும்''

மீண்டும் பெரிய சிரிப்பொலி''

''ஐயா தமிழரே, தமிழீழத்தின் தலைநகர் யாழ்ப்பாணம் அல்ல திருகோணமலை தான் எமது தலைநகர். அதைப்பார்த்துவிட்டால்மயக்கமடைந்துவிடுவீர் போல் இருக்கிறதே துறைமுகம், விமான நிலையம், கைத்தொழில் நிலையங்கள், கைத்தொழில் பேட்டைகள், பெரும் தொழிற்சாலைகள் கொண்ட பொன் விளையும் பூமி ஐயா அது''

''அப்படியா, விரைவில் நான் அங்கு செல்ல வேண்டும் தம்பி சந்தியால் திரும்பு''

''இதமான வீதியில் பதமாக திரும்பியது வண்டி. திரும்பியவுடன் மீண்டுமொரு உயர்ந்த கட்டிடம் தென்படுகின்றது. அதன் உச்சியில் சிறிய உருவத்தைக் கண்டு திகைத்தேன்''

''என்ன தம்பி, மனிதனொருவன் அந்தரங்கத்தில் நின்று பெயின்ற் அடிக்கின்றான்.''

''கணீர் என்ற சிரிப்புடன் சொன்னான்.''

''அது மனிதனல்ல, தமிழீழ கைத்தொழில் நிலையத்தில் உருவாக்கப்பட்ட இயந்திர மனிதன். இவ்வாறு பல வேலைகள் இங்கே இயந்திர மனிதர்கள் செய்கின்றனர்.''

(6 ஆம் பக்கம் பார்க்க)

# "சிற்பக்கலாநிதி"

மைத்துக் கொடுத்துள்ளேன். சத்திய சாயிபாபா அவர்களின் உருவப் படத்தினை

றுக்கும்பல சுவரோவியங்களை வரைந்து கொடுத்தேன்.

உருகியின்

திரம், குதிரையின் குணாதிசயங்கள் ஆகியவற்றை மனதில் பதித்துக்கொண்டு அவற்றைப்

வதன் மூலம் கலையும் முன்னேறுகிறது. கலைஞன் முன்னேற தொழில் நுட்பத்திறன்,

தமிட என்காலுக்கு என்ன அருகதை இருக்கிறது. அந்நிய பூமியிலே அகதி என்ற போர் வையில் பதினைந்து ஆண்டு கள் அடிபணிந்து வாழ்ந்து விட்டு வருகின்றேன். ஓ என் தமிழீழமே! நீ என்னை மன்னிப்பாய், ஏனென்றால் சுதந்திர தமிழீழம் என்பது வெறும் கனவு என்றெண்ணி அன்று கப்பலேறினேன். குழந்தைத்தனமான என் அறியாமை அது; புலிவீரர் இலட்சியத்தின் புனிதம் அன்றெனக்குப் புரியவிலை. மன்னிப்பாய் என்ற எதிர்பார்ப்பில் தான் வரவேதீர்மானித்தேன்.

விளக்குகள் வெளிச்சத்தில் மின்னின.

விமான நிலைய வீதியிலிருந்து எமது வண்டி பலாலி வீதிக்கு திரும்பியது- என்ன அகலமான தெருக்கள், ஒரே தடவையில் ஆறு வாகனங்கள் அருகருகே வருவதும் போவதுமாக இருந்தன. பல கனரக வாகனங்கள் பெரும் கொள்கலன்களை ஏற்றிச் சென்று கொண்டிருந்தன தும்பு ஏற்றுமதி நிறுவனம் என்று ஒரு வாகனத்தில் எழுதப்பட்டிருந்தது என் கவனத்தை ஈர்ந்தது-

தான் கொண்டு செல்கின்றன வா?''

''அட்டகாசமான சிரிப்பொலி எழுந்தது அவரிடமிருந்து.''

''ஐயா கனேடிய நாட்டுக் கிணற்றுத்தவளையே இங்கு தும்பு மட்டும் ஏற்றுமதி செய்யப்படவில்லை சீமெந்து, பதனிட்ட தோல், பனம் சீனி, உப்பு, பாலுணவுகள், கடலுணவுகள், அரிசி பதனிட்ட பழவகைகள், புகையிலை, சிறு தானியங்கள் என்பனபோன்ற பலதரப்பட்ட எமது வளங்

தில் இத்தனை வளர்ச்சியா?''

''முட்டாள் அகதி மனிதா இவை மட்டுமல்ல எத்தனையோ வளர்ச்சி கண்டது தமிழீழம். எமது பொன்னாடடைக் குறை கூறும் எவரையும் இங்கு நாம் மனிதனாகவே மதிப்பதில்லை.''

''உறுமினான் சாரதி.''
''திடுக்கிட்டேன் நான்.''
''மன்னித்துக் கொள் அப்பா, தெரியாமல் சொல்லி விட்டேன்.''

''பரவாயில்லை ஐயா''

றது.''

''இது என்ன தம்பி மிகப் பெரிய கட்டிடத் தொகுதி எமது பழைய கலாச்சார பிரதிபலிப்பை உள்ளடக்கி உள்ளது போலிருக்கிறதே?''

''ஆமாம். ஐபா, இதுதான் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தமிழீழம் பற்றியமுழு விபரங்களையும் சில விநாடிகளில் கணனிகள் மூலம் இங்கு பெறலாம். அத்தோடு சகல விடயங்களிலும் ஆலோசனையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.''

தமிழீழத்தின் வளர்ச்சி என்னைத் தலை நிமிர வைக்கின்றது என் நாட்டை மறந்திருந்த என்னை என் மனசாட்சியே என்னை கொல்கின்றது''

'தமிழீழத்தின் தலைநகர் யாழ்ப்பாணம்தான் எத்தனை அழகாக உள்ளது. மிக பிரமாண்டமான வளர்ச்சி தெரிகின்றதே?'' இப்படித் தான் பண்டைய தமிழரின் நகர்களான காவரிப்பூம் பட்டினம் பூம்புகார் போன்றன இருந்திருக்கும்''

மீண்டும் பெரிய சிரிப்

சிறிய உருவத்தைக் கண்டு திகைத்தேன்''

''என்ன தம்பி, மனிதனொருவன் அந்தரங்கத்தில் நின்று பெயின்ற் அடிக்கின்றான்.''

''கணீர் என்ற சிரிப்புடன் சொன்னான்.''

''அது மனிதனல்ல, தமிழீழ கைத்தொழில் நிலையத்தில் உருவாக்கப்பட்ட இயந்திர மனிதன். இவ்வாறு பல வேலைகள் இங்கே இயந்திர மனிதர்கள் செய்கின்றனர்.''

(6 ஆம் பக்கம் பார்க்க)

# "சிற்பக்கலாநிதி"
## சிவப்பிரகாசத்துடன் சிலநிமிடங்கள்

தனக்குத் தெரிந்த அனைத்துக் கலை நுணுக்கங்களையும் ஒளிவு மறைவின்றிக் கற்றுக் கொடுத்து தன்னைப் போன்று ஒரு சிறந்த கலைஞனை எவன் உருவாக்கி விடுகிறானோ அவனே உண்மையான ஓர் கலைஞன். அத்தகையவர்களை இன்று சமுதாயத்தில் காணவே முடியாதிருப்பது வேதனை தருகிறது என்கிறார் ''சிற்பக் கலாநிதி'' செல்லையா சிவப்பிரகாசம் அவர்கள்.

சிற்பக்கலையின் அதி உயர் விருதான 'சிற்பக் கலாநிதி' என்ற பட்டத்தைத் தட்டிக் கொண்டதுடன் பத்து வரையான தங்கப்பதக்கங்களையும் பொன்னாடைகளையும் பெற்றும் தற்பெருமையின்றி சாதாரணமாகவே பழகி எம்மை வியப்பில் ஆழ்த்தி விட்ட அந்த ஆசானுடன் எமது 'வெள்ளி மஞ்சரி' வாசகர்களுக்காக சில நிமிடங்களைச் செலவிட்டோம்.

1928 இல் அளவெட்டியில் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்தேன். மகாஜனாக் கல்லூரியில் கற்கும் போது தோட்ட வேலைக்கும் செல்வேன். அங்கே கலப்பையால் உழுது கொண்டிருக்கும் போது வரும் ஈர மண்ணை எடுத்து எனது மனம்போன வழியில் உருவங்களைச் செய்வேன். என்னை அறியாமலேயே யாருடைய தூண்டுதலுமின்றி என்மனம் அத்துறையை ஈர்த்தது

### முதலோவியம்:-

மாணவனாக இருந்த போது 1947இல் பாடசாலை இலச்சினை ஒன்றை வரைவதற்கான போட்டி நடந்தது. அதில் எனக்கே முதல் பரிசு கிடைத்தது. மகாஜனாக் கல்லூரியின் இன்றைய இலச்சினை நான் அன்று வரைந்ததே. அதிபர் முதல் அனைவராலும் பாராட்டப் பட்டேன். ஓவியத் துறையில் நான் ஈடுபட வழிகாட்டியவர் அன்றைய கல்லூரி அதிபராகவும் கல்விமானாகவும் திகழ்ந்த ஜெயரட்ணம் அவர்களே.

அவர் காட்டிய பாதையில் பாடசாலையிலிருந்து வெளியேறி யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர்மடத்தில் ''வின்ஸர் ஆர்ட் கிளப்'' இல் மாணவனாக சேர்ந்தேன். முன்னாள் சித்திரக் கல்வி அதிகாரி எஸ். ஆர். கனகசபை அவர்களால் நடாத்தப்பட்ட இக்கிளப்பில் ஆசிரியர் அ இராசையாவிடம் பயின்றேன். அவரே எனது ஆசானாவார். பின்னர் அங்கிருந்து மேற்படிப்பிற்காக 1952இல் கொழும்பு அரசினர் நுண்கலைக் கல்லூரியில் சேர்ந்தேன். அங்கு நான்கு ஆண்டுகள் சிற்பம், ஓவியம் டிப்புளோமா பயிற்சி பெற்றேன்.


1956இல் யாழ் மத்திய கல்லூரியில் சித்திர ஆசிரியராக நிரந்தர நியமனம் பெற்று 1988 வரை அங்கு கடமையாற்றினேன். என்னை மகாஜனாக் கல்லூரி ஊக்குவித்தது என்றால், பெருமைப்படுத்தியது மத்திய கல்லூரியே.

### முதல் உயிரோவியம்;

1960இல் கறையான் அரித்து எஞ்சிய முகத்தை மட்டும் கொண்டு மகாஜனாக் கல்லூரியின் ஸ்தாபகர் பாவலர் துரையப்பாபிள்ளையின் உயிரோவியத்தை செதுக்கினேன். கல்லூரியின் நூற்றாண் விழா அன்று வாயிலில் நிறுவப்பட்ட சிலையை பாராட்டி சேர் நிக்கலஸ் ஆட்டிகல அவர்கள் எனக்கு ''சிற்ப கலாநிதி'' பட்டம் வழங்கியதுடன் தங்கப்பதக்கம் சூட்டி பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். இதனைதொடர்ந்து சேர்பொன். இராமநாதன், லேடி இராமநாதன், நல்லூர் மன்னன் சங்கிலியன், அருட்திரு. லோங் அடிகளார், பண்டாரவன்னியன், குமாரசாமிப் புலவர், கந்தையா மழுவராயர், தமிழ் வித்துவான் காசிவாசி செந்தில் நாதையர், திருச்செல்வம் (எம். பி) உட்படபத்திற்குமேற்பட்டோரின் உயிரோவியங்களைத் தீட்டி பலரதும் பாராட்டுக்களையும் தங்கப்பதக்கங்களையும் தட்டிக் கொண்டேன். இந்து மகளிர் கல்லூரி முன்பாகவுள்ள கலைவாணி சிலையும் நான் வடித்ததே.

### உயிர்ப்புடைப்புச்சிற்பம் (RELIVE)

வேம்படி மகளிர் கல்லூரியில் பிரமாண்டமான முறையில் கீதா உபதேசம் செய்யும் சிற்பத்தினை தீட்டினேன். நயினாதீவு நாகபூசணி அம்பாள் ஆலயத்திற்கு 63நாயன்மார்களது முழு உருவச் சிலைகளையும், சிற்பங்களையும், கற்பக்கிரக சிற்பங்களையும் வடித்தேன். அளவெட்டி தவளகிரி, அளகோலைப் பிள்ளையார் ஆலயங்கள் உட்பட பல ஆலயங்களுக்கு வடிவமைத்துக் கொடுத்துள்ளேன். சத்திய சாயிபாபா அவர்களின் உருவப் படத்தினை வரைந்து கொடுத்ததன்மூலம் 1969 இல் வைகுண்ட ஏகாதசி அன்று அவரது திருக்கரத்தினால் ஏவப்பட்ட தங்கப் பதக்கத்தினைப் பெற்றுக் கொண்டேன்.



1960 இல் தனது முதலாவது உயிரோவியத்தை கலாநிதி சிவப்பிரகாசம் தீட்டிக்கொண்டிருக்கின்றார்

### சுவரோவியங்கள்

1974இல் நல்லூர்க் கந்தன் ஆலயத்திற்கு சுவரோவியங்களாக ஆறுபடைவீடு, சிவ தாண்டவம், 108 தாண்டவங்கள், 7 குதிரையில் உலா வரும் சூரியன் உட்பட கைலயங்கிரி காட்சிகள் பாரம்பரிய சாஸ்திர முறைப்படி அளவுப் பிரமாணம் தவறாது வரைந்து கொடுத்துள்ளேன். இதுதவிர கும்பிளாவளை பிள்ளையார், அளகோலைப்பிள்ளையார், வழக்கம்பரை அம்மன்கோவில் ஆகியனவற்றுக்கும்பல சுவரோவியங்களை வரைந்து கொடுத்தேன்.

### உறுதியின் உறைவிடம்

விடுதலைப் போராட்ட வரலாற்றைச் சித்திரிக்கும் உறுதியின் உறைவிடம், கல்லறையில் கண்ணீர்விடும்போராளி, இராணுவச் சிப்பாயைக் கடித்துக் குதறும் புலி உட்பட பல உருவச் சிலைகளை வடிவமைத்துக் கொடுத்துள்ளேன்

### கற்பனையில் வடிப்பேன்

பெரும்பாலான சிலைகளை கற்பனையிலேயே வடித்துள்ளேன். சங்கிலியன் சிலையை உருவமைப்பதற்கு முன்னர் சங்கிலியன் வரலாறு குறித்து வெளிவந்த நூல்களைப் படித்தேன் அதிலிருந்து சங்கிலியனின் உருவமைப்பு, திடகாத்திரம், குதிரையின் குணாதிசயங்கள் ஆகியவற்றை மனதில் பதித்துக்கொண்டு அவற்றைப் பிரதிபலிக்கக்கூடிய வகையில் சங்கிலியன் சிலையை 1974-ல் உருவாக்கினேன்

இதேபோன்றுதான் பண்டாரவன்னியன் சிலையையும் 1981 ல் வடிவமைத்தேன் வவுனியா செயலக வளவில் நிறுவப்பட்டுள்ள அந்த சிலையை அன்றைய தமிழக முதல்வராக இருந்த எம். ஜி. ஆர் அரசின் சபாநாயகராக இருந்த ராஜாராம் திரைநீக்கம் செய்து வைத்ததுடன் அந்தச் சிலையின் ஒவ்வொரு அசைவுகளையும் வர்ணித்து என்னை பாராட்டிப்பேசினார். அதற்குக் காரணம் அச்சிலையில் இருந்த உயிர்த்துடிப்பே

### கலைத்திறன்

புகைப்படம் மட்டுமே தரப்படும் அதனைக் கொண்டு நான் உயிர்த்துடிப்புள்ளசிலைகளை வடிக்கவேண்டும். முகபாவனையை உற்று நோக்கிய பின் வீதிகளில் சென்று வருவோரை உற்றுநோக்கி அந்த முகபாவனையில் உள்ளவர்களது உடலமைப்பினை உள்வாங்கிக்கொள்வேன். பின்னர் அதனையும் இணைத்து சிலையை உருவாக்குவேன். சிலைகளில் அவர்களது முகபாவம் ஆளுமை மற்றும் குணாதிசயங்கள் பிரதிபலிக்கவேண்டும் அவ்வாறு அமைந்தாலே அது உயிரோட்டமுள்ள சிலையாக அமையும், இத்தகைய நுட்பங்களை கருத்தில் கொண்டு வடிப்பதையே ஓர் கலைநுட்பத்திறன் என்கிறோம்.

### கலைஞன் வளர்வது கடின உழைப்பாலே.

ஒரு கலைஞன் முன்னேறுவதன் மூலம் கலையும் முன்னேறுகிறது. கலைஞன் முன்னேற தொழில் நுட்பத்திறன், விடாமுயற்சி, நல்ல மனப்பாங்கு, ஒரேசிந்தனையுடன் கூடிய கடின உழைப்பு தேவை இவை ஒருங்கே அமைந்துவிட்டால் அவன் சிறந்த கலைஞனாகி விடுகிறான். இவையே ஒரு கலைஞனை முன்னுக்குக் கொண்டுவரும் உந்து சக்திகளாக அமைகின்றன.

நான் வீதியால் செல்லும் போதெல்லாம் ஒவ்வொரு தொழிலாளியையும் உற்று நோக்கி அவர்களது உடலமைப்புகளை உள்வாங்குவேன் ஆண்கள், பெண்களினதும் நடை, உடை பாவனைகளை அவதானிப்பேன், எதிர்காலத்தில் நான் வடிக்கும் சிலைகளுக்கு இவையே பேருதவி புரியும்.

### வாரிசுகள் உருவாகின்றன

சிவசாயி சித்திரக்கோட்டம் அன் சிற்ப சாலைக்கலைக் கல்லூரியை நிறுவி அதன் அதிபராகவும் ஆசானாகவும் இருந்து நூற்றுக்கணக்கான மாணவர்களை பயிற்றுவித்து வருகிறேன், கலைஞர்கள் மத்தியில் போட்டியிருத்தல் வேண்டும். அவ்வாறு இருந்தாலே முன்னேறமுடியும். ஆனால் பொறாமை குடிகொள்ளக்கூடாது. கலைஞர்களின் சாபக்கேடே அதுதான், இங்கு ஒவ்வொருவரும் என் கலையைரசித்துப் பாராட்டும் போது பெருமையாக இருக்கும். அதேவேளை பல கலைஞர்கள் உறவை முறித்துக் கொள்வதை பார்க்கும் போது வேதனை தருகிறது.

நான் எனக்குத் துரோகம் செய்தாலும் கலைக்கு துரோ

(7 ஆம் பக்கம் பார்க்க)

சந்திப்பு : சசிகரன்

## தேவை

### மொழி பெயர்ப்புப் பயிலுநர்கள்

(ஆங்கிலம் - தமிழ்)

★ ஆங்கிலம், தமிழ் உட்பட க. பொ. த. (சாதாரண) தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்

★ க. பொ. த. (உயர் தரம்) மேலதிக தகைமையாகக் கருதப்படும்..

18 வயதிற்கு மேற்பட்ட இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.

★ மூன்று மாதங்கள் வரையான முழுநேர வகுப்புக்களும் செய்முறைப் பயிற்சிகளும் இலவசமாக வழங்கப்படும். பயிற்சிக்காலத்துச் செலவுகள் எம்மால் பொறுப்பேற்கப்படும். பயிற்சி முடிவில் வேதனத்துடன் வேலை வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி 12-10-94**

தொடர்பு:- விள. இல: 352 மே/பா ஈழநாதம்
31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். (9567)


## 8-ம் ஆண்டு நினைவு



மலர்வு
1959-11-28

உதிர்வு
1986-10-07

### கப்டன் றொபின்

**செல்வரட்ணம் (இராஜ்பகவான்)**
திருகோணமலை

திருமலை மண் தந்த திருமகன் நீ
இரு கண்ணும் விழித்திருந்த காவலன் நீ
கருவினிலே உதிர்த்த உந்தன் கனவெல்லாம்
தமிழீழத்தில் புலரும் பொழுதுக்கு ஒளி
கொடுக்கப் போகும் சூரியக் கதிர்கள்.
நீ மரணிக்கவில்லை
உன் கல்லறை வெறும் சமாதியல்ல, பல்லாயிரம்
வேங்கைகளின் வழிகாட்டி.
எங்கள் இதயங்களில் விதைக்கப்பட்ட உத்தம
வீரன்
உன் பாதச்சுவட்டிலே எம் பாதங்கள்.

இங்ஙனம்

# சிறிலங்கா - இந்திய கூட்டுச் சதி; நாடகம் அரங்கேறிய விதம்

> லெப். கேணல் புலேந்திரன், லெப்.கேணல் குமரப்பா உட்பட பன்னிரெண்டு விடுதலைப் புலிகள் சிறிலங்கா- இந்திய கூட்டுச்சதியால் மரணமடைந்த சம்பவத்தின் ஏழாம் ஆண்டு நினைவு நாள் தீருவிலில் அனுஷ்டிக்கப்பட்டது. இதில் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி திரு. சூசையும், கடற்புலிகள் பயிற்சிக் கல்லூரிப் பொறுப்பாளர் திரு. வாஞ்சிநாதனும் கூட்டுச் சதி அரங்கேறிய விதம் பற்றி நிகழ்த்திய உரையின் முக்கிய பகுதியைத் தொகுத்துத் தருகின்றோம்.

### சூசையின் உரையில் இருந்து:

வடமராட்சிக் கடலில் நிகழ்ந்த சம்பவம் தமிழீழ மக்களை மிகவும் சோகத்திலாழ்த்தியது. ஏழு ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த இச்சம்பவத்தைப் பற்றி உங்களுக்குச் சொல்லி வைக்க விரும்புகிறேன்.

1987 அக்டோபர் மாதம், மூன்றாம் திகதி அதிகாலை 2 00 மணியளவில் கடல்புறா தமிழகம் நோக்கிச் சென்றது. அப்படகில் எமது தளபதிகளுடன் போராளிகள் சிலர் இருந்தனர்.

படகு நான்கு மைல் தூரம் சென்றிருக்கும். சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான 'டோரா' படகில் லெப்ரினன்ட் ஆரியதாசா வந்துஎமது தளபதிகளின் படகை வழிமறிக்கின்றார்.

எமது போராளிகளால் அந்தச் சிங்கள கடற்படையினரின் படகை நிர்மூலமாக்கியிருக்கமுடியும். பின்னர் மீண்டு வந்திருக்க முடியும். அந்தளவு வாய்ப்பிருந்தும் அப்போதைய யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீறக்கூடாது என்பதற்காக அவர்களின் அழைப்பின்பேரில் கடற்படை முகாமிற்குச்சென்றார்கள்.

அங்கு எமது போராளிகள் தங்க வைக்கப்பட்டனர்.

இச்சமயம், இந்திய அமைதிப்படைக்கு தொடர்பாளராகவிருந்த பிரிகேடியர் பெர்னாண்டசுடன்நாம்தொடர்பு கொண்டவேளை -

'இந்த உங்களுடைய தளபதிகளுக்கோ அல்லது உறுப்பினர்களுக்கோஎந்தவிதமான ஒரு பிரச்சினையும் வராது. உங்களிடம் அவர்கள் கையளிக்கப்படுவார்கள்', என்றுஎம்மிடம் சொன்னார்கள்.

மூன்றாந்திகதி மதியம் இத்தகவல் எமக்குக் கிடைத்தது. இந்த உறுதி மொழியைத் தந்தபெர்னாண்டசு அண்மையில் இந்தியாவின் புலனாய்வுத்துறைக்குப் பொறுப்பாகவிருந்து லெப்ரினன்ட் ஜெனரலாக பதவியுயர்த்தப் பட்டு

'உங்களுடைய தளபதிகளும் மற்றும் உறுப்பினர்களும்பத்திரமாக உங்களிடமே சேர்க்கப்படுவார்கள். இதில் எதுவித பிரச்சினையுமேஇல்லைஎன்று அவர் தெரிவித்தார்.

நான்காம் திகதி காலையிலும் இதே மாதிரியே பதில் வந்தது.

நான்காம் திகதி மாலையில் பலாலி விமானத் தளத்திற்கு கொண்டு வரப்பட்டார்கள்.

விமானத் தளத்திற்குப் பாதுகாப்பாக இந்திய இராணுவமும், அதன் கவச வாகனப் பிரிவும் புடைசூழ்ந்தும் நிற்க சிறிலங்கா இராணுவமும் எமது போராளிகளை காவல் காத்து வந்தது.

4-ஆம் திகதி மதியமும் பழைய உறுதி மொழியே வழங்கப்படுகிறது. மாலை எமது உறுப்பினர்கள் சந்தித்து பேசியபோதும்இதேஉறுதிமொழி தான்.

அங்கு பதற்றநிலை காணப்பட்டது.

ஐந்தாம் திகதி காலை சந்திக்கச் சென்றபோது எவருக்குமே சந்திப்பிற்கான அனுமதி தரப்படவில்லை.

இந்த வேளை-
கொழும்பிலிருந்து விசேட இராணுவ அணியொன்று இந்திய - இலங்கை இராணுவத்தினரின் பாதுகாப்பையும் மீறி எமது உறுப்பினர்கள் தங்க வைக்கப்பட்டுள்ள பகுதிக்கு வந்து - சுயமுயற்சியில்- தாமாகவே அவர்களை சுற்றி வியூகம் அமைத்து, கண்ணாடி அறையைச் சூழநிலைஎடுத்துக் கொள்கின்றது-

மாலை சரியாக 5.00 மணியை நெருங்கிக் கொண்டிருக்கையில்-ஒரு சில அதிகாரிகள்- உள்ளே சென்ற சமயம்.

'எம்மை அணுக வேண்டாம். உள்ளே வரவேண்டாம் உள்ளே வந்து எம்மை அழைத்துச் செல்லும் முயற்சியில் ஈடுபட்டால், 'சைனைற்' உட்கொள்வோம்' என எச்சரித்தனர்.

அதையும் பொருட்படுத்தாமல் கைது செய்வதற்கென

அணி மூர்க்கத்தனமாகத் தாக்குகின்றது.

இலங்கைக்கான இந்தியத் தூதுவராக அன்று இருந்த ஜே. என். டிக்ஷிட்சமீபத்தில் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டி ஒன்றில்-

'இலங்கை ஜனாதிபதியாகவிருந்த ஜே. ஆர். ஜெயவர்தனா இவர்களை விடுவிக்க சம்மதம் தெரிவித்திருந்தார் எனவும்,எனினும் பாதுகாப்பு அமைச்சராக இருந்த லலித் அத்துலத்முதலியின் நடவடிக்கையால் தான் இந்த நிகழ்வு இடம் பெற்றது என்றும் தெரிவித்திருந்தார் என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

### வாஞ்சிநாதன் உரையிலிருந்து

அவர்களுடைய பன்னிரு உடல்களும் பலாலியில் வைத்துள்ளோம். வந்து பெற்றுக் கொள்ளுங்கள் என எமது அமைப்பிற்கு இந்திய அமைதிப்படையால் தகவல் அனுப்பி வைக்கப்படுகின்றது.

முதல் நாள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டவர்களின் புகழுடல்களை கையளிப்பதற்கு மறுநாள் தகவல் அனுப்பி வைக்கப்பட்டது.

2.00 மணிக்கு உடல்களை தருவதாக தகவல் சொன்னது. நாம் 1.30 மணிக்கே அங்கு போய்ச் சேர்ந்து விட்டோம்.

பலாலியில் அவர்களின் தளம் ஒன்றிலேயே முதல் வாசல் திறக்கப்பட்டது. இரண்டாவது வாசலிற்குப் போ

'உடல்களை நாம் தயார் செய்து கொண்டிருக்கின்றோம். இன்னும் 10 நிமிடத்தில் தருவோம்' என்று சொன்னார்கள்.

4.00 மணியானது.
'இன்னும் தயார் செய்யவில்லையா?' என்று கேட்டோம்.

'இதோ தயாரித்து விட்டோம். வந்து கொண்டிருக்கிறது' என்றார்கள்.
5 00 மணியானது.
பொறுமையை இழந்து-
'உங்கள் அதிகாரியை வரச் சொல்லுங்கள்' என்று அந்தச் சிப்பாய்களைக் கேட்டோம்.

6.00 மணியவில் ஒருவன் வந்தான். அவன் சொன்னான்- 'இன்னும் சில நிமிடங்களிலே உடல்கள் தரப்படும்' என.

7-00 மணியானது. காணவில்லை. நாம் அவர்களை துளைத்துத் துளைத்துக் கேட்டோம்.

ஏழரை மணி போல் இரண்டு பேர் வந்தார்கள். உங்களுடையவர்களின் உடல்கள் வந்து கொண்டிருக்கின்றன.

ஏழே முக்கால் மணியானது.

உடல்கள் எடுத்து வரப்படுகின்றன.

இரண்டு மணிக்கு தரப்படவேண்டிய உடல்களை நான்கு மணிக்காவது தருவார்கள் என எதிர்பார்த்தோம். அதனால் எம்மிடம் 'டோர்ச் லைற்' எதுவுமே

நாம் அந்த உடல்களைப் பெற்றுக் கொண்டு எமது வாகனத்தில் வைப்பதற்காகத் தூக்குகின்றோம். சந்தேகம் வலுத்து நாம் ஒரு மெழுகுதிரியை பிடித்துப்பார்க்கின்றோம்.

புலேந்திரனின் உடல் தான் எமது கண்களில் முதல் பட்டது. எம்மிடையே அதிர்ச்சி.

சைனைற் உட் கொண்ட போராளிகளின் உடலில் காயங்கள் எப்படி வந்தன?

புலேந்திரனின் உடலைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தோம். கழுத்தின் முன்பக்கத்தில் ஒரு காயம், கழுத்திற்குப் பின் பக்கத்தில் இன்னொரு காயம்.

ஒவ்வொரு உடல்களையும் ஏற்றும் வேளையில் பார்த்தோம். குமரப்பாவின் உடலிலும் காயங்கள் இருந்தன.

இன்னொரு உடலிலும் காயங்கள் இருந்தன. இராணுவத்தின் துப்பாக்கியில் பொருத்தப்பட்டிருக்கும் கூரிய கத்தியால் (பயனைட்) ஏற்படுத்தப்பட்ட காயமே இவை.

எம்மிடம் உடல்களை ஒப்படைத்தவன் இந்திய அமைதிப் படையின் வைத்திய அதிகாரி என அறிந்தோம்.

அவனிடம் கேட்டோம் இந்த 12 முத்துக்களும் எமது சொத்துக்கள்... இவர்களை நீங்கள் என்ன செய்தீர்கள்?

''நாம் ஒன்றும் செய்யவில்லை. உங்கள் உறுப்பினர்கள் தான் 'சைனைற்' உண்டார்கள்'' என்றான் அவன்.

'சைனைற் உண்டதுவாயால், கழுத்திலே கத்தியால் குத்தி எப்படி காயங்கள் வந்தன' என நாம் கேட்டோம்.

அவன் மௌனமாகவிருந்தான்,

'சைனைற் உட்கொண்டவுடன் கழுத்தில் கத்திக் காயம் வரும் என உங்கள் மருத்துவப் புத்தகத்தில் உள்ளதா?' எனக் கேட்டோம்.

மீண்டும் சொன்னோம்.

நீங்கள் உண்மையான ஒரு வைத்திய அதிகாரியாகவிருந்தால் நீங்கள் சொல்லுங்கள்... உண்மையில் சைனைற் உண்டு தான் இந்த மரணம் சம்பவித்தது என்று. உங்களால் சைனைற் உட்கொண்டு இறந்ததை உறுதிப்படுத்த முடியுமா? இவர்கள் சைனைற்



## கப்டன் றொபின்

### செல்வரட்ணம் (இராஜ்பகவான்)

திருகோணமலை

திருமலை மண் தந்த திருமகன் நீ
இரு கண்ணும் விழித்திருந்த காவலன் நீ
கருவினிலே உதிர்த்த உந்தன் கனவெல்லாம்
தமிழீழத்தில் புலரும் பொழுதுக்கு ஒளி
கொடுக்கப் போகும் சூரியக் கதிர்கள்.
நீ மரணிக்கவில்லை
உன் கல்லறை வெறும் சமாதியல்ல, பல்லாயிரம்
வேங்கைகளின் வழிகாட்டி.
எங்கள் இதயங்களில் விதைக்கப்பட்ட உத்தம
வீரன்
உன் பாதச்சுவட்டிலே எம் பாதங்கள்.

இங்ஙனம்
(சி/10461) திருமலை மக்கள்.

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆண்டுத் திதி அழைப்பும்



மலர்வு:-
12-02-84

பறிப்பு:-
28-09-92

### செல்வி சற்குரு சசிகலா

(இயக்கச்சி - சங்கத்தார்வயல்)

(கோயில் வயல் சி. சி. சித்தா பாடசாலை மாணவி)

அன்புக் கோர் உறைவிடமாய்
அனைவரின் மனதிலும் நிறைந்த
எம் இனிய சசிக் குட்டியே
எம்மையெல்லாம் தவிக்க வைத்து
விண்ணகத்தை அடைந்து
இரண்டு ஆண்டு ஆனாலும் உன்
நினைவு என்றும் எம்மோடு, உன் அன்பு
முகத்தை காணாது தவிக்கின்றோம்
உன் பிரிவால் வாடுகின்றோம்
உன் ஆத்மா சாந்தி அடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

7-10-94 இன்று எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் ஆண்டுத் திதி வைபவத்திலும், மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தற்போதைய முகவரி:
கரம்பைக் குறிச்சி
வரணி, (5100)

உன் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா,
தங்கை, தம்பி,

இச் சமயம், இந்திய அமைதிப்படைக்கு தொடர்பாளராகவிருந்த பிரிகேடியர் பெர்னாண்டசுடன்நாம்தொடர்பு கொண்டவேளை -

'இந்த உங்களுடைய தளபதிகளுக்கோ அல்லது உறுப்பினர்களுக்கோஎந்தவிதமான ஒரு பிரச்சினையும் வராது. உங்களிடம் அவர்கள் கையளிக்கப்படுவார்கள்', என்றுஎம்மிடம் சொன்னார்கள்.

மூன்றாந்திகதி மதியம் இத் தகவல் எமக்குக் கிடைத்தது. இந்த உறுதி மொழியைத் தந்தபெர்னாண்டசு அண்மையில் இந்தியாவின் புலனாய்வுத்துறைக்குப் பொறுப்பாகவிருந்து லெப்ரினன்ட் ஜெனரலாக பதவியுயர்த்தப் பட்டு வெடி விபத்திற்கு உள்ளாகி உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது.

அவருடைய உறுதி மொழியை ஏற்று மூன்றாம் திகதி மாலை எமது போராளிகள் விடுவிக்கப்படுவார்கள் என எதிர்பார்த்திருந்த வேளையில்-

அமைதிப்படையின் தளபதி ஹர்சிரத்சிங்குடன் தொடர்பு கொண்டோம்.

எமது உறுப்பினர்கள் தங்க வைக்கப்பட்டுள்ள பகுதிக்கு வந்து - சுயமுயற்சியில்-தாமாகவே அவர்களை சுற்றி வியூகம் அமைத்து, கண்ணாடி அறையைச் சூழநிலைஎடுத்துக் கொள்கின்றது-

மாலை சரியாக 5.00 மணியை நெருங்கிக் கொண்டிருக்கையில்-ஒரு சில அதிகாரிகள்-உள்ளே சென்ற சமயம்.

'எம்மை அணுக வேண்டாம். உள்ளே வரவேண்டாம் உள்ளே வந்து எம்மை அழைத்துச் செல்லும் முயற்சியில் ஈடுபட்டால், 'சைனைற்' உட்கொள்வோம்' என எச்சரித்தனர்.

அதையும் பொருட்படுத்தாமல் கைது செய்வதற்கென அதிகாரிகள் முயற்சி செய்கையில் போராளிகள் 'சைனைற்' உட்கொள்கின்றனர்.

இலங்கை - இந்திய இராணுவங்கள் இக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கும் வேளையில்-

சைனைற் உட்கொண்ட எமது உறுப்பினர்களை-

அந்த கொமாண்டோ

றுக் கொள்ளுங்கள் என எமது அமைப்பிற்கு இந்திய அமைதிப்படையால் தகவல் அனுப்பி வைக்கப்படுகின்றது.

முதல் நாள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டவர்களின் புகழுடல்களை கையளிப்பதற்கு மறுநாள் தகவல் அனுப்பி வைக்கப்பட்டது.

2.00 மணிக்கு உடல்களை தருவதாக தகவல் சொன்னது. நாம் 1.30 மணிக்கே அங்கு போய்ச் சேர்ந்து விட்டோம்.

பலாலியில் அவர்களின் தளம் ஒன்றிலேயே முதல் வாசல் திறக்கப்பட்டது. இரண்டாவது வாசலிற்குப் போனோம்.

இரண்டு மணிக்கு நிச்சயமாக இந்த உடல்கள் வரும் என ஜவான்கள் சொன்னார்கள்.

காத்திருந்தோம். மூன்று மணியானது.

'உடல்கள் இன்னும் வரவில்லையா?' எனக்கேட்டோம்.

துளைத்துத் துளைத்துக் கேட்டோம்.

ஏழரை மணி போல் இரண்டு பேர் வந்தார்கள். உங்களுடையவர்களின் உடல்கள் வந்து கொண்டிருக்கின்றன.

ஏழே முக்கால் மணியானது.

உடல்கள் எடுத்து வரப்படுகின்றன.

இரண்டு மணிக்கு தரப்பட வேண்டிய உடல்களை நான்கு மணிக்காவது தருவார்கள் என எதிர்பார்த்தோம். அதனால் எம்மிடம் 'டோர்ச் லைற்' எதுவுமே இல்லை.

இருள் நேரம். எமது வாகனங்கள் வந்து அணி வகுத்து நிற்கின்றன. அவர்களின் திரு உடல்களை ஏற்றிச் செல்வதற்காக.

அந்த நேரத்தில் எமக்கு ஒரு சந்தேகம் முளைவிடுகிறது. இவர்களிடம் கூடவா ஒரு 'டோர்ச் லைற்' இல்லை?

வந்தன' என நாம் கேட்டோம்.

அவன் மௌனமாகவிருந்தான்,

'சைனைற் உட்கொண்டவுடன் கழுத்தில் கத்திக் காயம் வரும் என உங்கள் மருத்துவப் புத்தகத்தில் உள்ளதா?' எனக் கேட்டோம்.

மீண்டும் சொன்னோம்.

நீங்கள் உண்மையான ஒரு வைத்திய அதிகாரியாகவிருந்தால் நீங்கள் சொல்லுங்கள்... உண்மையில் சைனைற் உண்டு தான் இந்த மரணம் சம்பவித்தது என்று. உங்களால் சைனைற் உட்கொண்டு இறந்ததை உறுதிப்படுத்த முடியுமா? இவர்கள் சைனைற் உட்கொண்ட வேளை கத்தியால் குத்தப்பட்டு மரணமடைந்தார்கள். அதற்கான அத்தாட்சிக் காயங்கள் இந்த உடல்களிலேயே இருக்கின்றன என்பதை உறுதிப்படுத்துகிறேன் என உங்களால் உறுதி வழங்க முடியுமா?' என கேட்டோம்.

அந்த அமைதிப் படையின் வைத்தியர் சொன்னான். 'என்னால் முடியாது' என்று.

## இந்தியாவை

வது.

பிளேக்நோய் எலிகளின் உடலில் வாழும் தெள்ளுகள் (Xenopsylla Cheopis) மூலமே பரவுகிறது. இத்தெள்ளுப்பூச்சிகள் முதலில் நோயுற்ற எலியைக்கடித்த பின் மனிதனை கடிக்கும்போது இந்நோய் பரவுகிறது. இதுவே நோய் மனிதரிடையே பரவுவதற்கு வழமையான காரணமாகின்றது. எலியின் ஒரு மில்லிலீற்றர் இரத்தத்தில் 10 லட்சம் பிளேக் பக்றீரியாக்கள் இருக்கலாம். இந்நோய் விவகாரத்தில் எலி ஒரு காவியாகவே செயற்படுகின்றது. நோயை ஏற்படுத்துகின்ற pesteurella pastis பக்றீரியா வகையை சார்ந்தது.

கொள்ளைநோய் தமதுநாடுகளுக்கும் வந்துவிடுமோ என்ற அச்சம்காரணமாக பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளில் விமான நிலைய அதிகாரிகள் உஷார்ப் படுத்தப்பட்டுள்ளனர். இந்தியாவிலிருந்து வரும் பயணிகள் தரையிறங்கியவுடனேயே மருத்துவ சோதனைக்கு ஆளாகின்றனர்.

ஜேர்மனியின் லுப்தான்சா விமானசேவை தனது இந்தியாவுக்கான சேவையில் வைத்தியர்களையும் அமர்த்தியுள்ளது. பயணிகளில் எவராவது ஒருவர் கொள்ளை நோயால் பாதிக்கப்பட்டிருந்தால் விமானப் பயணிகள் அத்தனை பேரும் தடுப்பு மருந்து எடுத்தல் வேண்டும் என்பதே தடுப்பு நடவடிக்கையாகும்.

உலக நாடுகள் இந்தியாவில் தோன்றியுள்ள இந்த கொள்ளை நோய் தமது நாடுகளினுள்ளும் நுழைவதை தடுக்க பல நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன.

அவுஸ்திரேலியா இந்தியாவிலிருந்து வரும் பயணிகள் குறித்து மருத்துவ சோதனையை கடுமையாக்கியுள்ளது. பங்களாதேஷ் இந்தியாவுடனான தனது ஒருசில எல்லைப்பாதைகளை தவிர ஏனைய அனைத்தையும் மூடிவிட்டது. விமான சேவையும் நிறுத்தப்பட்டுள்ளது. சீனா பம்பாய்க்கான தனது பயணிகள் விமான சேவையில் பயணம் செய்யும் இந்தியர்களின் விபரங்களையும் மருத்துவ அறிக்கையையும் கோருகிறது. எகிப்து இந்தியாவிலிருந்து வரும் அனைத்து பயணிகளுக்கும் நோய் தடுப்பு மருந்து கொடுக்கின்றது. இருமல் போன்ற பிளேக் நோய் அறிகுறி காணப்படுபவர்கள் ஆறு நாட்களுக்கு தடுத்து வைக்கப்படுவர்.

ஜப்பானின் மிற்சூய் நிறுவனம் தனது பம்பாய், டில்லி ஊழியர்களின் குடும்பத்தினரை ஜப்பானுக்கு மீள அழைத்துளளது.

மத்திய கிழக்கு நாடுகள் இந்தியாவுடனான தமது விமான, கப்பல் சேவைகளை நிறுத்திவிட்டன. மலேசியாவும் இந் நடவடிக்கையை எடுத்துள்ளது. சுவிஸ் அரசும் இந்தியர்கள் தொடர்பான தனது மருத்துவ சோதனையை சூரிச், ஜெனீவா விமான நிலையங்களில் மேற்கொள்கிறது.

இந்த சர்வதேச நடவடிக்கையினால் இந்தியாவின் பொருளாதாரமும் மிகவும் நெருக்கடிகளுக்குள்ளாகியுள்ளது.

இந்தியாவுடனான கப்பல் விமான சேவைகளை அரபு நாடுகள் நிறுத்தியதையடுத்து இந்தியாவிலிருந்து அந்த நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் இறைச்சி, பழம், மரக்கறி என்பன தேங்கியுள்ளன. இதனால் குறைந்தது தினமும் இரண்டு கோடி ரூபாவிற்கு நட்டம் ஏற்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் தோன்றிய பிளேக் நோயின் அச்சம் தீராத நோய்களினால் அவஸ்தைப்படுவோரை ஆதரித்தும் அவர்களுக்கென பராமரிப்பு நிலையங்களை கல்கத்தாவில் வைத்திருக்கும் அன்னை தெரேசா ரோம் நகர் சென்ற போது அவரை இத்தாலியர்கள் எவ்வாறு எச்சரிக்கையுடன் வரவேற்றார்கள் என்பதை நோக்கும் போது தெரிகிறது.

## சுதந்திரபூமி

''புன்னகையொன்று அவன் முகத்தில் அரும்பி மறைந்தது.''

''இதோ வீடு வந்து விட்டது, வண்டியை நிறுத்து.''

''வண்டி நின்றது.''

''தம்பி உம்மை எனக்கு நன்றாகப் பிடித்து விட்டது. வீட்டினுள் வாரும், தேநீர் அருந்திவிட்டுச் செல்லலாம்.'

'நன்றி ஐயா' ஆனால் எனக்கு இறங்கும்படி உத்தரவில்லை.''

'திகைத்தேன் நான்......''

''உத்தரவில்லையா?...''

'விரிந்த புன்னகை அவன் முகத்தில் இன்னும் பெரிதாகியது.''

'ஆம் எனது தலைமை நிலைய பணிப்பின்றி நான் எதுவும் செய்யமுடியாது.''

'தலைமை நிலையமா?''

'பெரிதாகச் சிரித்தான் அவன்''

'ஐயா நானும் ஒரு இயந்திர மனிதன்தான். உங்களைப் பத்திரமாக இறக்கும்படி எனக்கு பணிக்கப்பட்டதே தவிர இறங்கும்படி பணிக்கப் படவில்லை, வருகிறேன்'' என்றபடி புறப்பட்டான் அவன்-

'தலை சுற்றியது எனக்கு''

''இத்தனை நிஜமான படைப்பா. மேலை நாடுகள் கூட தமிழீழத்திற்கு அடுத்தபடிதான்- பெருமிதமடைகின்றது நெஞ்சம். இயந்திர மனிதனுக்கே இத்தனை ஊட்டப் பட்டுள்ளதென்றால் நிஜ மனிதனுக்கு?''

என் தலை கம்பீரமாக தமிழீழத்தாயை நோக்கி நிமிர்கிறது- நானும் தமிழன் என்ற உணர்வு இனிக்கிறது. மகிழ்வோடு உள்ளே நுழைகின்றேன்.

நன்றி: ஆதாரம்

# சிறிலங்காவில் அரசியல் அநாதையாகிவிட்ட இரு பிரதமர்களின் புதல்வன் அநுரா

சிறிலங்காவின் அரசியலரங்கில் இன்று ஆழ்ந்த அனுதாபத்திற்கு உரியவர் யார்? அரசியலரங்கில் இருந்த இடத்தையும் இழந்து, புகுந்த இடத்திலும் வேண்டாத மருமகளாக நடத்தப்படும் பிரமுகர் யார்? எந்த அரசியல்வாதியை ஒரு முன்மாதிரியாக ஒருபோதும் கொள்ளமுடியாது! செல்வாக்கான குடும்பத்தில் பிறந்து விடுவது மட்டும் தலைமைப் பதவியை பெற்றுவிடுவதற்கான தகைமையல்ல என்பதற்கு சுட்டிக் காட்டக்கூடிய உதாரணம் யார்? சொந்த வசதியை மட்டும் தக்கவைத்துக் கொள்வதற்காக கட்சியை தோல்விக்கு வழிகாட்டிக் கொண்டு தலைமையை தக்க வைக்க முயற்சி எடுத்தவர் எவர்? இவ்வாறு பல்வேறு கேள்விக்குரிய ஒரே பதில் அநுரா பண்டாரநாயக்க எனக் குறிப்பிடுவதில் தவறு ஏதும் இருக்க முடியாது.

அநுரா பண்டாரநாயக்க சிறிலங்காவில் இரண்டு பிரதமர்களின் ஒரே புதல்வர் இப்போதைய பிரதமரின் ஒரே சகோதரர். ஆனால் அரசியல் அரங்கில் அவர் தீண்டத்தகாதவர் போல ஒதுக்கப்படுவதும், மிகுந்த அவமதிப்புக்குரிய பிரமுகராக அவர் இப்போது மாறியிருப்பதும் புதிய விடயம் அல்ல. ஆனால் அவர் எவ்வாறு இந்த நிலையை எய்தினார் என்பதும், ஒரு சுயநல அரசியல்வாதியின் கதி எப்படியாகும் என்பதும் கவனத்திற்கு எடுக்கப்பட வேண்டியவைதான்.

### அநுராவின் தற்பெருமைகள்

இரண்டு பிரதமர்களின் ஒரே புதல்வர் என்பதும், எதிர்க்கட்சித் தலைவர்களான இருவரின் ஒரே புதல்வர் என்பதும் 25 வருடங்களுக்கு மேலாக நாட்டின் அரசியலுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர் என்பதும் அநுரா பண்டாரநாயக்காவின் தற்பெருமைகளுக்கு காரணம். சுதந்திரக்கட்சியின் இளைஞர்அணி அமைப்பாளராகஇருந்து கட்சியின் தேசிய அமைப்பாளர் என்ற நிலைவரையிலும் உயர்ந்தவர். 1977 இன்தேர்தலில் நுவரெலியா- மஸ்கெலியாதொகுதியில் இரு

வைத்துக் கொள்ள தவறிவிட்டார் என்பதும், தனது தேவை எந்தக் கட்சிக்கும் அவசியமானது என்பதைநிரூபிக்க தவறிவிட்டார் என்பதும் தான் இன்றைய அவலம்.

### அநுராவின் ஆற்றாமைகள்

1977-ம் ஆண்டின் பொதுத் தேர்தலில் நுவரெலியா- மஸ்கெலியா தொகுதியிலிருந்து அநுரா பண்டாரநாயக்கவும், அத்தனகல தொகுதியிலிருந்து திருமதி சிறிமாவோவும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். ஆனால் இதே காலப் பகுதியில் இந்தியாவில் இடம் பெற்ற பொதுத் தேர்தலில் திருமதி இந்திரா காந்தியும் அவரது மகன் சஞ்சய் காந்தியும் தோல்வி அடைந்து இருந்தனர். இதனை நாசூக்காக சுட்டிக்காட்டியஅப்போதைய பிரதமர் ஜே.ஆர் ஜெயவர்த்தனா, இந்தியாவில் பசுவும், கன்றும் தோற்றுப்போய் விட்டன. ஆனால் இங்கே பாராளுமன்றத்துக்கு வந்துள்ளனர். இவற்றில் பசுவை விட கன்று நல்லது என்ற பாணியில் பாராளுமன்றத்திலேயே குறிப்பிட்டார். அதாவது மிக நுட்பமாக அநுராவைத் தன் தந்திர வலைக்குள் ஜே.ஆர். சிக்கவைத்தார். இதன் விளைவாக சுதந்திரக் கட்சியின் தலைமைக்குள் தமது கருத்தை திணிக்கும் வாய்ப்பை ஜே. ஆர். பெற்றிருந்தார். இதுஅநுராவின் ஆற்றாமைகளில் முதலாவது எனலாம்-

1977 க்கு பின்னர் நடைபெற்ற தேர்தல்களில் கட்சியை வெற்றிமுகம் நோக்கி வழிநடத்த அநுராவிற்கு இயலாமற் போனது அடுத்து முக்கியமானது. குறிப்பாக 1982 இன் ஜனாதிபதி தேர்தலில் கட்சியின் வேட்பாளரான ஹெக்டர் கொப்பேகடுவவின் வெற்றிக்காக விஜய குமாரதுங்கவும், அவரது மனைவியான சந்திரிகாவும் முழுமூச்சாக உழைத்தபோதும் கொப்பேகடுவவின் வெற்றியில் அநுராபோதிய அக்கறை காட்டியிருக்க வில்லை. இதன்விளைவாக தேர்தல் முடிவுகளை அடுத்து கட்சி பிளவென்றைச் சந்திக்க நேர்ந்தது. விஜய குமாரதுங்கவும் அவரது சகாக்களும் சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேறினர்-

இவர்களின் வெளியேற்ற

கண்டு ஐக்கிய சோசலிசக் கூட்டணி விஜய குமாரதுங்க பலம் பெற்ற போதும் அநுரா சேற்றை வாரி இறைத்துக் கொண்டிருந்தாரே தவிர மாற்றுக் கருத்துக்களை முன் வைக்கவும் இல்லை. ஐ.தே.க.வின் நடவடிக்கைகளுக்கு பதிலளிக்கக் கூடிய மாற்றுக் கட்சியாக சுதந்திரக் கட்சியை வளர்க்கவும் இல்லை.

பின்னர் லலித்- காமினி போன்றோர் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியாகி மூன்றாவது சக்தியாக பரிணமிக்க முற்பட்ட போதும் கூட அதாவது ஐ. தே. க. வினுள் ஏற்பட்டிருந்த பிளவுகளையும், உட்பூசல்களையும் கூட அநுராவினால் சுதந்திரக்கட்சியின் நலனுக்காக பயன்படுத்திட இயலவில்லை ஹெல உறுமயவிற்கு ஆசி

இந்த நிலையில் தான் திருமதி சந்திரிகா மீண்டும் சுதந்திரக்கட்சியுடன் தன்னை அடையாளம் காட்டிக் கொண்டார். மனித உரிமை மீறல்கள் முதல் ஜனாதிபதி ஆட்சி முறை மாற்றம் ஈறாக பல்வேறு விடயங்கள் குறித்தும் புதிய கருத்துக்களையும் மாற்றுத்திட்டங்களையும் முன் வைத்தார்- ஐ. தே. கவிற்கு எதிராக சாத்தியமான வகையில் எல்லாம் மக்களை திரட்டுவதற்கு அவர் தீவிர முயற்சி மேற்கொண்டார்.

**இளையவன்**

இவற்றின் காரணமாக சுதந்திரக் கட்சிக்குள் திருமதி சந்திரிகாவின் கரம் மேலோங்கியது.

இதனை சகித்துக் கொள்ளவும் இயலாத நிலையில் அநுராவும் பௌத்த சிங்கள பேரினவாதத்தில் குளிர்காய முற்பட்டார். இதற்கு ஒரு சாட்டாக அமைந்தது தொண்டமான் முன் வைத்த சில ஆலோசனைகள். இவை நடைமுறைப்படுத்தும் வாய்ப்பு இருக்கிறதா என்றுகூட ஆராயாமல் அதனை எதிர்ப்பதற்கு 'ஹெல உறுமய'க்கள் முற்பட்டன். இந்தக் 'ஹெல உறுமய'க்களுக்கு அநுரா மறைமுகமாக ஆசி வழங்கினார். அதுவே அவரது அரசியல் வாழ்வின் அந்

தது. தேசிய பட்டியல் மூலமான பாராளுமன்ற உறுப்பினர் பதவியும் உயர் கல்வி பிரதி அமைச்சர் பதவியும் கூட அநுராவிற்கு தரப்பட்டது. ஆனால் அப்போதே ''இவ்வளவு நாளும் நாங்கள் பனடோல் குடிக்க வேண்டியிருந்தது இனி நீங்கள் பொலிடோல் தான் குடிக்க நேரும்'' என்று சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் எச்சரித்து இருந்தார்

எனினும், ரணில் விக்கிரமசிங்காவும், சிறிசேன கூரேயும் அநுராவிற்கு உற்சாகமூட்டினர். அநுராவுடன் சேர்ந்து சுமார் இருபது சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் கட்சி மாறுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதுபொய்த்துப் போக அநுராவின் அரசியல் வாழ்வின் மிகப் பெரும் களங்கமாக 'பிரான்சிஸ் கூ' விவகாரம்இடம்பெற்றது

பிரான்சிஸ் கூ ஐ-தே-கவிற்குதாவியதை தொடர்ந்து தென்மாகாணசபை கலைக்கப்பட வேண்டிய சூழல் ஏற்பட்டதும் பின்னர் நடைபெற்ற தென்மாகாணசபைத் தேர்தல் ஐ-தே-கவின் அந்திம காலத்திற்கு கால்கோள் இட்டதும் தெரிந்த சங்கதிகளே

இதேவேளை மேல்மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சராக மிகவும் அதிகப்படியான வாக்குகளால் திருமதி சந்திரிகா தெரிவு செய்யப்பட்டிருந்தார். சுமார் நான்கு மாத இடைவெளியில் தென் மாகாணத்தில் மாகாணசபைக்காக சுதந்திரக்கட்சியின் அமரசிறி தொடங்கொடவும், ஐ.தே.கவின் அமரசிறியும் மோதிக் கொண்ட தேர்தலானது ஒருவகையில் அநுராவுக்கும், சந்திரிகாவுக்கும் இடையிலானநேரடிப்பலப்பரீட்சை போலவே கருதப்பட்டது. ஐ.தே.கவின் சார்பில் உயர்கலவி அமைச்சர் என்ற மகுடத்துடன் அநுரா பண்டாரநாயக்கா தேர்தல் பிரசாரத்திற்கு ஐ.தே,கசார்பில் பொறுப்பேற்றிருக்க பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் திருமதி சந்திரிகா பிரசாரப் பொறுப்பை ஏற்றிருந்தார். இந்த தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணிக்குக் கிடைத்த அமோக வெற்றியானது அநுராவின் அரசியல்

நிலை அநுராவுக்கு ஏற்பட்டது- அதாவது மறுபக்கமாக குறிப்பிட்டால் எந்த மாவட்டத்திலும் ஐ.தே.கவினர் அநுராவுக்கு இடமளிக்கதயாராக இருக்கவில்லை, அத்துடன்தேர்தலில் போட்டியிட்டு வெற்றி ஈட்ட முடியும் என்ற நம்பிக்கையையும் அநுரா இழந்து போய் இருந்தார். இதன் தேர்தல் களத்திற்கு முகம் கொடுக்க பின்தங்கிநின்றார் எனினும்டி.பி.விஜேதுங்காவினால் அரவணைக்கப்பட்டு அமைசராக்கப்பட்டவரான அநுராவை டி.பி கைவிடத்தயாராக இருக்கவில்லை. அதனால் அநுராவிற்கு தேசிய பட்டியலின் இடம் ஒதுக்கப்பட்டது. தேர்தல் முடிவுகளின் பின்னரும் கூட தேசிய பட்டியலின் கீழான அவரது பாராளுமன்ற பதவி டி.பி.யின் கடைக்கண் பார்வை காரணமாக பறிக்கப்பட வில்லை.

ஆனாலும் பொதுத் தேர்தல் முடிவுகளை தொடர்ந்து தனது தலைமைப் பதவியை தக்கவைத்துக் கொள்ளவே தள்ளாட வேண்டிய அவசியம் டி. பிக்கு நேரிட்டுவிட்டதுஅத்துடன் ஐ-தே-கவினுள் பலம் பெற்று முன்னேறும் காமினி திசாநாயக்க தனது முன்னேற்றத்திற்கான முட்டுக்கட்டைகளாக ரணில் விக்கிரமசிங்க, சிறிசேன கூரே போன்றோரை கருதும் நிலையில் அவர்களால் செங்கம்பள வரவேற்புஅளிக்கப்பட்ட அநுராவின் நிலை எம் மாத்திரம்?

அத்துடன் அநுரா பண்டாரநாயக்கா தானாக கட்சியை விட்டு வெளியேறும் சூழலை ஏற்படுத்தி அதன் மூலம் கிடைக்கும் வெற்றிடத்தை திருமதி ஹேமா பிரேமதாசாவிற்கு வழங்குவதன் மூலம் ஒரே கல்லில் இரண்டு மாங்காய் விழுத்தவும் காமினி திட்டமிடுவதாகக் கருதப்படுகின்றது இந்த நிலையில் அநுரா அமெரிக்கா பயணமானார் சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேறிய போது லண்டன் பயணமான அநுரா ஐ தே.கவின் சிறிசேன கூரே ரணில் விக்கிரமசிங்க ஆகியோரால் வரவழைக்கப்பட்டார் ஆனால் இம்முறை அநுரா அமெரிக்கா போனபோதும் எவரும் கண்டு கொண்டதாக இல்லை அமெரிக்காவிலிருந்துமீண்டும்திரும்பிய போதும் விமான நிலையத்தில் தன்ன

# கிழநரியின் இறுதிநேரக் கனவுகள்

"சற்றுக் கூன் விழுந்த முதுகுடன், ஒருவரின் உதவியின்றி நீண்ட தூரம் நடக்க முடியாத நிலையில், இன்று அவர் உள்ளார்.

தொடர்ந்து அவர் பேசினால், மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்கும் நிலையில் கண்பார்வையும் மங்கிப்போயுள்ளது.

காதுகள் கேட்பதும் குறைவடைந்த நிலையில், உரையாடல்களைக் கேட்பதற்கென 'செவிபன்னி' பொருத்தப்பட்ட நிலையிலும் கூட அவருடன் உரக்கவே பேச வேண்டியுள்ளது.

இவற்றோடு, அவரின் குரலும் தளர்ந்து போயுள்ளது. சிலசமயம், உதடுகளின் அசைவின் மூலமே அவர் கூறுவதைக் கிரகிக்க வேண்டியுள்ளது.'

இவ்வாறு ஜே ஆரின் முதுமைபற்றிக் கூறுகின்றார் அண்மையில், முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனாவைச் சந்தித்து உரையாடிய ஒருவர்.

ஆனாலும், மூப்பிற்கும் - ஆசைக்கும், சம்பந்தம் எதுவும் இருப்பதாக இல்லை. அதிலும், அரசியல் அபிலாசை உள்ளவர்கள், அதிகாரத்தை சுவைத்தவர்கள் மூப்பின் காரணமாக அதைத் துறப்பதென்பது இயலாத காரியம் போன்றே தெரிகின்றது.

இதன் வெளிப்பாடுதான் இன்று சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதியும், ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவருமான ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் நிலையும் என எண்ண வைக்கிறது.

கடந்த மாதம் எண்பத்தெட்டாவது பிறந்த தினத்தைக் கொண்டாடிய அவர், பத்திரிகையாளரிடம் தனது அபிலாசையை வெளிப்படையாகக் கூறினார்.

ஐக்கிய தேசியக்கட்சி தொடர்ந்து தோல்வி அடைவதை தான் அனுமதிக்கப் போவதில்லை, கட்சி உறுப்பினர்கள் விரும்பினால் தான் தலைமை ஏற்கத்தயாராக இருப்பதாக கூறிய அவர் கட்சியின் பின்னடைவிற்குக் காரணம் கட்சியில் மக்கள் நம்பிக்கை பெற்ற தலைமை இல்லாமை தான் எனவும் தெரிவித்தார்.

ஜே ஆர் ஜெயவர்த்தனாவின் அரசியல் அபிலாசைகள் அவர் 1989 இல் ஜனாதிபதிப்பதவி துறக்கும்போது முற்றுப் பெற்று விடவில்லை என்பது சகலருக்கும் தெரிந்தவிடயம் தான். சிறிலங்காவின் முடிசூடா மன்னனாக, சாகும் வரை இருந்து இறப்பதே ஜே- ஆரின் அரசியற்குறிக்கோளாகும். அதற்காக உருவாக்கப்பட்டதே ஜே ஆர் ஜெயவர்த்தனாவின்அரசியல் அமைப்புமாகும்.

ஆனால், ஜே. ஆரின் அரசியற்கணக்கு சிங்களவரைப் பொறுத்து சரியானபோதும் தமிழரைப் பொறுத்து அது தப்பான கணக்காகவே முடிந்தது. இதன் விளைவு ஜே. ஆரின் தென்னிலங்கை அரசியற்கணக்குக்கும் பிழைத்தது. மகுடத்தை ஜே- ஆர் இழக்க வேண்டிவந்தது-

தனது ஆயுள்பூராவும் மகுடத்தைப் பாதுகாக்கவென அவரே கொண்டு வந்த அரசியலமைப்பும், தனது ஆதிபத்திய உரிமையைப் பாதுகாக்க கையொப்பமிட்ட இந்திய- சிறிலங்கா சமாதான உடன்படிக்கையும் இறுதியில் அவர் மகுடம் துறக்கவும், பதவி துறக்கவும், காரணமாயிற்று.

இந்நிலையில் அதாவது கனவுகள் கலைந்த நிலையில் ஜே ஆர். வெளியேறவேண்டி வந்தது. ஆனால், அதன் பின்னர் பதவிக்கு வந்த பிரேமதாசா ஜே. ஆர். மகுடத்தைப்பற்றி கனவு காணுவதைக் கூட அனுமதிக்க தயாராக இருக்க இல்லை.

ஆனால் பிரேமதாசாவின் திடீர் மறைவு மீண்டும்

வழிநடத்த அநுராவிற்கு இயலாமற் போனது அடுத்து முக்கியமானது. குறிப்பாக 1982 இன் ஜனாதிபதி தேர்தலில் கட்சியின் வேட்பாளரான ஹெக்டர் கொப்பேகடுவவின் வெற்றிக்காக விஜய குமாரதுங்கவும், அவரது மனைவியான சந்திரிகாவும் முழுமூச்சாக உழைத்தபோதும் கொப்பேகடுவவின் வெற்றியில் அநுராபோதிய அக்கறை காட்டியிருக்கவில்லை. இதன்விளைவாக தேர்தல் முடிவுகளை அடுத்து கட்சி பிளவென்றைச் சந்திக்க நேர்ந்தது. விஜய குமாரதுங்கவும் அவரது சகாக்களும் சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேறினர்-

### அநுராவின் தற்பெருமைகள்

இரண்டு பிரதமர்களின் ஒரே புதல்வர் என்பதும், எதிர்க்கட்சித் தலைவர்களான இருவரின் ஒரே புதல்வர் என்பதும் 25 வருடங்களுக்கு மேலாக நாட்டின் அரசியலுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர் என்பதும் அநுரா பண்டாரநாயக்காவின் தற்பெருமைகளுக்கு காரணம். சுதந்திரக்கட்சியின் இளைஞர்அணி அமைப்பாளராகஇருந்து கட்சியின் தேசிய அமைப்பாளர் என்ற நிலைவயிரைலும் உயர்ந்தவர். 1977 இன்தேர்தலில் நுவரெலியா-மஸ்கெலியாதொகுதியில் இருந்தும்பின்னர்அத்தனகல தேர்தல் தொகுதியிலிருந்தும் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர். திருமதி சிறிமாவோவின் குடியுரிமை பறிக்கப்பட்டு அரசியலரங்கிலிருந்து அவர் விலக்கி வைக்கப்பட்டிருந்த வேளையில் பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக பொறுப்பேற்று நெருக்கடிமிக்க ஒரு காலகட்டத்தில் கட்சியை பாதுகாத்தவர். கட்சியின் நலன்கள் என்பதற்காக உறவுகள் தரும் அழுத்தங்களுக்கோ அல்லது இரத்த உரித்து பாசங்கள் என்பதற்கோ இடம் தராமல் செயற்படக் கூடியவர் எனப் பெயர் எடுத்தவர்.

இவ்வாறெல்லாம் இருந்த போதும் கூட அநுரா தனது தலைமைத்துவத்தை தக்க

இவர்களின் வெளியேற்றத்தை தொடர்ந்து கட்சியின் முழுக்கட்டுப்பாடும் அநுராவின் கைகளில் தேங்கிய போதும் கூட அவரால் கட்சிக்கு ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்த இயலவில்லை. புத்துயிர் ஊட்ட முடியவில்லை புதிய திட்டங்கள் எதையும் முன்வைத்து கட்சியின் அடிமட்டம் முதல் உயர் மட்டம் வரை ஈர்க்கக் கூடிய சக்தி பெற்றவராக பரிணமிக்க அநுராவினால் இயலவில்லை.

சிறிலங்காவின் அரசியல் அரங்கில் மூன்றாவது சக்தியாக ஒரு கட்சி வளர வேண்டும் என்ற முனைப்பு ஏற்பட்டு சிறிலங்கா மக்கள் கட்சி விஜய குமாரதுங்க தலைமையில் முன்னேறிய போதும் இடது சாரிகளின் சட்டணி சுதந்திரக் கட்சிக்குள் திருமதி சந்திரிகாவின் கரம் மேலோங்கியது.

இதனை சகித்துக் கொள்ளவும் இயலாத நிலையில் அநுராவும் பௌத்த சிங்கள பேரினவாதத்தில் குளிர்காய முற்பட்டார். இதற்கு ஒரு சாட்டாக அமைந்தது தொண்டமான் முன் வைத்த சில ஆலோசனைகள். இவை நடைமுறைப்படுத்தும் வாய்ப்பு இருக்கிறதா என்றுகூட ஆராயாமல் அதனை எதிர்ப்பதற்கு 'ஹெல உறுமய'க்கள் முற்பட்டன். இந்தக் 'ஹெல உறுமய'க்களுக்கு அநுரா மறைமுகமாக ஆசி வழங்கினார். அதுவே அவரது அரசியல் வாழ்வின் அந்திம காலத்திற்கும் அத்திவாரமாகியது.

1993 மே 22-ல் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தல்களைத் தொடர்ந்து ஏற்பட்ட சூழ்நிலைகளில் அநுரா பண்டாரநாயக்கா சுதந்திரக் கட்சியில் இருந்து குற்றச்சாட்டு எதுவும் தெரிவிக்கப்படாமல் இடைநிறுத்தம் செய்யப்பட்டார். ஆனால் 89 தினங்கள் வரை மௌனமாக இருந்த அநுரா பின்னர் கட்சியிலிருந்து விலகுவதாக பகிரங்கமாக அறிவித்தார். பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் துறந்தார். மாகாணசபை தேர்தல் தோல்விகளையடுத்து ஆட்டம் கண்டிருந்த ஐ-தே-க அநுராவிற்கு செங்கம்பள வரவேற்பு கொடுத்

...க்காக சுதந்திரக்கட்சியின் அமரசிறி தொடங்கொடவும், ஐ.தே.கவின் அமரசிறியும் மோதிக் கொண்ட தேர்தலானது ஒருவகையில் அநுராவுக்கும். சந்திரிகாவுக்கும் இடையிலானநேரடிப்பலப்பரீட்சை போலவே கருதப்பட்டது. ஐ.தே.கவின் சார்பில் உயர்கலவி அமைச்சர் என்ற மகுடத்துடன் அநுரா பண்டாரநாயக்கா தேர்தல் பிரசாரத்திற்கு ஐ.தே,கசார்பில் பொறுப்பேற்றிருக்க பொது ஜன ஐக்கிய முன்னணி சார்பில் திருமதி சந்திரிகா பிரசாரப் பொறுப்பை ஏற்றிருந்தார். இந்த தேர்தலில் பொது ஜன ஐக்கிய முன்னணிக்குக் கிடைத்த அமோக வெற்றியானது அநுராவின் அரசியல் அடித்தளத்தையே ஆட்டம் காணச்செய்தது. மேலும் குறுகிய கால இடைவெளிகளில் போட்டியிட்ட தேர்தல்கள் அனைத்திலும் அமோக ஆதரவைப்பெற்றுவெற்றியீட்டிய தலைவராக திருமதி சந்திரிகா உருவாகினார், இதன் காரணமாக சுதந்திரக்கட்சிக்குள் இருந்த அநுராவின் ஆதரவாளர்கள் திருமதி சந்திரிகாவின் தலைமைத்துவத்திற்கு கட்டுப்பட்டனர். ஒரு சிலர் தூர ஒதுங்கிக் கொண்டனர்.

இந்த நிலையில் தான் ஆகஸ்ட் மாதத்தில் பொதுத்தேர்தலை நாடு எதிர்நோக்கியது. பொதுத் தேர்தலில் எந்த மாவட்டத்தில் போட்டியிடுவது என்பதைக் கூட தீர்மானிக்க முடியாத இக்கட்டான நிலை ஏற்படுத்தி அதன் மூலம் கிடைக்கும் வெற்றிடத்தை திருமதி ஹேமா பிரேமதாசாவிற்கு வழங்குவதன் மூலம் ஒரே கல்லில் இரண்டு மாங்காய் விழுத்தவும் காமினி திட்டமிடுவதாகக் கருதப்படுகின்றது இந்த நிலையில் அநுரா அமெரிக்கா பயணமானார் சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேறிய போது லண்டன் பயணமான அநுரா ஐ தே.கவின் சிறிசேன கூரேரணில் விக்கிரமசிங்க ஆகியோரால் வரவழைக்கப்பட்டார் ஆனால் இம்முறை அநுரா அமெரிக்கா போனபோதும் எவரும் கண்டு கொண்டதாக இல்லை அமெரிக்காவிலிருந்துமீண்டும்திரும்பிய போதும் விமான நிலையத்தில் தன்னந்தனியாக தனது உடைமைகளைதானே தள்ளிவர வேண்டிய அவலநிலை.

அது மட்டுமல்ல, மீண்டும் சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமை பெற வேண்டுமாயின் வெளிநாட்டில் 'அநாதை ஆச்சிரமம்' ஒன்றிலேயே தங்கியிருப்பது போல இருக்க வேண்டும் என்ற நிபந்தனை வேறு.

''தந்தையர் கட்சி அழைத்தது. எனது திறமைக்கும், ஆற்றலுக்கும் மதிப்பு இல்லாத இடத்திலிருந்து எனது தந்தையை உருவாக்கிய கட்சிக்கு செல்கிறேன்'' என மனமகிழ்வுடன் குறிப்பிட்ட அநுராபண்டாரநாயக்க, இப்போது இருந்ததையும் இழந்து பிடித்ததையும் பறிகொடுத்து அரசியலில் அனாதையாக்கப்பட்டு விட்டார்.

---

அதற்காக உருவாக்கப்பட்டதே ஜே ஆர் ஜெயவர்த்தனாவின்அரசியல் அமைப்புமாகும்.

ஆனால், ஜே. ஆரின் அரசியற்கணக்கு சிங்களவரைப் பொறுத்து சரியானபோதும் தமிழரைப் பொறுத்து அது தப்பான கணக்காகவே முடிந்தது. இதன் விளைவு ஜே. ஆரின் தென்னிலங்கை அரசியற்கணக்குக்கும் பிழைத்தது. மகுடத்தை ஜே- ஆர் இழக்க வேண்டிவந்தது-

தனது ஆயுள்பூராவும் மகுடத்தைப் பாதுகாக்கவென அவரே கொண்டு வந்த அரசியலமைப்பும், தனது ஆதிபத்திய உரிமையைப் பாதுகாக்க கையொப்பமிட்ட இந்திய- சிறிலங்கா சமாதான உடன்படிக்கையும் இறுதியில் அவர் மகுடம் துறக்கவும், பதவி துறக்கவும், காரணமாயிற்று.

இந்நிலையில் அதாவது கனவுகள் கலைந்த நிலையில் ஜே ஆர். வெளியேறவேண்டி வந்தது. ஆனால், அதன் பின்னர் பதவிக்கு வந்த பிரேமதாசா ஜே. ஆர். மகுடத்தைப்பற்றி கனவு காணுவதைக் கூட அனுமதிக்க தயாராக இருக்க இல்லை.

ஆனால் பிரேமதாசாவின் திடீர் மறைவு மீண்டும் ஜே. ஆருக்கு மகுடம் சூடும் ஆசையைத் தூண்டியது. பிரேமதாசா இறந்த வேளை இந்தியாவில் இருந்தவர் உடனடியாக நாடு திரும்பினார். ஐ தே. கட்சிக்குள் காய்களையும் நகர்த்தினார்.

டி பி. விஜேதுங்க ஜனாதிபதியாகவும், ஐ. தே. க. தலைவராகவும் வருவதற்கு இவரின் ஆசியும் இருந்தது பிரேமதாசாவின் கைப் பொம்மையாக இருந்த டி. பி விஜேதுங்கா தனது அரசியற் சதுரங்கத்தில் இலகுவாக நகர்த்திச் செல்லக் கூடிய காயாகவே ஜே. ஆர். கருதியதினாலேயே இவ்ஆசீர்வாதம் இலகுவாகக் கிட்டியது

ஆயினும், ஜனாதிபதியாக டி. பி. பதவி ஏற்று ஓரிரு மாதங்களிலேயே ஜே ஆரின் கனவைக் கலைத்தார். ஐ. தே. கவில், ஜே ஆரின் அணிக்கு தலைமை தாங்கிய ரணில் விக்கிரமசிங்காவின் தலைமைக்கு எதிரான பலமான தலைமை ஒன்றை முன்னைய அவரது சிஷ்யர்களில் இருந்தே உருவாக்கினார்.

இந் நிலையில் வந்த மாகாணச் சபைத் தேர்தல், பொதுத் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியானது டி. பி யைப் பலவீனமாக்கியது. ஐ தே. கவிற்குள் குழப்பத்தை உண்டு பண்ணியது. இதனைப் பயன்படுத்தி அரசியலில் மீள் பிரவேசம் செய்யும் தனது நீண்ட கனவை வெளியிட்டார் ஜே ஆர். அவர் தனது தலைமைக்கான அரசியற் சூழ்நிலை உருவாகியுள்ளதாகக் கருதினார். ஐ தே. கவில் ஏற்பட்டுள்ள நெருக்கடி. தன்னைத் தலைமைக்கு அழைப்பதாக உலகிற்குக் காட்ட முனைகின்றார்.

ஆனால் இவரது கடைசி நேர அபிலாசைகள் எவ்வளவு தூரத்திற்கு சிறிலங்கா அரசியலில் வெற்றியளிக்கும் என்பதில் சந்தேகங்களே உள்ளன. ஏனெனில் கடந்தகால அரசியல் சூழ்நிலைகள் இன்றில்லை என்பதோடு அவரது அரவணைப்பில் வளர்ந்த அவரின் வாரிசுகளே இன்று ஐ. தே. கவிற்குள் முட்டி மோதிக் கொண்டு நிற்கின்றார்கள். அதிலும் இறுதிவரை அவரது விருப்பத்திற்கும், அரவணைப்பிற்கும் உள்ளாகியிருந்த ரணில் விக்கிரம சிங்கா பலவீனப்பட்டுப் போயுள்ளார்.

அத்தோடு அவரது முன்னைய சிஷ்யப்பிள்ளை ஆயினும் இன்று ஐ தே. க. தலைமையை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கும் காமினி திசாநாயக்கா ஏற்கனவே ஜே ஆரின் அரசியற் பிரவேச அபிலாசை குறித்து எச்சரிக்கை அடைந்துள்ளார். இதன் காரணமாக ஜே. ஆரின் அபிலாசைக்கு அணைகட்டும் முயற்சியிலும் அவர் இறங்கிவிட்டார்.

அதேவேளை, இன்றைய சிறிலங்கா அரசின் பொதுவான போக்கிலும் 70க்குமேற்பட்டவர்களின் காலம்முடிந்து விட்டது என்றே கருதப்படுகின்றது. இருப்பவர்கள் கூட ஒதுக்க முற்படுகையில் ஒதுங்கியவர்கள் நுழைய முற்படுவது ஒருவகையில் பருவகாலம் அறியாதமுயற்சி என்றும்கூறலாம் ஆனால் ஆசை யாரைவிட்டது ஜே. ஆர் மட்டும் அதற்கு ஏன் விதிவிலக்காக வேண்டும்? கிழநரி முயற்சிக்கட்டும் இறுதிவரை

ஜெநி

---

## சிற்பக்கலாநிதி

கம் செய்வதில்லை. பணத்தை எதிர்பார்த்து இதனைச் செய்வதில்லை நாளாந்தம் நான்கு ஓவியங்களையாவது தீட்டாது விடின் தூக்கமே வருவதில்லை கல்வித் திணைக்களம் கூட மூன்றாண்டுகள் வெளிநாடு சென்று இக்கலையில் மேலதிக பயிற்சியை பெற்றுவருமாறு கோரியது அதனை கூட நிராகரித்து விட்டு சொந்த மண்ணில் வாழ்ந்து கலையை வளர்க்கவே விரும்பினேன் அதுவே எனது இலட்சிய மாகவும் உள்ளது.

### கலை வளர வேண்டும்:

நான் கற்கும் காலத்தில் எனது ஆசான்கள் கலைநுணுக்கங்களை முழுமையாக காட்டித்தருவதில்லை காலம் கடத்தி வருவர் இதனை நான் முற்றாக எதிர்க்கிறேன் ஒரு உண்மையான கலைஞனுக்கு அது அழகல்ல. தன்னிடமுள்ள அனைத்து நுணுக்கங்களையும் ஒளிவு மறைவின்றி மற்றவர்களுக்கு வழங்குதல் வேண்டும் என்னுடன் இந்தக் கலை அழியக்கூடாது என்பதனாலேயே பல வருடங்களாக இக் கல்லூரியை நிறுவி பல கலைஞர்களை உருவாக்கி வருகிறேன்.

எந்தப்பிள்ளையும் மூடர்களல்ல. அவர்களது நிலையை உணர்ந்து அதற்கேற்ற விதத்தில் அவர்களைப்பயிற்றுவித்தல் வேண்டும்,

சித்திரத்தில் மனப்பாங்கு, தொழில்திறன், ரசிகத்தன்மை தொழில்நுட்பம், பூரணப்படுத்துதல், நயத்தல், விடாமுயற்சி, கருத்து வெளிப்பாடு தனித்துவம் என்ற ஒன்பது உணர்ச்சிகள் உண்டு இவற்றை தாரக மந்திரமாகக் கொண்டே வரும் மாணவர்களைக் கலைஞர்களாக்குகிறேன் தூரிகை பிடிக்கத் தெரியாது வரும் மாணவர்கள் பலரை சிறந்த ஆசிரியர்களாக உருவாக்கியிருக்கிறேன் இலங்கை பூராவும் பிரபல பாடசாலைகளில் அவர்கள் சித்திர ஆசிரியர்களாக உள்ளனர்-

என்னிடத்திற்குப் பல கலைஞர்களை உருவாக்கி விட்டேன். தொடர்ந்தும் என் இறுதி மூச்சு இருக்கும்வரை பல சிற்ப ஓவியக் கலைஞர்களை உருவாக்கிக் கொண்டே இருப்பேன். உருவாக்கும் சித்திரங்களைப்பார்த்தே இவர்கள் எனதுமாணவர்கள்தான் என்பதை மற்றவர்கள் ஊகிக்க வேண்டும். மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்வதில் பலத்த சிரமங்கள் உள்ளன. நாட்டில் நல்ல சூழ்நிலை உருவாகுமானல் பலவித சிற்பங்களையும் முகமூடிகளையும், உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய திட்டமிட்டுள்ளேன், என்றார்.

உயிரோவியங்கள், உருவச் சிலைகள், கோவில் திரை ஓவியங்கள், கோவில் சிற்பங்கள், ஒப்பனை, நாடக அரங்க நிர்மாணம், கேலிச் சித்திரங்கள், இலங்கைத் தயாரிப்பான 'தெய்வம்தந்த வீடு' சினிமாஸ்கோப் படத்தின் கலை இயக்குநராகவும் திகழ்ந்து, கலையுலகில் தனது முத்திரையைப் பதித்த ''சிற்பக் கலாநிதி'' தமிழீழ மண்ணிற்கு தன் சேவையைதொடர்ந்து வழங்க வெள்ளிமஞ்சரி சார்பில் வாழ்த்தி விடைபெற்றேன்-

---

## மாறாத மனங்கள்

'காஞ்சனாவித்தியாசமானவள்' என்ற கதையில் - ரஞ்சனின் மனமாற்றம் பற்றி அழுத்தமாகச் சொல்லப்படவில்லை. திருமண அழைப்பிதழ் கொண்டு வந்து சாதாரணமாக கொடுப்பது போல சித்திரிக்கப்பட்டுள்ளது.

எல்லா கலைப் படைப்புகளும் உணர்விறுக்கத்துடன் இயைந்தவையே.

நூலாசிரியருக்கு சிறுகதை என்கிற இலக்கிய வடிவம் நன்கு கைவரப்பட்டிருக்கின்றமையை அவதானிக்க முடிகிறது நிறைய... அதேவேளை காத்திரமான படைப்புகளுக்காக இந்த மண் காத்து நிற்கிறது.

மிகத் தரமான படைப்புகளைத்தந்தபல அறிமுக எழுத்தாளர்கள் காணாமல் போய்விடும் நிலை இங்கு வரலாறாகியுள்ளது. காரணம் ஆர்வம் இல்லாத காரணத்தினாலும் வேறு சிக்கல்களினாலும் இலக்கிய படைப்பு முயற்சிகளிலிருந்து ஒதுங்கிவிடுகின்றனர்.

தி. உதய சூரியன் என்கிற அறிமுக எழுத்தாளர் இந்த மண்ணின் எதிர்பார்ப்பிற்கு சாதகமானவராக நின்று தமது ஆற்றலை வெளிப்படுத்த வேண்டும்.

அழகான அட்டையுடன் வெளிவந்துள்ள இந்த நூல் மிக தரமானது என்றேஅதன் உள்ளடக்கம் வெளிப்படுத்தி நிற்கின்றது.

# லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க தனியான உயர்நீதிமன்றம்

(கொழும்பு)

லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யும் விசேட நடவடிக்கைக்கென உயர்நீதிமன்றம் ஒன்றை அமைக்க சிறிலங்கா அரசு தீர்மானித்துள்ளது.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்பின் செய்தியாளரிடையே உரை நிகழ்த்திய வெளிநாட்டு வர்த்தகநிதி அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் இந்தத் தகவலை தெரிவித்தார்.

மேலும் எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் புதிய லஞ்சத்தடுப்புச் சட்டத்திற்கு திருத்தங்களைக் கொண்டுவர அரசு உடன்பட்டுள்ளது என்றார்.

லஞ்சக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டவர்களின் கடவுச்சீட்டுக்கள் 3 மாத காலத்திற்கு மட்டுமே தடுத்துவைக்கப்படும். இதற்கு மேலும் கடவுச்சீட்டு தடுத்து வைக்கப்படல் வேண்டுமா என்பது குறித்து நீதிமன்றம் தீர்மானிக்கும்.

லஞ்சக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டவர்களின் சொத்துக்கள், அத்தகைய சொத்துக்கள் லஞ்சப்பணத்தின் மூலம் வாங்கப்பட்டிருந்தால் மட்டுமே பறிமுதல் செய்யப்பட இருக்கின்றன.

அப்பாவியான மூன்றாவது நபர் இத்தகைய சொத்துக்களைக் கொள்வனவு செய்திருந்தால் சொத்தைப் பறிமுதல் செய்வதற்குப் பதிலாக லஞ்ச நபர்மீது சிறைத்தண்டனையையோ அல்லது வேறு தண்டனையையோ நீதிமன்றம் வழங்கும்.

லஞ்சக் குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட நபரை நீதவான் விளக்கமறியலில் வைப்பார். ஆணைக்குழுவின் எழுத்து மூலமான அங்கீகாரத்தின் பேரிலேயே அவருக்குப் பிணை அனுமதிக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

# சமாதான சூழ்நிலை ஏற்படும் வரை அவசரகாலச் சட்டம் அவசியம்

## அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான சகல வித முயற்சிகளையும் அரசாங்கம் மேற்கொண்டு வருவதாக பிரதிபாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் அவசரகால நிலையை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிப்பதற்கான பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றிய அவர் வடக்கு - கிழக்கு மாகாணம், புத்தளம் மாவட்டத்தில் கற்பிட்டி உட்பட மூன்று பிரதேச செயலர் பிரிவுகள் அனுராதபுர மாவட்டத்தில் மதவாச்சி, ஹெப்பிட்டியகொல, பதவிய, கொறவப்பொத்தான ஆகிய இடங்கள் நுவரெலிய மாவட்டத்தில் சில இடங்களிலும் அவசரகாலநிலை ஒக்டோபர் நாலாம் திகதியிலிருந்து மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது என்றார்.

சமாதான நிலை உருவாகும் வரை இப்பகுதிகளில் இத்தகைய அவசரகால நிலையை அமுல் செய்வது அவசியமானதாகும். நாட்டு மக்கள் ஒற்றுமையாகவும் சுதந்திரமாகவும் வாழ்வதற்கு வகை செய்யும் விதத்தில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண அரசு சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. இந்த பிரதேச செயலக எல்லைப் புறங்களில் நெருக்கடியான சூழ்நிலை நிலவுகிறது.

பாதுகாப்பு படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்தும் தாக்குதல் குறித்து விபரிக்கையில் நாட்டில் சாதாரணமாகக் கடைப்பிடிக்கும் சட்டங்கள் இந்தப் பகுதிகளில் நிலவும் நிலைமைகளுக்குப் போதுமானதாக இல்லாமையால் இதற்கு அவசரகால நிலைமை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது என அமைச்சர் குறிப்பிட்டார்.

# குற்றப்புலனாய்வு அதிகாரியாக நடித்த போலி ஆசாமி கைது

## உயர் பொலிஸ் அதிகாரி உடந்தையாம்

(கொழும்பு)

கொழும்பு குற்றப் புலனாய்வு தலைமையகத்தின்உயரதிகாரிபோல நடித்து வடக்கு, கிழக்கு பகுதிகளிலிருந்து கொழும்புசென்று தங்கியுள்ள தமிழ்இளைஞர்களிடம் பணம் பறிப்பதில் ஈடுபட்டிருந்த நபர் ஒருவர் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வடக்கிலிருந்து கொழும்பு வந்து மத்திய வீதியிலுள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்த விஸ்வநாதன் பிரபாகரன் என்பவரிடம் இந் நபர் 5000 ரூபாவை பெறும் போது லஞ்சத் திணைக்கள அதிகாரிகளால் பிடிக்கப்பட்டார்.

உயர் பதவி வகிக்கும் பொலிஸ் அதிகாரி ஒருவரின் உதவியுடன் இந் நபர் மிக நீண்டகாலமாக இந் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்ததாக தெரியவந்துள்ளது. சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரி இந் நபர் பொலிசாருக்கு தகவல் வழங்குபவர் எனத் தெரிவிக்கும் கடிதமொன்றை வழங்கியிருந்ததும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வாக்கு மூலமளிக்க வரும்படி சிரேஷ்ட பொலிஸ் அதிபருக்கும் லஞ்சத் தடுப்பு திணைக்களம் அழைப்பு விடுத்துள்ளது.

திருமலையில்

# சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ கிராமிய மேம்பாட்டுத் திட்ட தையல் பயிற்சிக்கான சான்றிதழ் வழங்கலும் பரிசளிப்பு விழாவும் யாழ். மாவட்ட அரசியல்துறை செயலக திலீபன் கலந்துரையாடல் மண்டபத்தில் ஞாயிறு பிற்பகல் 2.30 க்கு நடைபெறவுள்ளது.

வலிகாமக் கோட்ட கிராமிய மேம்பாட்டுத் திட்ட இணைப்பாளர்திரு. க. நாகரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் யாழ்மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ப. போல் திலகநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பரிசில்களையும் வழங்கவுள்ளார்

# தமிழகத்திலிருந்து வந்த அகதிகள் வவுனியாவில் தடுத்து வைப்பு

## கொள்ளை நோய் பரிசோதனை

# யுத்தம் இடைநிறுத்தப்பட்டதான செய்தியில் உண்மை எதுவுமில்லை

யுத்தம்இடை நிறுத்தி வைக்கப்பட்டதாக வெளிவந்த செய்திகளில் எதுவித உண்மையும் இல்லை. வடகிழக்கில் இராணுவத்தினர் தமது வழமையான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இவ்வாறு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த கூறியுள்ளார்.

கொழும்புதினசரி ஒன்றுக்கு பேட்டியளித்த அவர் மேலும் கூறுகையில் யுத்த நிறுத்தமோ? யுத்த இடைநிறுத்தமோ அரசாங்க தூதுக் குழுவுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெறும் முதற்கட்டப் பேச்சுவார்த்தைக்குப் பின்னரே மேற்கொள்ளப்படும்.

அரசாங்க தூதுக் குழுவுக்கும், புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை எதிர்வரும் 13-ம் 14-ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும். இதில் எதுவித மாற்றமும் இல்லை. யுத்த நிறுத்தமொன்றுக்கு விடுதலைப் புலிகள் கோரிக்கை விடுத்தால் அதனை அரசு பரிசீலிக்கும்.

அரசாங்கம் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த இருப்பது பற்றி பலர் பலவாறு விமர்சனம் செய்யலாம். திட்டமிட்டபடி பேச்சு நடைபெறும். பெரும்பான்மையினர் யுத்தம் முடிவுக்கு வரவேண்டும் என விரும்புகின்றனர். அரசாங்கம் மக்களின் ஆணையை நிறைவேற்றும் எனவும் தெரிவித்தார்

### யாழ். ஆஸ்பத்திரி

ளர் அமைச்சரை சந்திப்பதற்கு ஒழுங்கு செய்து தருமாறு கேட்டதற்கு அவரை தற்போது சந்திக்க இயலாதென செயலாளர் தெரிவித்ததாக அறிய முடிகிறது.

இதேவேளை சுகாதார அமைச்சரை சந்திக்கக் கிடைத்த ஒருசில நிமிடத்தில் அவரிடம் யாழ். போதனா மருத்துவ மனையில் உள்ள தற்போதைய பிரச்சினைகள் பற்றி பேச முற்பட்டபோது தனக்கு நேரமில்லையெனவும் பின்னர் ஒருமுறை சந்திக்கும் போது பேசலமெனவும் அமைச்சர் தெரிவித்ததாக பணிப்பாளர் தெரிவித்தார்.

### அரசாங்க

இதேசமயம், யாழ்ப்பாணம் வரும் இவ் அரசாங்கத் தரப்பு பிரதிநிதிகள் குழுவிற்கு பாதுகாப்பு வழங்குவதற்கான ஏற்பாடுகளை விடுதலைப் புலிகள் இயக்கம் மேற்கொண்டுள்ளது.

யாழ்ப்பாணம் வரும் நால்வர் கொண்ட குழுவிற்கு பிரதம மந்திரியின் செயலாளர் தலைமை தாங்கவுள்ளதும், இப் பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகள் தரப்பிலும் நால்வர் கலந்து கொள்ளவுள்ளதும் தெரிந்ததே.

### லண்டன்

தயாராக இல்லை என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தான் இரண்டு டாக்டர்களை ஒரு மாத காலத்திற்கு இங்கு பணிபுரிவதற்கு அனுப்புமாறு கேட்டதாகவும் அவர்கள் இது தொடர்பாக அரசி

# பயிலுநர் தாதி நியமனம். 49 பேர் பரீட்சையில் சித்தி

(யாழ்ப்பாணம்)

பயிலுநர் தாதியர்களை ஆட்சேர்ப்பதற்காக யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் தோற்றியோரில் 49 பேர் சித்தி அடைந்துள்ளனர். இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 24 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

மேற்படி நேர்முகப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை யாழ். போதனா மருத்துவமனை பணிப்பாளர் கொழும்பிலிருந்து எடுத்து வந்துள்ளார். சித்தியடைந்தவர்களது பெயர் விபரம் இங்கு தரப்பட்டுள்ளது. பெயர் குறிப்பிடப்பட்டவர்கள் தமது அனுமதி அட்டைகளை உடன் வந்து தம்மிடம் இருந்து பெற்றுக்கொள்ளுமாறு யாழ். போதனா மருத்துவமனை பணிப்பாளர் கேட்டுள்ளார்.

பெயர் விபரம் வருமாறு: செல்விகள் ஜே ஆர். மாலினி சண்டிலிப்பாய் ஏ. கலைச்செல்வி-மண்டைதீவு ஏ என். நந்தினி - கல்வியங்காடு, என். ஜெயதர்சினி-கரவெட்டி, கே. கலையரசி - கோப்பாய் வடக்கு, எஸ். மதிவதனி - பருத்தித்துறை. வி. அமிர்தாம்பிகை - மீசாலை கிழக்கு, வி. பத்மராணி - கைதடி, எஸ். சுசீலா - நாவாந்துறை, கே. றூபலதா - பருத்தித்துறை, வி. சுகிர்தா நல்லூர், கே. பரமசாமி - உடுப்பிட்டி, எம். யூலியஸ் பிரதான வீதி, யாழ்ப்பாணம் வி. நளாயினி-கரவெட்டி, எஸ். துவாரகா-புலோலி மேற்கு, சி. ஒறின் -கச்சேரி கிழக்கு யாழ்ப்பாணம், ஜி. வரதழகி - சுன்னாகம், ஜி. தர்மதர்சினி - மானிப்பாய், எஸ் ஏ. சண்முகநாதன் - இணுவில் கிழக்கு, எல். ஏ சி. சுமதி - யாழ்ப்பாணம், கே. வர்மி - தும்பளை கிழக்கு கே. முத்தையா - ஈச்சமோட்டை, சி. சொர்ணலதா - மருதனார்மடம், பி. சிறீகணேசன் - அல்வாய் தெற்கு வி. விஜ வடக்கு, வி. வேலினி - யாழ்ப்பாணம், என். ஜெயலலிதா - சங்கானை, கே. சுகித்தா - கல்வயல், சாவகச்சேரி, ரி. தனமதி - துன்னாலை வடக்கு, எஸ். விஜயகுலசிங்கம் - சுதுமலை வடக்கு, வி. திருமகள் - நவாலி வடக்கு, ஆர். வினித்தா - சண்டிலிப்பாய், வி. ஜெயராணி - மானிப்பாய், ஆர். ரஜனி - இணுவில் வீதி, மானிப்பாய், ஜி. ஜோதியபிரசாந்தி, பழம் வீதி, கந்தர் மடம், ரி. ராஜினி - துன்னாலை தெற்கு, பி. மதிவதனி கொக்குவில் கிழக்கு எஸ். வதனி - தும்பளை மேற்கு, வி. ஞானேஸ்வரி - மூளாய் வீதி, வட்டுக்கோட்டை, ஏ. வாசுகி - ஆராலி வடக்கு, ஏ. விஜயகுமார் - அல்வாய் மேற்கு, எஸ். புஷ்பமலர் - மட்டுவில் தெற்கு, எம். சிவச்செல்வி - ஆனைக்கோட்டை வீதி, யாழ்ப்பாணம், ஏ. ரி. பத்மதர்ஷி - கொட்டடி, யாழ்ப்பாணம், ஆர். ராஜினி - கோண்டாவில வடக்கு, இவர்களுடன் திரு என். றஞ்சன் - யாழ்ப்பாணம், திரு ஏ. ஏ. ஞானரட்ணம் - மானிப்பாய், திரு- எஸ்- ஜெயக்குமார் - புலோலி மேற்கு- (சி)

### சமாதானத்திற்கான

வேதான் முதன்முதலில் எமது அரசாங்கத்தின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் செல்ல திட்டமிட்டுள்ளனர். பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு அது வெற்றிகரமாக சென்றால் மட்டுமே யுத்தநிறுத்தம் ஏற்படும் என நம்புகின்றேன்.

யுத்தம் தொடர்ந்து நாட்டில் நடைபெறுகின்றது. இது போன்ற மோதல்கள் தொடர்ந்து நடைபெறும், அது தவிர்க்கமுடியாது என்றார். இன்னும் ஜனாதிபதியும் பாதுகாப்பு அமைச்சும் ஐக்கிய தேசிய கட்சியின்கீழ் இருப்பதால் எம்மிடம் இன்னும் கடுமையான அளவு அதிகா

## உயர் பொலிஸ் அதிகாரி உடந்தையாம்

(கொழும்பு)

கொழும்பு குற்றப் புலனாய்வு தலைமையகத்தின்உயரதிகாரி போல நடித்து வடக்கு, கிழக்கு பகுதிகளிலிருந்து கொழும்புசென்று தங்கியுள்ள தமிழ்இளைஞர்களிடம் பணம் பறிப்பதில் ஈடுபட்டிருந்த நபர் ஒருவர் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வடக்கிலிருந்து கொழும்பு வந்து மத்திய வீதியிலுள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்த விஸ்வநாதன் பிரபாகரன் என்பவரிடம் இந் நபர் 5000 ரூபாவை பெறும் போது லஞ்சத் திணைக்கள அதிகாரிகளால் பிடிக்கப்பட்டார்.

உயர் பதவி வகிக்கும் பொலிஸ் அதிகாரி ஒருவரின் உதவியுடன் இந் நபர் மிக நீண்டகாலமாக இந் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்ததாக தெரியவந்துள்ளது. சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரி இந் நபர் பொலிசாருக்கு தகவல் வழங்குபவர் எனத் தெரிவிக்கும் கடிதமொன்றை வழங்கியிருந்ததும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வாக்கு மூலமளிக்க வரும்படி சிரேஷ்ட பொலிஸ் அதிபருக்கும் லஞ்சத் தடுப்பு திணைக்களம் அழைப்பு விடுத்துள்ளது.

## திருமலையில்

சேனை, வெருகல், முகத்துவாரம் ஆகிய இடங்களைச் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினர்.

இதன்போது ஐந்துபிள்ளைகளின் தந்தையான துரையப்பா கனகசூரியம் (வயது47) என்பவரைக் கைது செய்து தமது ஆயுதத்தை கையில் கொடுத்து அதனைக்கொண்டு ஓடும்படி கூறினர். இதனை அடுத்து அந்த ஆயுதத்தை கொண்டு பொதுமகன் ஓடிய போது பின்புறத்தில் நின்று படையினர் சுட்டுவீழ்த்தினர். இதனை அடுத்து அவர் ஸ்தலத்திலேயே துடி துடித்துப் பலியானார்.

## மீனுக்கு

மீண்ட மேற்படி மீனவர் மகனுடன் கூடிய துப்பாக்கியையும், ரவைகளையும் கடற்புலிகளின் குருநகர் பகுதி பொறுப்பாளரிடம் ஒப்படைத்தார்.

இது பூநகரிப் பகுதியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா ராணுவத்தினரது துப்பாக்கியாக இருக்கலாமென நம்பப்படுகிறது. (21)

## 60 வயதுக்கு

சூதனன், பி. சோதிவேல் ஆகியோரே சேவையில் நிறுத்தப்படவுள்ளவர்களாவர். இவர்களில் ஐவர் எழுதுவினைஞர் என்றும் ஒருவர் தட்டெழுத்தாளர் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் யாழ். கச்சேரியில் பணியாற்றுபவர்களில் 55 வயதிற்கு மேற்பட்டவர்களின் விபரங்களையும் உடன் தமக்கு அனுப்பி வைக்குமாறு மாகாணசபையின் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெனான்டோ தமது அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளார். (தி), (இ)

# தமிழகத்திலிருந்து வந்த அகதிகள் வவுனியாவில் தடுத்து வைப்பு

## கொள்ளை நோய் பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

தமிழகத்திலிருந்து வவுனியா வந்து சேர்ந்த அகதிகளிற்கு முககவசம் அணிந்து இவர்களை கொள்ளை நோய் பரிசோதனைக்காக முகாம் ஒன்றில் தனிமைப்படுத்தி வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 30-ம் திகதி கப்பலில் திருகோணமலை துறைமுகத்திற்கு வந்து சேர்ந்த இந்த அகதி மக்களில் 800 பேர் இவ்வாறு தனிமைப்படுத்தி வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச்சேர்ந்தவர்கள் அடங்குவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

சுமார் ஒரு வாரம் வரையுமே அந்த நோயின் தொற்றும் தன்மை இருக்கும் எனவும் அதுவரையில் அவர்கள் கவனிக்கப்படவேண்டியநிலையில் உள்ளனர் எனவும் இவர்கள் அனைவருக்கும் சுவாசப் பாதுகாப்பு கவசம் அணிவிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (தி, இ)

## யாழ்

வுகளுக்காக பயன்படுத்தப்படி உள்ளதாகவும், திரு. சின்டமணி மேலும் நிதி திரட்ன யாழ். போதனா மருத்துவமனைக்கு தருவதாக உறுதியளித்துள்ளதாகவும் லண்டன் மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு திரும்பியுள்ள யாழ் போதனா மருத்துவமனை பணிப்பாளர் தெரிவித்தார்.

இதேவேளை திரு. ஏ. ரட்ணசிங்கம் என்பவரும் யாழ் போதனா மருத்துவமனை செலவுக்கென 50 ஆயிரம் ரூபாவை தந்துள்ளதாகவும் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (சி)

## அரச அதிபர்

மேலும் வவுனியா வந்து திரும்பும் அமைச்சர்கள், அதிகாரிகள் வவுனியா மாவட்டத்தில் இராணுவமற்ற பகுதிகளில்புனரமைப்பு, புனர்வாழ்வு நடவடிக்கைகள் தொடர்பாக பேசிவருவதாக அவர் தெரிவித்தார்.

வலிகாமக் கோட்ட கிராமிய மேம்பாட்டுத் திட்ட இணைப்பாளர்திரு. க. நாகரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் யாழ்மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ப. போல் திலகநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பரிசில்களையும் வழங்கவுள்ளார்

விற்கு பாதுகாப்பு வழங்குவதற்கான ஏற்பாடுகளை விடுதலைப் புலிகள் இயக்கம் மேற்கொண்டுள்ளது.

யாழ்ப்பாணம் வரும் நால்வர் கொண்ட குழுவிற்கு பிரதம மந்திரியின் செயலாளர் தலைமை தாங்கவுள்ளதும், இப் பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகள் தரப்பிலும் நால்வர் கலந்து கொள்ளவுள்ளதும் தெரிந்ததே.

## லண்டன்

தயாராக இல்லை என்றார்-

அவர் மேலும் தெரிவிக்கையில் தான் இரண்டு டாக்டர்களை ஒரு மாத காலத்திற்கு இங்கு பணிபுரிவதற்கு அனுப்புமாறு கேட்டதாகவும் அவர்கள் இது தொடர்பாக அரசிடமும் விடுதலைப்புலிகளிடமும் தாம் பேசி ஒழுங்கு செய்வதாகவும் அவர்கள் தமது சேவையை முடித்துக் கொண்டு திரும்பியதும் சுழற்சி முறையில் இரண்டோ அல்லது ஆறு மாதங்களோ இங்கு பணிபுரிவதற்கு தொடர்ந்து டாக்டர்களை அனுப்புமாறு கேட்டதற்கும் அதற்கும் அம் மாநாட்டில் சம்மதம் தெரிவிக்கப்படவில்லையெனவும் அவர் தெரிவித்தார்-

இதேவேளை யாழ் போதனா மருத்துவமனையில் உள்ள வசதிக் குறைவுகள் மற்றும் சகல விடயங்கள் தொடர்பாகவும் தான் தெரிவித்ததாகவும் தற்போது மிகவும் தேவையாக உள்ள வோட்டோகிறே அதாவது அறுவைச்சிகிச்சைக்கு பாவிக்கப்படும் உபகரணங்களை தொற்று நீக்குவதற்கு அவிக்கப்பாவிக்கப்படும் இயந்திரம் ஒன்றை தந்துதவுமாறு கேட்டதற்கு அந்தளவிற்கு தம்மிடம் தற்போது நிதியில்லையென மாநாட்டில் தெரிவிக்கப்பட்டதாகவும் கூறினார்-

## பற்றறி

றிகளை வாங்கிச் செல்பவர்களை இராணுவம் கட்டுப்படுத்தியுள்ளது-

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்தவின் தெளிவற்ற அறிவிப்பினால் பொதுமக்கள் குழப்பமடைந்துள்ளனர்-

இந்த நிலையை போக்கு முகமாக வவுனியா அரச அதிபர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை வேண்டியுள்ளார்-

அதில் ஒருவர் எந்த விதமானபற்றறி எத்தனை எடுத்துச் செல்லலாம் என்பதை தெளிவாக வரையறுக்கும்படி கேட்டுள்ளார்-

விரைவில் இதுபற்றிய புதிய அறிவிப்பு வெளிவரலாம் எனத் தெரிவிக்கப்பட்டது- (தி, இ)

தித்துறை, வி, அமிர்தாம்பிகை - மீசாலை கிழக்கு, வி, பத்மராணி - கைதடி, எஸ். சுசீலா - நாவாந்துறை, கே. றூபலதா - பருத்தித்துறை, வி, சுகிர்தா நல்லூர், கே. பரமசாமி - உடுப்பிட்டி, எம். யூலியஸ் பிரதான வீதி, யாழ்ப்பாணம் வி. நவாயினி- கரவெட்டி, எஸ். துவாரகா- புலோலி மேற்கு, சி.ெறாறின் -கச்சேரி கிழக்கு யாழ்ப்பாணம், ஜி. வரதழகி - சுன்னாகம், ஜி, தர்மதர்சினி - மானிப்பாய், எஸ் ஏ. சண்முகநாதன் - இணுவில் கிழக்கு, எல். ஏ சி. சுமதி - யாழ்ப்பாணம், கே. வர்மி - தும்பளை கிழக்கு கே. முத்தையா - ஈச்சமோட்டை, சி. சொர்ணலதா - மருதனார்மடம், பி, சிறீகணேசன்-அல்வாய் தெற்கு, வி. விஜயலஷ்மி - புலோலி மத்தி, எஸ், சத்தியதேவி - நீர்வேலி

## குடாநாட்டில்

திதப்பட்டதைத் தொடர்ந்து அதனைப் பெற்றுக் கொள்ள முடியது போனதாக சுட்டிக்காட்டினார்.

தொடர்ந்து அவர் கூறியதாவது மலத்தியோனிற்கு பதிலாக ஐகொன் (I con) மருந்தை வடபகுதிக்கு கொண்டு வருவது தொடர்பாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் மலேரியா தடுப்பு இயக்க இலங்கை பிரதிநிதியான திரு லயன் சிபார்சு செய்தால் மட்டுமே இம் மருந்து விநியோகிக்க முடியும் என அரசினால் தெரிவிக்கப்பட்டுள்ளது-

இதனால் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் வடபகுதிக்கு ஐகொன் நுளம்பு கொல்லி மருந்துகளை அனுப்பி வைப்பதற்கு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார் இதன் மூலமே யாழ், குடாநாட்டில் மக்களிற்கு வரப்போகும்- மலேரியா நோய் அபாயத்தை குறைக்க முடியும் இல்லாவிட்டால் மலேரியா நோய் யாழ்- குடாநாட்டில் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு ஏற்படலாம் எனவும் மேலும் அவர் தெரிவித்தார்-

(இ. நி)

## பொதுமக்கள்

பேசிய இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான வாசுதேவ நாணயக்கார கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், ரணவிலவில் நடைபெற்ற சம்பவம் குறித்து விசாரணை நடந்த அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு பாராட்டும் தெரிவித்தார்,

## சமாதானத்திற்கான

வேதான் முதன்முதலில் எமது அரசாங்கத்தின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் செல்ல திட்டமிட்டுள்ளனர். பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு அது வெற்றிகரமாக சென்றால் மட்டுமே யுத்தநிறுத்தம் ஏற்படும் என நம்புகின்றேன்.

யுத்தம் தொடர்ந்து நாட்டில் நடைபெறுகின்றது இது போன்ற மோதல்கள் தொடர்ந்து நடைபெறும், அது தவிர்க்கமுடியாது என்றார்- இன்னும் ஜனாதிபதியும் பாதுகாப்பு அமைச்சும் ஐக்கிய தேசிய கட்சியின்கீழ் இருப்பதால் எம்மிடம் இன்னும் கடுமையான அளவு அதிகாரம் கிடைக்கவில்லைஎன்றார்,

# தனிச் சிங்களத்தில் அனுமதி அட்டை

(யாழ்ப்பாணம்)

பயிலுநர் தாதியரை ஆட்சேர்ப்பதற்காக நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கு கொழும்பில் நடைபெறவுள்ள நேர்முகத் தேர்வுக்கான அனுமதி அட்டைகள் தனிச்சிங்களத்திலேயே வந்துள்ளன,

மேற்படி நேர்முகப் பரீட்சை வரும் 24 ஆம் திகதி காலை நடைபெறவுள்ளதாக அதில் குறிப்பிடப் பட்டுள்ளதாக தெரியவருகின்றது (சி)

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் அடித்துக் கொலை

மீரிகத்தென்ன பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர், கோஷ்டி ஒன்றினால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளனர்-

மாத்தளங்கஸ்வெவ என்னும் இடத்தில் நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றது. இதற்கான காரணம் தெரியவரவில்லை, இது குறித்து விசாரணையை வத்துகம பதில் நீதிவான் மேற்கொண்டுவருகிறார்-

## புனர்வாழ்வு நிதியில் குளறுபடி

# செட்டிகுளம் பிரதேச செயலர் மீது ஒழுக்காற்று விசாரணை

(யாழ்ப்பாணம்)

கடந்த காலத்தில் புனர்வாழ்வு, புனரமைப்பு, வீடமைப்பு நிதியின் பயன்பாடுகள் தொடர்பாக தெளிவான கணக்குகள் சமர்ப்பிக்கத் தவறியதனால் முன்னாள் செட்டிகுளப் பிரதேச செயலர் தேவி திருநாவுக்கரசு அரசினால் ஒழுக்காற்று விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளார்

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது இவர் உதவி அரசாங்க அதிபராக இருந்த வேளையில் இவரது பொறுப்பில் மேற்கொள்ளப்பட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு, வீடமைப்பு தொடர்பாக திட்டங்கள் பல நிறைவேற்றப்பட்டுள்ளன. இவற்றின்கணக்குகள் இவரின் உயர் அதிகாரிகளிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த வேளை அவை தெளிவின்மையாக இருப்பதாக கூறி இவர் ஒழுக்காற்று விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இவரின் தெளிவின்மையாக உள்ள கணக்குகள் தொடர்பில் 10 லட்சம் ரூபா குறைவு ஏற்பட்டதாலேயே இவர் விசாரணைக்குட்பட்டுள்ளதாக வவுனியா கச்சேரியின் உயர் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (இ)(தி)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994.10.07

### வெள்ளி இரவு

08. 01 -கலைமஞ்சரி- நிகழ்ச்சியில் முதலில் நூல் அறிமுகம் அறிமுகமாவது வைத்திய கலாநிதி ஆர் சீர் மாறன் எழுதிய ''சில நோய்களும் சில ஆலோசனைகளும்'' அதனை அடுத்து சிறுகதை -சத்தியமூர்த்தி எழுதிய 'எப்போது' சிறுகதையைத் தொடர்ந்து கவிதை-போராளி இளங்கதிர் எழுதிய ''காத்திருப்பு''

08. 25 -கணப்பொழுது -சி.கண்ணம்மா எழுதிய 'கப்டன் ஈழமாறன்'

08. 30 -செய்திகள்

08. 40 -அரசியல் அரங்கம் -வே.பாலகுமாரன் எழுதிய 'கொறகொல்லவளவில் குழிபறிப்புக்கள்'

08. 50 -வாத்திய கானங்கள்

### 1994.10.08

### சனி காலை

07. 02 -மாவீரவணக்கம்

07. 15 -நீங்கள் கேட்டவை

07. 30 -செய்திகள்

07. 35 -பத்திரிகைச் செய்திகள்

07. 40 -நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது-